நவயுக வாசகம்

முதல் படிவத்துக்கு

469 / 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MA... A

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.

S.R.S.

ரூ. 0—12—0

TB
031(6)
N49
...994

...ரமணிய பிள்ளை, திருநெல்வே...

நவயுக வாசகம்

மலர் ஆறு   முதல் படிவத்துக்கு

469
7-49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUN 1949
MADRAS

இராவ்சாகிப், கு. அருணாசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்து காலேஜ், திருநெல்வேலி.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர் :: :: திருநெல்வேலி

பதிப்புரிமை] [விலை ரூ. 0—10—0

முதற்பதிப்பு—1949

86994

TB
631(6)
N49

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

மா. அனந்தநாராயணன்,
எம். ஏ. (காண்டப்) ஐ. ஸி. எஸ்.
ஜில்லா நீதிபதி

திருநெல்வேலி,
2—3—49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

அணிந்துரை

நமது பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் முறைகளைக் குறித்து, இப்பொழுது பல ஆராய்ச்சிகள் நடை பெறுகின்றன. அவைகளின் அடிப்படையான நோக்கம் ஒன்றே. கல்வி பயிலும் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியருக்குத் தமிழ் இலக்கியத்திலும், அதன் செய்யுள் நடை, உரை நடை கற்பதிலும் ஓர் பேரவா, மகிழ்ச்சி, ஊற்றெனக் கற்பனைப் பெருக்கு, இவை ஏற்பட வேண்டும். தமிழாசிரியரையும் தமிழ்ப் பாட நேரத்தையும் வேம்பெனச் சிறுவர் கசந்த காலம் கனவாதல் வேண்டும். நாளைக்குக் கவிகளாகவும் தமிழ் இலக்கிய இளஞ் சூரியன்களாகவும் சிலராவது திகழ வேண்டுமென நாம் ஆசைப்பட்டால், இன்றைக்குப் பள்ளிகளில் தமிழ் மணம் கமழ்தல் அவசியமாகும்.

இப் பேர் இலட்சியம் நிறை வேறப் புத்தம் புதிய வாசக புத்தகங்கள் வெளிவரல் வேண்டும். சில நீதிச் செய்யுள்களையும், வில்லிபாரதம், கம்பராமாயணம், திருவிளையாடல் புராணம்போன்ற நூல்களின் சில பகுதிகளையும் கொண்டு செய்யுள் பாடங்களை நிரப்புவது வழக்கம். அவ்வாறே உரை நடைப் பகுதிகளும், சலிப்புத் தோன்றும் புள்ளிவிவரங்கள் [statistics] கூடிய கட்டுரைகளாகவும், அர்த்தமற்ற சொல்லடுக்கு மலிந்த வியாசங்களாகவும், மாணக்கரை அச்சம் உறுத்தி வந்தன. களிப்பு, ஆர்வம் இவை எழுப்பக் கூடிய புதிய ஜீவகளையுடன் கூடிய சில வாசக புத்தகங்கள் அண்மையிலேயே வெளிவந்துள்ளன. இது பற்றியே, விரிந்த மனப்பான்மையுடனும், புதிய நோக்கத்துடனும், தமிழ் வித்துவான் திரு, கு. அருணசலக் கவுண்டர் அவர்களால் இயற்றப் பெற்ற இந்த 'நவயுக வாசக புத்தகங்கள்,' நமது நல்வரவிற்கு மிகவும் உரியன.

இங்கு செய்யுள் பகுதிகளில், பாரதி, 'பாரதிதாசன்', தேசிக விநாயகம் பிள்ளை முதலிய நவீன கவிஞரின் நூல்களின் மட்டு

மின்றி, நாடோடி நடையில் இயற்றப்பெற்ற கொத்தமங்கலம் 'சுப்பு'வின் 'காந்தி மகான் கதை'யிலிருந்து கூட ஆசிரியர் பகுதிகளைத் தொடுத்திருக்கின்றார். இதன் உள் நோக்கம் யாதெனின், பாமரரின் 'கொச்சை' மொழியிலும், கற்பனை குன்றாத ஓர் இலக்கிய வகை சிருட்டிக்க இயலும் என்பதை விளக்குவதே. 'சுப்பு'வின் செய்யுள் நடை, மாணுக்கரால் பின்பற்ற இங்கு அமைந்ததன்று. இதைத் தமிழாசிரியர் பாடநேரத்தில் வற்புறுத்த வேண்டும். 'எமது கர்த்தகரின் இல்லத்தில் பல மாளிகைகள் உள்ளன' என்பது விவிலிய நூல். அதுபோல், இலக்கிய சிருட்டியிலும் எண்ணிறந்த பலதிறப்பட்ட நடைகளில் அமைந்த கற்பனு சக்தியின் புதுமைகளும் ஒளி வீசக் கூடும். இது நிற்க.

ஒரு மொழியின் தனிச் சிறப்புக்குக் காரணமான குணங்களை, இனிமை, எளிமை, தெளிவு, உறுதி, அல்லது வன்மை, யெனச் சுருங்கக் கூறலாம். இவையாவும், தமிழ்மொழியிலும், தமிழ் இலக்கியத்திலும், சோழநாட்டுச் செந்நெல்வளமென மலிந்து கிடக்கின்றன. தமிழ்ப்புலவர், 'துறைத் தீந்தமிழ்' என்றும் 'இருந்தமிழே உன்னுலிருந்தேன்' என்றும் பலவகையாகப் போற்றியது, வெறும் மரபன்று. இதுபற்றியே நவீனப் புலவரும் 'இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்' என்று அழகாகப் பாடுகிறுர். உதாரணத்திற்குத் தேடவே வேண்டாம். 'ஆறுவது சினம்' என்ற ஔவையாரின் சிறு சொல்லை ஆழ்ந்து நோக்கின், நான் மேலேகூறிய குணங்கள் விளங்கும். தமிழில் தோய்ந்த நா வன்பினுலும், கற்பனையின் பெருமையினுலு மன்றோ அவர்,

> 'தூற்றுபத் தாயிரம் பொன்பெறினும் நூற்சேலை
> நாற்றிங்கள் தன்னில் நைந்து போம் * * * *
> என்றும் கிழியா (து) என்பாட்டு'

என்று பாடினுர்? இங்கு செய்யுள் பகுதிகளிலுள்ள தனிப்பாடல்களையும், 'தலையே! நீ வணங்காய்' 'சீதக்கடலுள் அமுதன்ன தேவகி' 'மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி' போன்ற சைவ வைணவப் பெரியாரின் துதிகளையும் விலையற்ற ரத்தினங்களாக நாம் மதிக்கவேண்டும். தமிழில் செய்யுள் பாடங்களை என்றும் இசை

யுடன் பயிலவேண்டும். 'மாணிக்கங்கட்டி' என்ற தாலாட்டை நீலாம்பரி ராகத்தில் ஓர்எளிய தாளக்கட்டில் அமைத்துப் பாடக் கேட்ட எவரும், வேறாக அதைக் கேட்க விரும்பார்.

இங்குள்ள வசன நடைப்பாடங்கள், நமது சிறுவர் சிறுமியரின் உள்ள இயல்புகளையும் தமிழ்நாட்டின் தனிமரபையும் நோக்கத்தில் கொண்டு, செவ்வனே இயற்றப் பெற்றன. 'பரீட்சை எதற்கு' என்ற உரையாடல் பாடத்தையும், 'நம்பியாண்டார் நம்பி' 'தேவாரங்களைத் தேடியது' 'வென்றிமாலை' போன்ற பகுதிகளையும் உதாரணங்களாகக் கூறலாம். இறுதியில் குறிப்பிட்ட பாடம், திருநெல்வேலிச் சீமை மக்களுக்குத் தனிச் சுவையுடன் உருசிக்கும். பெரியவர்கூட, முன்னறியாத சில அருமையான செய்திகளை இந்த வாசகபுத்தகங்களிலிருந்து அறிந்து கொள்ளக்கூடும். 'அயிர்' என்ற சொல்லின் பொருளும் 'மிளகா'யின் காரணமும் நம்முள் பலரும் அறிந்தவையா? எல்லாவற்றிலும் மகிழ்ச்சிக்குக் காரணமாவது 'இரட்டைப்புலவர்' என்றபாடம். ஏனெனில், கந்தைத்துணியைக் குளத்தில் அலசி இழக்கவிருந்த குருட்டுப் புலவர்,

—'எண்ணுதீர்,
இக்கலிங்கம் போனால் என்? ஏகலிங்கம் மாமதுரைச்
சோக்கலிங்கம் உண்டேதுணை'

என்று வெண்பாவை முடித்துப்பாடிய சாதுரியமும் பத்திமையும் தமிழ்மரபிற்கே உரியன.

மா. அனந்தநாராயணன்

பொருளடக்கம்

செய்யுள்

எண்		வரி		பக்கம்
1.	வாழ்த்து	42	...	1
2.	வருணனை	30	...	5
3.	தனிப்பாடல்	40	...	7
4.	கதைப்பகுதி	200	...	9
5.	அறநெறி	52	...	19
		364		

உரைநடை

1.	எஸ். இராதாகிருஷ்ணன்	...	23
2.	நமது உணவுப்பொருள்களிலே சில	...	29
3.	நம்பியாண்டார் நம்பி	...	35
4.	சென்னை	...	39
5.	தேவாரங்களைத் தேடியது	...	45
6.	இந்தியாவும் பர்மாவும்	...	49
7.	சேக்கிழார் பெரிய புராணம் பாடியது	...	53
8.	மின்சாரம்	...	57
9.	திருமா பத்தினி	...	61
10.	ஏசுநாதரும் கிறிஸ்தவமும்	...	67
11.	நூல் நிலையம்	...	71
12.	குமர குருபரர்	...	75
13.	மைசூர் ஐதர் அலி	...	81
14.	அதிவீரனும் வரதுங்கனும்	...	85
15.	வைர அட்டிகை	...	89
16.	பஞ்ச தந்திரக் கதைகள்	...	95



தில்லை

[பக்கம் 45

நவயுக வாசகம்

(ஆறும் புத்தகம்—முதல் படிவத்திற்கு)

1. வாழ்த்து

ஓம் சக்தி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

கணபதி ராயன்—அவன் இரு
காலைப் பிடித் திடுவோம்
குணம் உயர்ந்திடவே—விடுதலை
கூடி மகிழ்ந் திடவே—ஓம் சக்தி

சொல்லுக் கடங்காவே—பரா சக்தி
சூரத் தனங்கள் எல்லாம்—
வல்லமை தந்திடுவாள்—பரா சக்தி
வாழி என்றே துதிப்போம்—ஓம் சக்தி

வெற்றி வடி வேலன்—அவனுடைய
வீரத்தினைப் புகழ் வோம்
சுற்றி நில் லாதே போ—பகையே
துள்ளி வருகுது வேல்—ஓம் சக்தி

—பாரதி

காலை வணக்கம்

வாரும்; வாரும், தெய்வ வடிவேல் முருகரே!
வள்ளி மணாளரே! வாரும்;
புள்ளி மயிலோரே! வாரும்.

சங்கம் ஒலித்தது; தாழ்கடல் விம்மிற்று;
சண்முக நாதரே! வாரும்;
உண்மை விநோதரே! வாரும்.

பொழுது விடிந்தது; பொற்கோழி கூவிற்று;
பொன்னான வேலரே! வாரும்;
மின்னார்முந் நூலரே! வாரும்.

காகம் கரைந்தது; காலையும் ஆயிற்று
கண்ணுதல் சேயரே! வாரும்;
ஒண்ணுதல் நேயரே! வாரும்.

செங்கதிர் தோன்றிற்று; தேவர்கள் சூழ்ந்தனர்;
செங்கல்வ ராயரே! வாரும்;
எங்குரு நாதரே! வாரும்.

வீணை முரன்றது; வேதியர் சூழ்ந்தனர்;
வேலா யுதத் தோரே! வாரும்;
காலா யுதத் தோரே! வாரும்.

—இராமலிங்க சுவாமிகள்

எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது!—எமக்(கு)
இன்பந் தரும்படி வாய்த்த நல் லமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு!—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவைஉள்ள சொல்லை!—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை!
நனிஉண்டு நனிஉண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்குமேதமிழ் மீதில்!
இனிமைத் தமிழ் மொழி எமது!

—பாரதி தாசன்

உற்றார் ஆர் உளரோ?

தலையே! நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து,
தலை யாலே பலிதேரும்
தலைவனைத்
தலையே! நீ வணங்காய்

கண்காள்! காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும்
பிரான் தன்னைக்
கண்காள்! காண்மின்களோ.

செவிகாள்! கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவளம்
எரிபோல் மேனிப் பிரான் திறம்
எப்போதும்
செவிகாள்! கேண்மின்களோ.

நெஞ்சே! நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின் மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே! நீ நினையாய்

உற்றார் ஆர் உளரோ?—உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத் துறை கூத்தன் அல்லால்
நமக்கு,
உற்றார் ஆர் உளரோ?

—நாவுக்கரசர்

கலை மகள்

படிக நிறமும் பவளச் செவ் வாயும்
கடிகமழ் பூந் தாமரை போல் கையும்—துடி இடையும்
அல்லும் பகலும் அனவரத மும் துதித்தால்
கல்லும் சொல் லாதோ கவி.

—கம்பர்

வந்து காணீர் !

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி, பிடித்துச் சுவைத் துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே ;
பவள வாயீர் ! வந்து காணீரே.

மைத்தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுபிள்ளை
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங் கள் வந்து காணீரே ;
காரிகை யீர் ! வந்து காணீரே.

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து நீ ராட்டும் இந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா காணீரே ;
மொய் குழ லீர் ! வந்து காணிரே.

—பெரியாழ்வார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

2. வருணனை

புயல்

மனைவி : காற்றடிக்குது, கடல் குமுறுது ;
கண்ணை விழிப்பாய், நாயகனே.
தூற்றல் கதவு சாளரம் எல்லாம்
தொளைத் தடிக்குது பள்ளியிலே.

கணவன் : வானம் சினந்தது, வையம் நடுங்குது
வாழி பரா சக்தி காத்திடவே ;
தீனக் குழந்தைகள் துன்பப் படா திங்கு
தேவி, அருள்செய்ய வேண்டுகின்றோம்.

மனைவி : நேற்றிருந் தோம்அந்த வீட்டினிலே, இந்த
நேரம் இருந்தால் என் படுவோம் ?
காற்றென வந்தது கூற்றம்இங்கே ; நம்மைக்
காத்தது தெய்வ வலிமை அன்றோ ?

—பாரதி

சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா—ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா—இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா.
சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா—பின்னர்
செம்பொற் குடம் போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராய்அம்மா—ஈதோர்
இந்திர சாலமோ கூறுய்அம்மா.
வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா—உடல்
வாட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா—கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.
பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தாய் உருண்டு திரண்டதுவோ ?
மேலாய் உலகில் ஒளி செயவே—ஈசன்
விண்ணகம் இட்ட விளக்கிதுவோ ?

—தேசிக விநாயகம் பிள்ளை.

சிரிப்பு

ஆனந்த மான சிரிப்பு—எங்கள்
அருமை மணியின் சிரிப்பு.
ஈனமில்லாத சிரிப்பு—எங்கள்
இன்ப மணியின் சிரிப்பு.
கானம் நிலவும் சிரிப்பு—எங்கள்
கண்ணின் மணியின் சிரிப்பு.
வானத்துத் தேவர் மகிழும்—எங்கள்
வாழ்வு மணியின் சிரிப்பு.
துன்பங்கள் நீங்கும் சிரிப்பு—உளத்
துயரங்கள் போக்கும் சிரிப்பு.
இன்பங்கள் ஆக்கும் சிரிப்பு—எங்கள்
இதய மணியின் சிரிப்பு.
முன்பு தவங்கள் செய்துற்ற—எங்கள்
முத்து மணியின் சிரிப்பு.
வன்புக ளற்ற சிரிப்பு—எங்கள்
வைர மணியின் சிரிப்பு.
கள்ளம் கபடற்ற சிரிப்பு—எங்கள்
காதல் மணியின் சிரிப்பு.
விள்ளற் கரிய சிரிப்பு—எங்கள்
வீட்டு மணியின் சிரிப்பு.
துள்ளிக் குதிக்கும் சிரிப்பு—எங்கள்
ஜோதி மணியின் சிரிப்பு.
வெள்ளத்தைப் போலின்பம் பொங்கும்—எங்கள்
வேந்தன் மணியின் சிரிப்பு.
நிலவொளி செய்யும் சிரிப்பு—எங்கள்
நீல மணியின் சிரிப்பு.
புலவர்கள் போற்றும் சிரிப்பு—எங்கள்
புதிய மணியின் சிரிப்பு.
கலகல என்ற சிரிப்பு—எங்கள்
கட்டி மணியின் சிரிப்பு.
நலமிகும் தெய்வச் சிரிப்பு—எந்த
நாளும் வாழிய சிரிப்பு.

—பரலி. சு. நெல்லையப்பர்.

3. தனிப்பாடல்

ஔவை ஆடு கேட்டது :

வாதவர்கோன் பின்னை என்றான் ; வத்தவர்கோன் நாளை என்றான்
யாதவர்கோன் யாதொன்றும் இல்லை என்றான் ; ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும், வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் இல்லை இனிது.

ஔவை பூதனைப் போற்றியது :

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரஎன் றேபுளித்த மோரும்—பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோறு
எல்லா உலகும் பெறும்.

திருவாரூர் நாகராசநம்பி செய்த குற்றம்
கிள்ளைக்குச் சொல்லுவித்துத் தலத்தார்
இராயருக்கு அறிவித்தது :

முன்னாள் அறுபத்து மூவர் இருந் தார் ; அவரில்
இந்நாள் இரண்டுபேர் ஏகினர்—கன்னான்
நருக்குகின்றான் ; விற்றுவிட்ட நாகராச நம்பி
இருக்கின்றான், கிருட்டிண ரா யா !

புலமைப் பொலிவு :

காசுக்குக் கம்பன் ; கருணைக்(கு) அருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆவனே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் ; உவக்கப் புகழேந்தி
கூழுக்(கு) இங்(கு) ஔவை எனக் கூறு.

சத்திரத்துச் சாப்பாட்டைக் காளமேகம் இகழ்ந்தது :

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ; ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

தம்மை இகழ்ந்த ஊர் அழியக் காளமேகம் வசை பாடியது :

கோளர் இருக்கும்ஊர் ; கோள்கரவு கற்ற ஊர்
காளைகளாய் நின்று கதறும் ஊர்—நாளையே
விண்மாரி அற்று, வெளுத்து மிகக் கறுத்து
மண்மரி பெய்க இந்த வான்.

அனுபவ ஞானம்

சித்திரமும் கைப்பழக்கம் ; செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ; நித்தம்
நடையும் நடைப் பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

விரகர் இருவர் புகழ்வாரும் வேண்டும் ;
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் ;—அரையிலொரு
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் ; அவர் கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுமாய்,—ஊருக்குச்
சென்றுவர அணித்தாய்ச், செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

—ஔவையார்

போலி வேடம்

காதிலே திருவேடம் ; கையிலே செபமாலை ;
கழுத்தின் மார்பின்

மீதிலே தாழ்வடங்கள் ; மனத்திலோ கரவடமாம்
வேடம் ஆமோ ?

வாதிலே அயன்தேடும் தண்டலைநீள் நெறியாரே !
மனிதர் காணும்

போதிலே மவுனம் இராப் போதிலே ருத்ராக்கப்
பூனை தானே.

—தண்டலையர் சதகம்

4. கதைப்பகுதி

1. காந்திமகான் கதை

தென்னுப்பிரிக்கா தேசத்திலே

ஆப்பிரிக்காவில் உள்ள(து) அய்யா
அப்துல் கம்பேனி

அங்கே நிறையத் தொழிலும் துறையும்
அவுங்களுக்கே உண்டு.

அவுங்க தரப்பிலே கேசுக்காக
ஆசராகும் வக்கீல்

அத்தனை பேருக்கும் கட்டுப் படிக்க
ஆளு வேணும் என்றே,

ஆப்பிரிக்காவுக்குக் காந்தியைக் கூட்டி
அனுப்ப வேணும் என்றுர்.

அண்ணந்தம்பியும் ஒத்துப் பேசி
ஐயன் புறப் பட்டார்.

ஆப்பிரிக்காவில் நெறத்துவேசம்
ஆட்டம் போட்டதுபார்;

அந்தஊரிலே கோரட்டு தன்னில்
ஐயன் போனதுமே.

இர்ண்டாம் வகுப்பு வண்டியி லொருநாள்
இருண்ட வேளைதனிலே,

ஈறும் பல்லும் விட விடக்குது
இருளும் பனிக் கூதல்;

காசு கொடுத்தே டிக்கட்டு வாங்கின
கருப்புக் காந்தி தன்னை,

கையைப் புடிச்சே இழுத்துத் தள்ளினுன்
காவல் வெள்ளை போலீஸ்;

கருப்புப் பூடுசால் எட்டி உதச்சான்
காந்தி மகாத்மா மேல்;

கட்டின தலைப்பா தட்டிவிட் டானும்
காந்தி மகாத்மா மேல் ;

சாந்தம் பொங்கி வழியுது ஐயா
காந்தி மகானுக்கு.

சனங்களைக் கண்டு கருணை பெருகுது
காந்தி மகானுக்கு.

வெள்ளைக் காரர் அம்பட்டன் மயிர்
வெட்ட மாட்ட முண்ணுன் ;

வேட்டி வெளுக்கும் வண்ணுன் சலவை
நீட்ட மாட்ட முண்ணுன் ;

தானே சலவை செஞ்சிக் கிட்டாராம்
சாந்த மகாத்மாஜீ.

தானே சவரமும் செஞ்சிக் கிட்டாராம்
காந்தி மகாத்மாஜீ.

கரப்பாம் பூச்சி கடிச்சாப் போலே
கிராப்பு வெட்டிக் கிட்டார் ;

கழுத்துப் பட்டையில் மாவைத் தடவி
கலந்து ஒட்டிக் கிட்டார் ;

கோரட்டுக் குள்ளே கூட்டம் பார்த்துக்
குலுங்கச் சிரிச் சதுவாம் ;

கொள்கைக்காக இம்மியும் விட்டுக்
கொடுக்க மாட்ட முன்ஞர்.

போயரு யுத்தம் வந்து சேரவே
பொது சன சேவை செய்தார்.

குண்டு மாரியில் இருந்து கொண்டே
தொண்டு செய்து வந்தார்.

ஆப்பிரிக்காவின் வெள்ளையன் மட்டும்
அசைஞ்சு கொடுத்தானே ?

அதனுலென்ன கருப்புக் காந்தியும்
அசஞ்சு கொடுத்தாரோ ?

சாத்து மீகப்போ ராட்டஞ் செய்வதாய்
சவாலு விட்டா ராம் ;

சட்ட மறுப்புச் செய்து கொண்டே
சனங்கள் கட்சி சொன்ஞர்.

எத்தனேயோதரம் 'செயிலிலே' வச்சும்
எண்ணம் சாக வில்லே ;

இரக்கம் இல்லாமல் அடிச்சுப் போட்டும்
இயக்கம் போக வில்லே ;

இந்தப் படியே இருபது வருசம்
இருந்து பாடு பட்டு,

இந்தியனுக்கு எதிரிடையாக
இருந்த சட்டம் எல்லாம்,

கருப்பன் வெள்ளேயன் இருவரும் ஒத்தைக்
காயிதத்தின் மேலே,

கைநாட்டிட்டு நிறத்துவேசம்
கதறியோடச் செய்தார்.

அகிம்சா தத்துவ போதனே செய்ய
ஐயன் காந்திக்கு

ஆப்பிரிக் காவே அடிப்படை ஆகி
அஸ்தி வாரம் ஆச்சு.

—கொத்தமங்கலம் 'சுப்பு'.

2. புல்

[புல் தனது சரிதத்தைத் தானே கூறுகின்றது.]

பசும்புல் என் பெயர். பட்ட பாடெல்லாம்
ஒருபெருங் கதையாம், உரைப்பதும் எளிதோ ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன், அங்குள்ள மனிதரோ கொடியர்.
தத்தம் மக்களும் தாமுமே என்றும்
பெற்றுப் பெருகிப் பெருங்குடி யாகி
வாழக் கருதுவர், வகுத்திட லென் ? அவர்
வாயிற் படியில் வாடி வணங்கி
வயிற்றிற் கின்றிநா வறண்டு ' தண்ணீர்
தண்ணீர் ' என்று தவித்துத் தவித்து
வாணு ளெல்லாம் வருந்தி நொந்தேன்.
குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்.
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான்படும்
வருத்தமும் வாட்டமும் கண்டவ் வானம்
அளித்த தமுதம் ; ஆர வுண்டனன்.
விசும்பில் துளிகள் வீழி னல்லால்
பசும்புல் தலைஇப் பாரிற் காணுமோ ?
கேளீர் கதையினும் : கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வும் நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன். சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது. பார்த்தனர் பாவிகள்.
தரிக்கிலர் உள்ளம். தழைக்கும் தலையைக்
காலால் மிதித்தனர் ; கழுத்தையும் அறுத்தனர்.
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்.
படர்ந்த இடமெல்லாம் பாழே யாக்கினர்.
இருந்த இடமும் இல்லா தியற்றினர்.
உயிரும் உடலும் குறுகி, ஒருசிறு
வேராய்த் தரையுள் வெகுநா ளாக
ஒளித்திருந் தேன். அவ் வுறைவிடந் தேடி,
வான்மழைத் தோழன் வந்தெனைக் கண்டு,

'அறிவிலி போலும் நீ! அஞ்சேல் அஞ்சேல்.
யாவையும் காப்பவன் ஈசன்' என்றெல்லாம்
தேற்றிய மொழியெனக் கூற்றமும் உறுதியும்
பெரிதும் அளித்தது. பெயர்த்தும் மெலமெலத்
தலையெடுத் தேன்; அதைத் தறுகணர் கண்டு
பிடித்தனர் வெட்டினர் பிடுங்கி எறிந்தனர்;
சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டினர்;
துடைப்பங் கொண்டு துரத்தி யடித்தனர்.
யாவும் சகித்தங் கிருந்தனன். என்செய்வேன்?
தளர்ச்சி யுற்றிலேன். தகும்நற் காலம்
வருமெனச் சற்று மறைந்து தங்கினேன்.
ஐவரை விடயான் அதிபல சாலியோ?
மறைந்து சின்னாள் வாழுங் காலை,
ஒருதினம் வீட்டில் உள்ளார் அனைவரும்
உறவினர் இருக்கும் ஒரூர் சென்றனர்.
வெகுநா ளாகியும் மீண்டிலர். யானும்,
இதுவே தருணம் என்று நினைத்து,
விரைவின் வளர்ந்து, விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச், சார்விட மெங்கும்
படர்ந்து பற்றிப் பல்கிளை யாகி,
வாய்த்தஇவ் வித்தாம் மக்களைப் பெற்று
வாழ்ந்திருக்கின்றேன். மற்றவர் வாழும்
வீட்டையும் இடித்து விடும்வலி இந்நாள்
எனக்குண் டாயினும், இழிவென விடுத்தேன்.
செய்பிழை யாவும் தெரிந்து பொறுத்தேன்.
பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார்,
எனக்குச் சொந்தம் இல்லா இடமெதாம்?
புல்லே யாயினும் புல்லிய குணமிலை.
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்.
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்.
முயற்சி கைவிடேன். முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே.

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

3. மாதாவும் மகவும்

‘துணிவுடைச் சிறுநர! சொல்லுதி இன்னே.
உன்னுற் பெறலாம் ஊதியம் என்னே?
என்பயன் நின்னுல் என்பதறியேன்?
சொல்ல வல்லையேல், சொல்லுதி ஒல்லே.
தாமரை இதழெனத் தயங்குகை விரலாய்!
திங்களைச் சூழ்ந்து திகழ்கரு முகில்போல்
சுந்தர வதனஞ் சூழ்ந்து தொங்கி
இருண்டு சுருண்டெழில் எறிக்குங் குஞ்சியாய்!
ஒருநாள் போல உறுபல நாளும்நீ
செய்சிறு குறும்புக் கெய்தள விலையால்;
யாவது நின்னுல் ஆவ தென்ன
உன்னுற் சொல்ல ஒல்லும் என்னில்,
நன்குசிந் தித்து நவிலுதி வல்லே’
என்றேன்; என்றலும், இருசிற் றடிகள்
குறுகுறு நடந்தெனைக் குறுகிஎன் மடிமேல்
உற்றன; மிகுகளி ஒளிர்எழில் இளவிழி
கூர்ந்தெனை நோக்கின; குறுநகை அரும்பின;
இருசிறு செங்கைகள் என்னிரு கதுப்பினை
இறுகுறப் பற்றிஈர்த் தினிதின் அணைத்தன;
‘உனது வினவுக் குறுவிடை கேட்டி;
அன்னய்! யான்உனக் கன்பு செய்தலே
என்னு லாம் பயன்’ எனல் போல்
பவளவாய் திறந்ததென் பாக்கியந் தானே.

—ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. சி.

4. சோம்பேறிப் பையன்

ஊரும் எறும்பே ! ஒருமணி நேரம்
ஒளித்து விளையாட வாராயோ ?
நேரமில்லை ; மழைக்காலம் நெருங்குமுன்
நெல்மணி சேர்த்திட வேண்டும் அப்பா.

மாமலர்தோறும் திரியும் வண்டே !—பாண்டி
வட்டாட என்கூட வாராயோ ?
ஆமிந்த வேளை அலர்மலர் மூடுமுன்
அள்ளித்தேன் சேர்த்திட வேண்டும் அப்பா.

காகமே ! கால்மணிநேரம் என்னோடு
களித்து விளையாட வாராயோ ?
ஆகா ! நேரம்எனக் கில்லை அப்பா—மழைக்
காகும் கூடுகட்ட வேண்டும் அப்பா

ஓடுசிற்றுறே ! ஒரு நிமிஷம் விளை
யாட உவந்துநீ வாராயோ ?
நாடு செழிக்கநன் னீர்விட வேண்டும் ; என்
நண்பனே ! போ தெனக் கில்லைஅப்பா.

வானத் துலாவிடும் சூரியனே ! கீழே
வந்துவிளை யாடவா ராயோ ?
போனகம் கொள்ளவும் நேரமில்லை ; புத்தி
கெட்ட பையா வரமாட்டேன் அப்பா.

ஓகோ இதுஎன்ன ஒருவரும் என்கூட
ஓடி விளையாட வாராரோ ?
ஆகாத பிள்ளையோ நான்மட்டும் அந்தப்பேர்
அண்டாமல் பார்த்திட வேண்டும் இனி.

—எஸ். முத்துசாமிப் பிள்ளை

5. கெடுவான் கேடு நினைப்பான்

வளமுறு மகத நாட்டில்,
சண்பக வனத்தில் மன்னி,
உளமகிழ் கொடியும், மானும்
உறவு கொண்டிருக்கும் காலைக்
கொளும் இளம் புல்லால் மான் மெய்
கொழுத்திடும் இயல்பு நோக்கிக்
களமிகு நரி யொன் றுள்ளக்
கபடத்தாற் கொல்ல எண்ணி,
துன்னிய மான்பாற் சென்(று) ‘ என்
நண்ப ! நீ சுகமே ? என்ன
அன்னதைக் கேட்டு, ‘ நீ யார் ?’
என்றலும், ‘ அறியோய் ! யான் இக்
கொன் னுறு வனத்தில் வாழ்வேன் ;
குத்திர புத்தி என் பேர் ;
பன்னிய கிளைஒன் றில்லாப்
பாவியாய்த் திரிந்து நின்றேன்.
‘ இன்றுனைக் கண்டு நெஞ்சத்
தெய்தினேன் உவகை ; இப்போ(து)
உன்றிருப் பணி செய்(து) உன்பால்
உற்றிட விழைந்தேன் ? ’ என்ன ;
நன்றென இசைந் திரண்டும்
நண்ணு சண்பகத்தின் கீழே
துன்றின ; அதன் மேல் உற்ற
சுபுத்தியாம் காகம் கண்டே,
‘ மித்திர மானே ! நின்பால்
மேவினுன் யாவன் ? ’ என்னப் ;
‘ பத்தியிற் சிநேகஞ் செய்யப்
படர்ந்த சம்புகன் ’ என்றுேத ;
‘ அத்தகை யான்றன் செய்கை
குலத் தொடும் ஆரா யாமல்
மத்திய திட நாம் ஈகை
தகாதது வழங்கல் செய்தால் ’

என்னலும், அந்நரி அது கேட்(டு)
‘இவற்குநீ! நட்பு செயும்
முன்னமே நின் இயல்பு
தெரியுமோ? மொழிதி!’ என்னப்,
பின்னர் மான் காகத்தின்
மனம் ஒருமை பெறப் புரியத்
துன்னிய இம் மூன்றும் அருந்
தொடர்பு கொடு நின்றனவே.

ஆயதினந்தனில், ஒரு நாள்
மானைப் பார்த்(து) அந்த நரி
‘மேயும் இளம் பயிர் உனக்கு
வேண்டு மட்டும் அருந்துமிடம்
நீ அறிதி!’ எனக் காட்ட,
அன்று முதல் நெடிய மான்
போய், அதனை மேய்ந்து, பசி
போக்கி, இருந்திட்டதுவே.

பயிரிட்டோன், இது கண்டு
வலை கட்டப் பாராது
செயிர் இட்ட மான் வழக்கப்
படி சென்று சிக்குண்(டு) ‘என்
உயிரிட்ட நண்பன் அலா(து)
உயச் செய்வார் யார்?’ என்று,
தயிரிட்டமத் தென்னத்
தனது மனம் சுழல் காலை,

வன்பினெடு நரி கண்(டு), ‘இன்று
எண்ணம் எல்லாம் வாய்த்ததினித்
துன்பற இன்(று) இதன் எலும்பைத்
தசை யினெடு சுவைத் துண்டே
இன்பி னெடும் உறலாம்’ என்(று)
எண்ணி வாளா திருப்ப
அன்று றுமான் கண்(டு) ‘இங்கென்
தனை விடுவி!’ என அறைய,

நரியது கேட்(டு) ‘ இன்றைக்கோர்
விரத தினம் ; நாளை எனில்
பரிகரிப்பன் நினது தளை
பகர் தரு தோல் ஆதலினுல் ;
பிரியம் உறு நட்பினர்க் கென்
பிராணனையும் விட வல்லேன் ;
தெரிகிலையோ நீ ! ’ என்றுேர்
செடியின் மறைந் திருந்ததுவே.

காகமது மித்திரனைக்
காணுமல், அன்றிரவு
சோகமுற் றெங்கணுந் தேடித்
தோல் வலையிற் பட்டதறிந்(து),
‘ ஊக முடை மானே ! இங்(கு)
உற்றுழல்வ(து) என் ? ’ எனலும்,
‘ நிகழரும்உரை கேளா
மையின் வந்த நிலை இதுவே ’ ;

நண்பு கொண்ட நரி எங்கே ? ’
என, ‘ எனது நல்லிறைச்சி
உண்பதற்கோர் செடியின் கீழ்
ஒளித்திருந்தது ’ எனப் புகல
பண்புறுகா காகம் கேட்டுப்
‘ பயிர்க் கதிபன் உறுகின்றுன் ;
மண் படும் ஆருயிர் கழிந்த
வடிவம் போல் உறு(க), ’ எனலும்,

நண்ணிய அப் பயிர்க் கதிபன்,
உயிர் கழிந்த நௌவி என
எண்ணி இதை இழுத் தங்கு
வலை கட்டும் எல்வை யினில்,
மண்ணின் விரைந் தோடுதலும்,
தண்டம் அவன் வலிந் தெறியத்
திண்ணிய தோர் செடியின் கீழ்
இருந்த நரி சிதைந்ததுவே.

—வீரமார்த்தாண்டத் தேவர்.

5. அறநெறி

துர்ச்சனர்

ஈக்கு விடம் தலையில் எய்தும் ; இரும் தேளுக்கு
வாய்த விடம் கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கண் அர வுக்கு விடம் பல்லளவே ; துர்ச்சனருக்கு,
அங்கம்முழு தும் விடமே ஆம்.

துர்ச்சனரும் பாம்பும் துலைஒக் கினும், பாம்பு
துர்ச்சனரை ஒக்குமோ தோகையே !—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலும் இணங்காரே ; பாம்பு மணி
மந்திரத்தால் ஆகுமே வசம்.

கொம்(பு) உளதற்(கு) ஐந்து ; குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கிணர்தம் கண்ணில் தெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி.

—நீதிவெண்பா

வயிற்றுப் பிழைப்பு

சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்,—போவிப்பம்
பாழின் உடம்பை ; வயிற்றின் கொடுமையால்,
நாழி அரிசிக்கே நாம்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே ! கேளுங்கள்—கூடுவிட் டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) ஆரே அனுபவிப்பார் ?
பாவிகாள் ! அந்தப் பணம்.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை, பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை ;—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும்.

—நல்வழி

இனியன

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே ;
தானம் அழியாமை தான் அடங்கி வாழ்வினிதே ;
ஊனம் ஒன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது.

யானை உடைய படை காண்டல் மிக இனிதே ;
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்காமை முன் இனிதே ;
கான்யாற்(று) அடைகரை ஊர் இனி(து) ; அங்கினிதே
மானம் உடையார் மதிப்பு.

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே ;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே ;
எட்டுணை யானும் இரவாது, தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

கயவரைக் கை இகந்து வாழ்தல் இனிதே ;
உயர்வுள்ள ஊக்கம் பிறத்தல் இனிதே ;
எளியர் இவர் என்று இகழ்ந்(து) உரையார் ஆசி
ஒளிபட வாழ்தல் இனிது.

—இனியவை நாற்பது.

இன்னாதன

ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா ;
நாற்றம் இலாத மலரின் வனப்பின்னா ;
தேற்றம் இலாதான் துணிவு இன்னா ; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை.

பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா ;
இருள் கூர் சிறுநெறி தாந்தனிப் போக்கின்னா ;
அருள்இலார் தங்கண் செல வின்னா ; இன்னா
பொருள் இலார் வண்மை புரிவு.

ஆன்றமைந்த சான்றோருள் பேதைபுகல் இன்னா ;
மான்(று) இருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா ;
நோன்றமைந்து வாழாதார் நோன்பின்னா ; ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல்.

—இன்னா நாற்பது.

மானம்

தம் நிலையில் தாழாமை ; தாழ்வு வந்துழி உயிர்வாழாமை

தலையின் இழிந்த மயிரனையர் ; மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின்.

மருந்தோ மற்(று) ஊனோம்பும் வாழ்க்கை ? பெருந்
பீடழிய வந்த இடத்து. [தகைமை

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

பெருமை

நற்குணங்களாற் பெரியாரது தன்மை

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் ; கீழிருந்தும்
கீழல்லார் கீழ்அல் லவர்.

பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பெருமை பெருமிதம் இன்மை ; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

அற்றம் மறைக்கும் பெருமை ; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

—திருக்குறள்

1. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்

தமிழ் நாட்டின் எல்லையில் குமரகோட்டமாகத் திகழும் திருத்தணியிலே, எஸ். இராதாகிருஷ்ணனவர்கள் பிறந்தார்கள். சமீபத்திலேதான் அவர்களுக்கு வயது அறுபது நிரம்பியது. அவர்கள் பிறந்தது ஒரு வைதிக குடும்பத்திலே; அந்தக் குடும்பத்தினர் செல்வமோ செல்வாக்கோ எதுவும் இல்லாதவர். பிறப்பாலோ செல்வத்தாலோ பெறலாகும் சிறப்பு இராதாகிருஷ்ணனவர்களுக்கு இல்லை; என்றாலும், விடாமுயற்சியாலும், தளரா ஊக்கம் தன்னம்பிக்கைகளாலும், அவர்கள் இன்று வாழ்க்கையிலே மேம்பட்டு விளங்குகின்றார்கள்.

இளமையிலே அவர்கள் திருத்தணியிலும் திருப்பதியிலும் கல்வி பயின்றார்கள். அவை புண்ணியத்தலங்கள் அல்லவா? அத்தலங்களின் திருவிழாக்களும் அவற்றுக்கு வருகிற யாத்திரிகர் குழாங்களும் இளைய இராதா அவர்கள் உள்ளத்திலே சமயஉணர்ச்சியைக் கிளறின. அதனால், பெரிய தத்துவஞானி என்று, பிற்காலத்திலே பெருமையடைய அவர்களால் முடிந்தது.

இளமையிலே இராதா அவர்கள் தனிமையிலே மோகங்கொண்டு ஒதுங்கியிருப்பார்களாம். தனிமையிலே சாரம் உண்டு. தனித்திருந்து, இளைய இராதா படிப்பாராம்; படித்ததைச் சிந்திப்பாராம்; கூட்டத்திலே பழகக் கூசுவாராம்; ஆனால், அவர் கோழை அல்ல.

பதினைந்தாவது வயசிலே இராதா அவர்கள் மேல் படிப்புக்காகச் சென்னை—கிறித்தவ கல்லூரியிலே சேர்ந்தார்கள். அங்கே, எப். ஏ.; பி. ஏ.; எம். ஏ. பரீட்சைகளிலே முதல் வராகத் தேறினார்கள். கலாசாலை கல்லூரிப் பயிற்சிகள், பல விதங்களிலே அவர்களை மேம்படுத்தின. புனிதத்தலங்களிலே வாழ்ந்த சூழ்நிலையால், இளமையிலேயே அவர்கள் சமய மனப்பான்மை உடையவர்கள். மேலும், கல்லூரியிலே அவர்கள் தத்துவ நூல்களைப் பயின்றார்கள். உலகிலேயே மேலான ஒரு தத்துவஞானியாக அவர்கள் தலை எடுத்தார்கள். மாணவராய் இருந்தபோதே அவர்கள் இந்து மதத்தை

ஆராய்ந்தார்கள். அப்போது சுவாமி விவேகானந்தர் இந்து மத தத்துவங்களை விளக்கிப் பிரசாரம் செய்துவந்தார். விவேகானந்தர் யார் தெரியுமா? சுவாமி இராமகிருஷ்ணருடைய பிரதம சீடர் விவேகானந்தர்; கல்கத்தா பல்கலைக் கழகத்திலே படித்துத்தேறிய பட்டதாரி. லௌகிக வாழ்க்கையைத் துறந்து, சந்நியாசியாய் அவர், இந்தியாவெங்கும் சஞ்சரித்து, இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளிலேயும் இந்து மதத்தை எடுத்தியம்பிப் புகழடைந்தார். இவர் தந்த விளக்கங்களாலும் விளம்பரங்களாலும், இந்து மதமே ஏற்றம் உற்றது. தமது பிதிரார்ச்சிதத்தை நினைந்து, இந்து இளைஞர்களும் இறுமாப் படைந்தனர். அத்தகைய இளைஞருள் இராதா அவர்களும் ஒருவர்.

படிப்பை முடித்து, இராதாகிருஷ்ணனவர்கள் சென்னை மாகாணக் கல்லூரியிலே தத்துவபோதகாசிரியராக அமர்ந் தார்கள். தத்துவ பாடம் சுவையிலாதது; சங்கடமானது என்று கருதப்பட்டது. அதை வெகு ரசமாக இராதா கிருஷ்ணனவர்கள் போதித்தார்கள். தத்துவ நூல்களிலே ஆழ்ந்து அகன்ற அறிவு இவர்களுக்கு இருந்தது; மேலும், ஆங்கில மொழியிலே அதிசயமான பயிற்சியும் இவர்களுக்கு இருந்தது. அதனை, இவர்கள் வெகு லாகவமாகக் கையாளு வார்கள். குற்றுலத் தருவிபோல அதனை இவர்கள் பொழியும் போது, இவர்களைக் கேட்பவர் அருவியாடிய பயன்போல, உள்ளம் குளிர்வர். சொல்லடுக்கல்ல இவர்கள் பேச்சு; வெற்றலங்காரம் அல்ல; வீண் ஆரவாரம் அல்ல; சமய நூல்களிலே பொதிந்த அரியபெரிய கருத்துக்கள் இவர்கள் மதியிலே ஊறி வெளிப்படும்போது, அவற்றைத் தாங்க மாட்டாது ஆங்கில மொழியே தட்டுக்கெட்டுத் தடுமாறும் என்பார்கள்.

இராதாகிருஷ்ணனவர்கள் ஒரு நல்லாசிரியர். ஆசிரியர் பலரும் மாணவர் மனத்தை அறிவை வளர்ப்பதிலே முனைவார்கள். ஆனல், தங்கள் அறிவை வளம்படுத்துவதிலே அவர்கள் முயல்வதில்லை. அவர்களைப் போன்றவர்கள் அல்ல இராதாகிருஷ்ணனவர்கள். முடிந்த அளவு படிப்பார்; படிப்பதைச் சிந்திப்பார்; சிந்தித்துத் தெளிந்ததைத்

தெள்ளமுதாக வடிகட்டி, அதைப் பேச்சாலும் எழுத்தாலும் பிறருக்கு வழங்குவார். சமயவாழ்வு தத்துவஞானங்களைப் பற்றி, ஐரோப்பியப் பத்திரிகைகளிலே எழுதிவந்தார். அவர்கள் எழுதியது புகழை நாடி அல்ல; பொருளைத்தேடி அல்ல; இந்து மதத்தைப்பற்றித் தாம் அறிந்து பயனடைகிற உண்மைகளை, உலகும் தெரிந்து உய்யவேண்டும் என்ற பெருங்கருணையால் எழுதினர்; பேசினர். அதனுல், அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் அலாதியான கவர்ச்சி இருக்கிறது.

'உண்மையான இந்து சரியான நினைவுகளையே எண்ணுவான். பெருமையான செயல்களையே புரிவான். இந்து மதம் உலகத்தினின்றும் ஒதுங்கித் தனித்து வாழப் போதிப்பதில்லை. சுயநலத்தை அதுபோக்கும். பொதுநலங் கருதியே கருமங்களைப் புரிய அது தூண்டும்' என்பது இராதாகிருஷ்ணனவர்கள் முடிவு.

இராதாகிருஷ்ணனவர்கள் புகழ் பரவவே, அவர்கள், மைசூர் பல்கலைக்கழகத்திலே தத்துவ பேராசிரியராக நியமனம் பெற்றுர்கள். மூன்று வருடம் அங்கே போதித்தார்கள். அப்போது தற்கால தத்துவ அறிஞர்களது முடிவுகளைத் தொகுத்து, ஆராய்ந்து அரிய நூல் ஒன்றை வெளியிட்டார்கள். உலகம் முழுவதும் அதைக் கொண்டாடியது. அமெரிக்காவிலே பேராசிரியர் ஒருவர் அதை வியந்து, தமது தலைமையுரை ஒன்றிலே, பேச்சு முழுவதும் அதையே புகழ்ந்து முடித்தாராம்.

கல்கத்தா பல்கலைக் கழகத்திலே அதன் ஆசிரியர் ஒருவராகவும், தலைவராகவும் அமர்ந்து, அருஞ்சேவை புரிந்தார்கள். அவ்வமயம் இந்தியதத்துவ ஞானத்தைப் பற்றி அவர்கள் இங்கிலாந்திலே வெளியிட்ட புத்தகம் ஒன்று, 'இந்திய தத்துவம் புதிரானது, உதவாதது' என்ற ஐரோப்பியர் கருத்தை மாற்றியது.

1926-லே சாம்ராச்சிய சருவ கலாசாலைகளின் மாநாடு கேம்பிரிட்ஜ் நகரிலே நடந்தது. கல்கத்தா பல்கலைக் கழகப் பிரதிநிதியாக, இராதாகிருஷ்ணனவர்கள் சென்றுர்கள். வெளிநாடுகளினின்றும் முன்னம் எத்தனையோ அழைப்புக்கள்

வந்திருந்தாலும், இவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது தாய் நாட்டின் விருப்பத்தை அவர்களால் தட்டிக் கழிக்க முடியவில்லை. இங்கிலாந்திலே பல்வேறு இடங்களில் அவர்கள் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டார்கள்; என்றுலும், ஆக்ஸ்போர்டு மாநகரிலே மட்டும் இவர்கள் பேசுவதற்கு ஒப்புக் கொண்டார்கள். இவர்கள் பேச்சுக்களைக் கேட்ட ஆங்கிலேயர்கள் வியப்பும், உவப்பும் ஒருங்கே மேவி இவர்களைக் கொண்டாடினுர்கள். ஆங்கில மொழியிலே இவர்கள் பெற்றுள அதிசய தேர்ச்சியைப் போற்றினுர்கள்.

இங்கிலாந்து யாத்திரையை முடித்து, இராதாகிருஷ்ணனவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றுர்கள். சிக்காகோ சருவ கலாசாலையிலே பேசினுர்கள். பேச்சுக்களின் நடுவே கேலி பரிகாசங்களால் கூட்டத்தைச் சிரிக்க வைப்பது இவர்கள் வழக்கம். அடுத்த கணம் சீரிய மொழிகளால் கூட்டத்தைச் சிந்திக்க வைப்பார்கள். சென்ற இடமெல்லாம் இவர்கள் சிறப்படைந்தார்கள்.

அப்போது, 'கல்கி', அல்லது 'எதிர்கால நாகரீகம்' என்று, இவர்கள் எழுதிய புத்தகத்திலே, மானிடருக்கு விஞ்ஞானம் செய்த சேவைகளை விளக்கி, 'விஞ்ஞானத்தால் உடலுக்கு இலாபம் உண்டு. ஆனுல் உள்ளமும், ஆன்மாவும் விரும்பியதை அடைவதில்லை. மனிதன் தற்போது தன் மூதாதையரைவிட, சுக போகத்திலே வாழ்கின்றுன்; என்றுலும், அவன் மனம் இருக்கவேண்டும் அமைதியில் இல்லை' என்கிறுர்.

யாத்திரையை முடித்து இந்தியா வந்தபொழுது, இவர்களுக்கு ஆந்திர பல்கலைக் கழகம் 'டிலிட்' என்ற பட்டம் தந்து இவர்களைப் பாராட்டியது. இது போன்ற பாராட்டுக்கள் பலவற்றை இவர்கள் பெற்றிருக்கின்றுர்கள்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே ஆசிரியப் பதவி ஏற்று, இவர்கள் இங்கிலாந்து சென்றுர்கள். இவ்வமயமும், மான்சஸ்டர், லண்டன் மாநகரங்களிலே இவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைப் பலரும் பாராட்டினுர்கள். லண்டன் பல்கலைக் கழகத் தலைவர் ஒரு பிரசங்க முடிவிலே, இவர்களுக்கு நன்றி கூறியபொழுது, 'தற்போது மக்களிடை ஐயமும்,

அச்சமும் நிலவுகின்றன என்பது மெய்யே ; அவற்றை எப்படி அகற்றலாமென்பதற்குத் தாங்கள் வழிகாட்டினீர்கள் ; எங்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும், தைரியமும் புகட்டினீர்கள். ஆங்கில மொழியிலே தாங்கள் அடைந்துள புலமையை நினைக்கவே வியப்பாக இருக்கின்றது. இது தங்கள் தாய்மொழி அல்லவே' என்றார்.

இராதாகிருஷ்ணனவர்கள் 1931-36-ல் ஆந்திர பல்கலைக் கழகத்தின் தலைவராய் வீற்றிருந்தார்கள். மீண்டும் இவர்கள் ஆக்ஸ்போர்டுக்குப் பேராசிரியராய்ச் சென்று, மூன்று வருடம் அங்கே தங்கியிருந்தார்கள். காசி சருவ கலாசாலையின் தலைவராகவும் இவர்கள் ஆனார்கள். நூற்றுக் கணக்கிலே சொற்பொழிவுகளை ஆற்றினார்கள். பட்டமளிப்புப் பிரசங்கங்களைச் செய்தார்கள்.

இராதாகிருஷ்ணனவர்கள் இந்தியாவிலே முதன்மையான ஒருவர்; முக்கியமான ஒருவர்; உதவியை நாடி, அறிவுரையை நாடித் தம்மிடம் வரும் பலவகையான மக்களிடமும், இவர்கள் அன்புடனும், அடக்கத்துடனும் நடந்து கொள்கிறார்கள். எல்லாரிடமும் பரிவு காட்டுகிறார்கள். இவர்கள் 'சீறிவிழு'பவர் அல்லர். 'சிடுமூஞ்சி' அல்லர். கேலி, பரிகாசங்கள் செய்வார். சிரிப்பார், சிரிக்கச் செய்வார். தடபுடலாக நடந்துகொள்கின்ற பலரை நாம் பார்க்கின்றோம். மற்றவர் தம்மை மதிக்கவேண்டும் என்பதற்காக, அவர்கள் அவ்விதம் நடந்து கொள்கிறார்கள். இராதாகிருஷ்ணனவர்களோ யாரிடமும், இனிமையாகவே நடந்து கொள்கிறார்கள். இவர்கள் தம்மைப்பற்றி, பறையடிப்பதில்லை. பிறர் புகழ்வதையும் விரும்புவதில்லை. உயரிய பதவியிலே இருப்பினும் எளிய நடை, எளிய உடை, எளிய வாழ்க்கைகளையே இவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

சாதாரண நிலையிலிருந்து, இராதாகிருஷ்ணனவர்கள் வாழ்க்கையிலே படிப்படியாக உயர்ந்தார்கள். இன்று, இந்தியாவின் சிந்தனையை அவர்கள் பிரதி பலிக்கின்றார்கள். காந்தியடிகள் இந்தியாவின் இதயத்தைப்பிரதி பலித்தார்கள். தாகூர் இந்திய பண்பாட்டை எதிரொலித்தார்.

இராதாகிருஷ்ணனவர்கள் நீடுவாழ்க.

1. *சொல்லும் தொடரும் :*

குமர கோட்டம்	விழா, குழாம்	லௌகிக வாழ்க்கை
வைதிக குடும்பம்	தத்துவ ஞானி	விளம்பரம்
செல்வாக்கு	சூழ்நிலை	சொல்லடுக்கு
விடா முயற்சி	சமய மனப்பான்மை	வெற்றலங்காரம்
தளரா ஊக்கம்	பிரதம சீடர்	தட்டுக் கெட்டு
மேம்பட்டு விளங்கல்	பல்கலைக் கழகம்	சொற் பொழிவு
புண்ணியத் தலம்	பட்டதாரி	

2. *சிந்தனைக்கு :*

1. நீ பிறந்து வளர்ந்த ஊர் எது ? அதன் சூழ் நிலை என்ன ? அதனால் நீ பாதிக்கப் பட்டாயா ?

2. திருத்தணி, திருப்பதிகள் — இந்தத் தல விசேடங்களை நீ அறிவாயா ?

3. ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தாரை நீ பார்த்திருக்கின்றாயா ?

4. எஸ். இராதாகிருஷ்ணனவர்களைப் போல நல்லாசிரியராக நீ விரும்புகிறாயா ? பிரதம மந்திரியாக உனக்கு விருப்பமா ?

3. *பயிற்சி :*

வாக்கியத்தைப் பற்றி :—1

'இளைய இராதா - ஒதுங்கியிருப்பார் ; படிப்பார் ; படித்ததைச் சிந்திப்பார்' :— இந்த வாக்கியங்களைக் கவனியுங்கள்.

வாக்கியம் என்றால் என்ன ? சொற்கள் ஒன்றோ பலவோ அமைந்து, முடிந்த கருத்தைப் புலப்படுத்துவது எதுவோ அது வாக்கியம். 'படிப்பார்'— இங்கு ஒரு சொல்லாய் நின்றே, 'இராதா படிப்பார்' என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றது. கருத்தமைதிக்கு இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று எழுவாய் ; மற்றது பயனிலை. எழுவாயும் பயனிலையுமே வாக்கியத்தின் அடிப்படை அமிசம்.

இந்தப் பாடத்தின் முதல் பக்கத்திலே அமைந்த வாக்கியங்களின் எழுவாய் பயனிலைகளை எடுத் தெழுது.

2. நமது உணவுப் பொருள்களிலே சில:

நாம் சமையல் செய்து சாப்பிடும் காய்கறிகள் நமது நாட்டிலே வளர்ந்தவைகளா? புற நாட்டிலே இருந்து வந்த பொருள்களா? இதை எப்போதாவது நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? முட்டைக்கோசை ஆங்கிலேயர் கொண்டு வந்து, இங்கே பயிர் செய்தார்கள் என்பதை எல்லோரும்அறிவர். தம் மட்டம் பழம் : இச் சொல் (டமாட்டோ என்ற) ஆங்கில மொழி திரிந்து வந்தது. அதுவும் மேல் புலத்திலிருந்து

வந்ததே. அதைத் தக்காளி என்கிறேம். உருளைக்கிழங்கும் அப்படியே; மண்ணிலே புதைந்து வளர்வதால், அதைக் கிழங்கு என்கிறேம்; உருண்டையாய் இருப்பதால், உருளை என்கிறேம். இது முதலிலே அமெரிக்காவில் உண்டானது; பின்பு ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப் பெற்றுக், கழிந்த நூறு வருடங்களாகத்தான், நமது மலையிலே அது பயிர் செய்யப்படுகிறது.

சர்க்கரையை நாம் மிகுதியும் பயன்படுத்துகிறேம்; அதன் கதையை அறிவீர்களா? சர்க்கரை என்ற வட சொல்லுக்கு மணல் என்பது பொருள். சர்க்கரை மணல் போன்று தோன்றியதால், அப்பெயர் பெற்றது. தனித் தமிழிலே அதனை 'அயிர்' என்பார்கள். அயிர் என்பதற்கும் முதலில் மணல் என்ற பொருள் இருந்தது. பின்புதான்

அதற்குச் சர்க்கரை என்ற பொருள் உண்டாயிற்று. பல ஆயிர வருடங்களுக்குமுன், நம்முடைய நாட்டிலே சர்க்கரை கிடையாது. அது சீன தேசத்திலிருந்து நமது நாட்டுக்கு வந்தது. நமது முன்னோர் கருப்பஞ்சாறு, பனஞ்சாறுகளைக் காய்ச்சி வெல்லம் செய்தார்கள்; ஆனால், வெல்லத்தையே சர்க்கரை ஆக்கும் வித்தை அவர்களுக்குத் தெரியாது. வெல்லத்தைப் பிடித்துப் பிள்ளையாராக்கி, நமது வைதிகர்கள் பூசை செய்வார்கள்; ஆனால், சர்க்கரையையோ, கற்கண்டையோ பிள்ளையாராக வைத்துப் பூசை செய்யார். ஏன் தெரியுமா? அவை புற நாட்டுப் பொருள்கள். அவற்றை வழங்குவது ஆசாரம் அல்ல. கல்லைப் போலக் கண்டமாய் இருப்பதுதான் கற்கண்டு.

காப்பியும் தேயிலையும் புறநாட்டுப் பொருள்களே. காப்பி என்பது அரபிச்சொல். அரபியரோடு தமிழருக்கு வியாபார சம்பந்தம் தொன்று தொட்டது; சேரமான் பெருமாள் அரேபியாவுக்குக் குடி போனதாக ஒரு கதை உண்டு. மலையாளக்கரையிலே குடியேறிய அரபியர்தான் மாப்பிள்ளைகள் என்ற சாதியார். இவ்வளவு போக்கு வரவு இருந்தாலும், அரபிக் காப்பிக் கொட்டையை வறுத்துக் கசாயம் இறக்கி, அதைப் பருகும் வழக்கம் இந்நாட்டிலே முற்காலத்தில் ஏற்படவில்லை. அதை உட்கொள்வது உடலுக்குச் சரிப்படாது என்று கருதினார்கள்; அனாசாரம் என்று ஒதுக்கினார்கள். ஆனால், பிற்காலத்தில் பிரஞ்சியரிடமிருந்து நாம் காப்பி குடிக்கும் வழக்கத்தைக் கற்றுக் கொண்டோம். இம்மாதிரியே தேயிலை பருகுவதையும் நாம் ஆங்கிலேயரிடமிருந்து கற்றோம்; 'தே'—'சா' என்பது சீனத்துப் பொருள்.

காப்பிச்செடி—கிளை

சீன தேயத்துக்கும் நமது நாட்டுக்கும் பல்லாயிர வருடங்களாகவே நெருங்கிய தொடர்பு நிலவியது என்றுலும், நம் முன்னேர்கள் சீனரிடமிருந்து தேநீர் பருகும் விதத்தைக் கற்றுக்கொள்ளவே இல்லை. புறநாட்டுப் பொருள்களை நமது முன்னேர்கள் அனுசாரம் என்று புறக்கணித்ததற்குக் காரணம் உண்டு. மனிதனுடைய உடல் அவன் வாழும் மண்ணின் இயல் நிலைக்குத் தக்கவாறு அமைந்திருக்கும். எவன் எவ்வூரிலே வாழ்கிருனே அவ்வூர்ப் பொருளே அவன் உடலுக்கு உகந்தது. உடலும் உணவுப் பொருள்களும் ஒரே இயற்கை நிலையில் உண்டாவன; ஆதலின், ஒன்றுக்கொன்று ஒற்றுமை யுண்டு; எனவே, நமது மூதாதையர் விதேசிப் பொருள்களை விலக்கினர்.



தேயிலைச் செடி—கிளை

தற்போது காப்பி, தேநீர், உருளைக்கிழங்கு முதலியவை பையப் பைய வழக்கத்திலே வந்துவிட்டது போலவே, முற்காலத்தும் சர்க்கரை கற்கண்டு வெற்றிலை முதலியன வழக்கத்துக்கு வந்தன. வெற்றிலை புறநாட்டுப் பொருளா? ஆம்; ஏனென்றுல் இதற்குத் தமிழிலே பெயர் இல்லை! பிற இந்திய மொழிகளிலும் இல்லை. வெற்றிலை என்றுல் வெறும் இலை—அதாவது சமயல் செய்யாது வெறும் இலையாய்த் தின்னப் படுவது இது ஒன்றுதான். தெலுங்கிலே இதை 'ஆக்கு' என்பார்கள். 'ஆக்கு' என்றுல் இலை என்பதே பொருள். 'தாம்பூலம்' என்கிறேமே; 'தாம்பூலம் என்றுல் என்ன தெரியுமா? தாமாலம் என்ற சொல் திரிந்து 'தாம்பூலம்' ஆயிற்று. அதற்குப் பொருள் பசியஇலை என்பதே. பழங்காலத்திலே, மலேயாத் தீவுகளினின்றும் இது கொண்டுவரப்பட்டு இங்கே பயிரிடப்பட்டது.

பெயர்களை வைத்தே புற நாடுகளினின்றும் வந்த பொருள்களை அறியலாம். தற்போது நம்மவரிலே பலர் பலவகையாய்ப் புகையிலையை வழங்குகின்றனர். அதற்குப் பிரம்ம பத்திரம் என்ற வடமொழிப் பெயரையும் கற்பித்திருக்கிறார்கள். முன்னூறு வருடத்திற்கு முன்வரை அமெரிக்காவிலே மட்டும் புகையிலை இருந்தது. ஸர்வால்-தெர்ராலி என்ற ஆங்கிலன் தங்கம் சம்பாதிக்க அமெரிக்காவுக்குச் சென்றவன், அங்கே புகை குடிக்கும் வழக்கத்தைக் கற்றுவந்தான். அவன்மூலம் ஐரோப்பா எங்கும் சுருட்டுப் புகை பரவியது. அதன்பின் ஐரோப்பியன் ஒருவன் புகை குடிக்கும் வழக்கத்தை ஜகாங்கிர் என்ற நமது முகலாய வேந்தனுக்குக் கற்பிக்கவே—மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி—அப்பழக்கம் இந்தியாவிலே வேகமாய்ப் பரவியது. பெருவாரியாகப் புகையிலை இன்று பயிரிடப்படுகிறது! அது ஒரு நச்சுப்பொய்கை. அதை விலக்குவது அவசியம்.

புகையிலைக்குப் ‘பிரமபத்திரம்’ என்ற வடமொழிப் பெயர் நமது நாட்டிலே வழங்குகின்றது என்றோம். இது ஒரு கற்பனைப் பெயர்; பண்டிதரொருவர், புகையிலையைச் சுவைக்கும் வழக்கம் உடையவர்; அனுசாரம் என்று இவ்வழக்கத்தைச் சிலர் ஆட்சேபித்தபோது, பண்டிதர் புகையிலையைத் தின்னுதல் சாஸ்திர சம்மதமே என்று நிறுவ ஒரு கதையைக் கட்டினார். திரிமூர்த்திகளின் தேவியர்களான மலைமகள் அலைமகள் கலைமகள் என்ற மூவரும் ஓர் நாள் நந்தவனத்துக்குச் சென்றார்கள். அங்கே தங்கள் தங்களுக்குரிய தளங்களை எடுத்தார்கள். மலைமகள் வில்வத்தை எடுத்தாள்; துளசியை அலைமகள் எடுத்தாள். கலைமகள் எடுப்பதற்குரிய இலை ஒன்றும் காணாதவளாய்த் தயங்கித் தன் நாயகனிடம்

புகையிலை

சென்று முறையிட்டாள். பிரமாவும் யாகம் ஒன்று செய்து, அதிலிருந்து எழுந்த புகையைத் திரட்டி இலையாகக் கொடுத்த னர். இதனால், புகையிலை என்றும் பிரமபத்திரம் என்றும் பெயர்கள் வழங்கின. கதை எப்படி !

'கத்தரிக்காயை' நமது நாட்டுப்பொருள் என்று எண்ணுகிறீர்கள்! இல்லை; அதுவும் அமெரிக்காவில் இருந்து வந்ததுதான். நம்முடைய முள்ளிக்காய் வேறு, கத்தரிக்காய் வேறு, முன்னையது உடம்புக்கு நலம் செய்யும். கத்தரிக் காயைத் தெலுங்கிலே 'வங்க்காய்' என்பார்கள். 'வங்க்காய்' என்றால் வங்க தேசத்தினின்றும் வந்த காய் என்பது பொருள். அமெரிக்காவினின்றும் வங்காளம் வழியாக, இது தென்னாட் டுக்கு வந்தது போலும்: இது சிரார்த்தத்துக்கு உதவாது: உடம்புக்கும் கூடாது. சிரார்த்த தினத்திலே மிளகாய் கூடாது என்கிறார்களே, அது ஏன் தெரியுமா! நானூறு வருடங்களுக்கு முன் அமெரிக்கா — சிலி என்ற இடத்திலிருந்து அது இங்கே வந்து குடி ஏறியது. அதற்கு நமது மொழியிலே பேரே இல்லை. மிளகாய் என்பது, மிளகு காய் என்ற தொடர் மருவியது. ருசியிலே மிளகுபோன்றது. மேலும் அது நீண்டு காயாகவும் இருக்கிறது; ஆதலின் மிளகுகாய் — மிளகாய் என்ற காரணப் பெயர் பிறந்தது. சிலி என்ற இடத்தினின்றும் வந்ததால் ஆங்கிலத்தில் சிலி என்பதே பெயர். தெலுங்கர் இதை 'மிரியபு காய' என்பர். மிரியம் என்றால் மிளகு: மலையாளிகள் இதனைக் 'கப்பல் மிளகு' என்பார்கள். மிளகு போலக் காரமாயிருந்து கப்பல் மூலம் வந்ததல்லவா? இரண்டும் எரிப்பாய் இருந்தாலும் மிளகு, குணத்திலே சிறந்தது, உடம்புக்கு உகந்தது.

நமதுடல் நமது நாட்டின் நீர் நிலங்களின் நுண்ணிய பண்புகளுக்குத் தகுந்தவாறும் தட்பவெப்பநிலைக்கு இயைந்தவாறும் வளர்வது; ஆதலின் இயற்கை நிலைக்கு உட்பட்டுப் பல்லாயிர வருடங்களாய் இதே நாட்டிலே பயிராகிவரும் உணவுப் பொருள்களே நமதுடலுக்கு ஏற்றவை. மிளகாய் கத்தரிக்காய், உருளைக்கிழங்குகளை விட, நமது மிளகு, முள்ளிக்காய், வள்ளிக்கிழங்குகள் மேலானவை; உடலுக்கு உகந்தவை.

1. *சொல்லும் தொடரும் :*

அயிர்	சிரார்த்த தினம்
ஆசாரம் ; அனுசாரம்	விதேசிப் பொருள்
இயற்கை நிலை	புறநாட்டுப் பொருள்
நச்சுப் பொய்கை	தட்ப வெப்ப நிலை

2. *சிந்தனைக்கு :*

1. உணவு வகைகளிலே விதேசிப் பொருள்களை விலக்கக் காரணம் என்ன ?

2. விதேசிப் பொருள்களை வழங்குவது அனுசாரம் என்று நம் முன்னோர்கள் ஏன் கருதினார்கள் ?

3. 'பெயர்களை வைத்தே புறநாட்டினின்றும் வந்த பொருள்களை அறியலாம்'— எப்படி ?

4. ஒவல்டின், 'மால்ட்' வகைகள் போன்ற உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து தான் வாங்கவேண்டுமா ?

3. *பயிற்சி :*

வாக்கியத்தைப் பற்றி :—2

வாக்கியம் என்றால் என்ன என்பதை அறிந்தோம். அது மூவகைப் படும். 1. தனி வாக்கியம் :— ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டது. 2. தொடர் வாக்கியம் :— பல தனி வாக்கியங்களை ஒரே தொடராக அமைத்துக் கூறுவது. 3. கலவை வாக்கியம் :— ஒரு தனி வாக்கியத்தினோடே இடைப் பிறவரலாக வேறொரு வாக்கியம் பெறுவது. (உ - ம்.) :—

1. *மூதாதையர்* விதேசிப் பொருள்களை *விலக்கினர்.*

2. சீன தேயத்திற்கும் நமது நாட்டுக்கும் பல்லாயிர வருடங்களாகவே நெருங்கிய தொடர்பு நிலவியது என்றாலும், நமது முன்னோர்கள் சீனரிடமிருந்து தேநீர் பருகும் விதத்தைக் கற்றுக்கொள்ளவே இல்லை.

3. ராலி என்னும் ஆங்கிலன், தங்கம் சம்பாதிக்க அமெரிக்காவுக்குச் சென்றவன், புகை குடிக்கும் வழக்கத்தைக் கற்றுவந்தான்.

இந்தப் பாடத்தில் பயிலும் ஒவ்வொரு வாக்கியத்தையும் கவனித்து, அதன் அமைப்பு போக்குகளை ஆராய்ந்து பார்.

3. நம்பியாண்டார் நம்பி

தமிழ் நாட்டிலே சிவபெருமானே தெய்வம் என்று வழி படும் சமயத்தினைச் சைவம் என்பர். திருமாலையும் அவர் அவதாரங்களையும் வழிபடும் சமயம் வைணவம். இந்துமதம் என்ற பேரால் இவை வழங்குகின்றன. கடவுள் திருவுருவங் களை வைத்து வழிபடுமிடம் கோயில்; கோயில் இல்லாத ஊர் தமிழகத்திலே இல்லை. கோயில் என்பது, ஆலயங் களுக்குப் பொதுப் பெயராக வழங்கினும், சைவர்கள் சிதம் பரத்துக்கே சிறந்த பெயராக அதை வழங்குவர். நடன ராசனுக்கு உகந்த இடம் அல்லவா அது?

சிதம்பரத்தைச் சுற்றிலும் பல சிவத்தலங்கள் அமைந் திருக்கின்றன. அவற்றுள் ஒன்று திருநாரையூர். அவ்வூர் மிகப் பெரிய ஊரும் அல்ல; சிறிய ஊரும் அல்ல. அங்கே பலவகைச் சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற கொள்கை உடையவர். சிவாலயத்துடன் பிள்ளையார் கோயில் ஒன்று அவ்வூரிலே உண்டு.

சிவபெருமானது மூத்த பிள்ளையைப் பிள்ளையார் என்று சொல்லுவது மரபு. முழுமுதற் கடவுளுக்குப் பல மூர்த்தங்களைக் கற்பித்து வழிபடுவது இந்த நாட்டு வழக்கம். கடவுளுடைய பல திறப்பட்ட வடிவங்களிலே பிள்ளையார் தோற்றமும் ஒன்று. பிள்ளையார் சிவபெருமானது கணங் களுக்குத் தலைவர்; ஆதலின், அவரைக் கணபதி என்கிறோம். தொழுவார்க் குண்டாம் விக்கினங்களைக் களைவதால், அவரை விக்கினேசுரன் என்கிறோம். விநாயகன் என்ற சொல்லுக்குப் பொருள் என்னவென்று தெரியுமா? பெருமை பொருந்திய தலைவன் என்பது பொருள். தமிழகத்திலே பிள்ளையாருக்கு ஊர்கள் தோறும் கோயில் உண்டு. சந்தி, சாலை, சாவடிகளிலே அவர் இருப்பார். ஆற்றங்கரை குளக் கரைகளிலும் அவர் இருப்பார். அவரை வழிபடாது தமிழர் எதையும் தொடங்கார். அவரை முன்வையாது எதனையும் செய்யார்; கடிதம் எழுதும்போது கூடப் பிள்ளையார் சுழி இட்டே எழுது வது இந்தநாட்டுப் பழக்கம். 'வேழமுகத்து விநாயகனைத்

தொழ வாழ்வு மிகுந்துவரும்' என்பது இந்துக்கள் நம்பிக்கை.

திருநாரையூரிலே விளங்கும் பிள்ளையாரைப் பொல்லாப் பிள்ளையார் என்பர். பொல்லாப் பிள்ளையார் என்றால், பொல்லாத பிள்ளையார் அல்ல; உளி கொண்டு பொளியப் படாதவர்:—அதாவது சுயமா யமைந்தவர் என்பது பொருள். அவருக்குப் பூசை செய்ய ஆதிசைவர் ஒருவர் இருந்தார். ஆதிசைவர் என்பவர் சிவாலயங்களிலே பூசை செய்வதற் கென்று அக்காலம் நியமிக்கப் பெற்றவர். நமது பிள்ளையார் கோயிற் 'பூசாரி' ஆகிய ஆதி சைவருக்கு ஒரு நாள் அயலூர் போக நேர்ந்தது. செல்லும் போது, அவர் தமது பிள்ளையைக் கொண்டு பிள்ளையார் பூசை செய்து வரும்படி தம் மனைவி யிடம் கூறிச் சென்றார்.

இவருடைய மகன் சிறியவன். பாடசாலையிலே அவன் கல்வி பயின்று வந்தான். நம்பியாண்டான் என்பது அவன் பெயர். பள்ளியிலிருந்து திரும்பியதும், நீராடி, தோய்த் துலர்ந்த ஆடையுடுத்தி, எண்ணெய், மா, மஞ்சள், தயிர், பால் ஆகிய அபிடேக திரவியங்களையும், சந்தனம், பூ முதலிய பொருள்களையும், நிவேதனத்தையும் எடுத்துக் கொண்டு, அவன் பொல்லாப் பிள்ளையார் கோயிலுக்குப் போனான். அலகிட்டு ஆனைந்து என்னும் பஞ்சகவ்வியம் தெளித்தான். பிள்ளையாரைத் திருமஞ்சன மாட்டினான்; திலகமிட்டான்; ஆடை கட்டினான்; பூமாலை அணிந்தான்; தூப தீபங் கொடுத்தான்; தான் கொண்டு வந்த நைவேத்தியத்தை விக்கிரகத்தின் முன் வைத்து, அதை அருந்த வேண்டினான். விக்கிரகம் அருந்துமா? வைத்தது வைத்தபடியே இருந்தது. 'பூசையிலே ஏதேனும் தவறு நேர்ந்ததோ? அதனாலோ பிள்ளையார் நிவேதனத்தை உண்ண விரும்பவில்லை', என்று நம்பியாண்டான் ஏங்கினான். கடவுளுக்குக் காட்டித் திரும் பவும் வீட்டுக்கு எடுத்துச் செல்வது நிவேதனம் என்பதை அவன் அறியான். தம்முன் வைத்த நிவேதனத்தை, சுவாமி உண்டு விடுவார் என்று, அவன் உண்மையிலேயே நம்பினான். ஆதலின், நம்பியாண்டான், நிவேதனத்தை உண்டருளும்படி, விநாயகரைப் பரிந்திறைஞ்சினான்; மன்றாடி வேண்டினான்.

வைத்தது வைத்தபடியே இருந்தது. அது கண்டு நம்பியாண்டான் ஆத்திரங் கொண்டு அங்கிருந்த கல்லிலே தன் தலையை மோதச் சென்றான். அப்போது ‘ நம்பீ! பொறு, ’ என்று தடுத்துப், பொல்லாப் பிள்ளையார் நிவேதனத்தை உவந்துண்டார்.

விபரீதமான இந்த நடவடிக்கைகளால், நாழிகை ஆகிவிட்டது. பள்ளிக்கூடம் செல்லக் காலங் கடந்துவிட்டது என்பதைத் தெரிந்த நம்பி, ஆசிரியர் தண்டனைக் கஞ்சி, தனக்குப் பாடங் கற்பிக்க வேண்டும் என்று பிள்ளையாரிடம் விண்ணப்பஞ் செய்தான். படித்தன மனத்துப் படியவும் பொருள் விளங்கவும் விநாயகர் அருள் செய்தார். பாடம் படித்து, நம்பி மாலையிலே வெறுங்கையுடன் வீட்டுக்குச் சென்றான். நிவேதனம் எங்கே என்று தாய் கேட்ட போது, அதைப் பிள்ளையார் உண்டுவிட்டதாக நம்பி கூறியதைத் தாய் நம்பவே இல்லை. மறுநாள் அவள் கோயிலுக்குச் சென்று ஒளிந்திருந்து பார்த்தாள். உண்மையைக் கண்டு மகிழ்ந்து நின்றாள். அயலூருக்குச் சென்ற தன் கணவன் திரும்பி வந்ததும் அவரிடம் நடந்ததைச் சொன்னாள். சிவவேதியரும் அதிசயமடைந்தார். அது முதல், சிறுவன் நம்பியே பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தான். இவ்வற்புதச் செய்தி நாடெங்கும் பரவியது. இது நடந்தது பத்தாவது நூற்றாண்டின் இறுதியிலே.

அப்போது சோழ சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தி முதலாம் இராசராசன். நாரையூரிலே இந்த அற்புதம் நிகழ்ந்தபோது, இராசராசன், திக்குவிசயம் செய்வதிலே முனைந்து நின்றான். சேர பாண்டியனை வென்று அவன் ஈழ மண்டலத்தையும் கைப்பற்றினான். வேங்கி, கலிங்க நாடுகளை வென்றான். பல வெற்றிகளால் பெற்ற செல்வத்தைக் கொண்டு, வீர சின்னமாகத் தஞ்சையிலே இராசராசேச்சுரம் என்று, தன் பெயரிலே பெருங் கோயில் ஒன்றைக் கட்டி முடித்தான். இவன் சிறந்த சிவ பக்தன். நாரையூர் நம்பியாண்டான் நிமித்தம் பிள்ளையார் நிகழ்த்திய அற்புதத்தை இவன் கேட்டு நாரையூர் சென்றது, தேவாரங்களைத் தேடியது போன்ற விவரங்களைப் பின்வரும் பாடத்திலே படிக்கலாம்.

1. சொல்லும் தொடரும் :

ஆதி சைவர்	திருமஞ்சனம்	சாம்ராச்சியம்
அபிடேக திரவியம்	நைவேத்தியம்	திக்கு விசயம்
நிவேதனம்	விக்கிரகம்	வீர சின்னம்

2. சிந்தனைக்கு :

1. கணபதியின் வடிவம் வேடிக்கையாய் இல்லையா ? அது ஏன் என்று தெரிந்துகொள். அவரைப்பற்றிய புராண கதைகளை நீங்கள் அறிவீர்களா ?

2. திண்ணைப் பள்ளிக்கூடங்களிலே சிறுவர்கள் பாராயணம் செய்து வரும் வேழமுகம், பிள்ளையார் சிந்தனை என்ற நூல்களை நீங்கள் அறிவீர்களா?

3 இந்துக்களுடைய சமுக வாழ்விலே ஏனைய தெய்வ வடிவங்களை விட, விநாயக விக்கிரகம் ஏன் மிகுதியும் இடம் பெறுகிறது ?

4. பிள்ளையார் சதுர்த்தசி என்றால் என்ன ? அன்று ஏன் பள்ளிக் கூடங்களுக்கு விடுமுறை விடப்படுகிறது ?

3. பயிற்சி :

வாக்கியத்தைப் பற்றி :—3

1. 'நம்பியாண்டான் நிவேதனத்தைப் படைத்தான் ; அதை உண்ணும் படி அவன் விநாயகனை வேண்டினான்.'—இந்த வாக்கிய அமைதியைக் கவனி : எழுவாய் முதலிலே, அதனை அடுத்து செயப்படுபொருள், கடைசியிலே பயனிலை அமைந்திருக்கின்றன.

2. நம்பி ஏங்கினான்.
ஏங்கினான் நம்பி.

இந்த இருவகை வாக்கியங்களிலே என்ன வேறுபாடு காண்கிறீர்கள் ? ஏன் ?

4. சென்னைக்கு,

மாணவர்களே! இன்று நாம் சென்னைபட்டினத்தைச் சுற்றிப் பார்த்து வருவோம். அதைப் பற்றி உங்கள் பாடத்திலே படித்தீர்களே; அந்த வாக்கியம் ஞாபகத்தில் இருக்கிறதா?

'இந்திய நாட்டிலே முந்திய நகரங்களில் ஒன்றாய், நானுவருணரும் சேனுவீரரும் வாழும் மாட மாளிகை மாலை, துரைத்தனச் சாலை, நிரைத்த தன சாலை, வர்த்தக சாலை, நிர்த்தன சாலை, சர்வகலாசாலை, தர்ம கலாசாலை, கலை பயில் சாலை, வைத்திய சாலை, வைதிகர் சாலை, சித்திரச் சாலை, கைத்தொழிற் சாலை, ஆயங்கொள் சாலை, நியாயங்கொள் சாலை—இன்னன சாலைகள் எண்ணிறந்தன பெற்று, நால்வகை அரணும் சூழ்வுற விளங்கும் பொன்னகரை ஒத்த சென்னைமா நகர்——'

இதைப் படித்தபோது, உங்களுக்கு ஒன்றுமே விளங்க வில்லை அல்லவா? நல்லது; இப்போது சென்னையைச் சுற்றிப் பார்ப்போம்.

இந்தியாவிலேயே சென்னை மூன்றாவது பெரிய நகரம். பிரான்சிஸ் டே என்பவர் முன்னூறு வருடங்களுக்கு முன் இந்த நகரத்துக்கு நல்ல முகூர்த்தம் ஒன்றிலே அஸ்திவாரம் இட்டார். டே என்பவர் கிழக்கிந்திய கம்பெனியைச் சார்ந்த ஒரு வியாபாரி. சந்திரகிரி ராசன், கடல் கரையை அடுத்த ஓரிடத்தைக் காட்டி, அதிலே கட்டிடங்களைக் கட்டிக் கொள்ளும்படி, கம்பெனியாரை அனுமதித்தான். ஆங்கில வர்த்தகர், அந்த இடத்திலே முதன் முதல் ஒரு கோட்டை கட்டினார்கள். வர்த்தகப் பாதுகாப்புக்கென்று கட்டப்பட்ட அது, நாட்டை ஆண்டது. அந்த விபரீத சம்பவத்தை நீங்கள் சரித்திரத்திலே படிப்பீர்கள். இந்தக் கோட்டையை ஒட்டி நாளடைவிலே ஒரு பெரிய நகரம் ஒன்று அமைந்தது. அதுதான் 'ஜார்ஜ் டவுன்'.

இப்போது, கோட்டையைச் சுற்றிப் பார்ப்போம். சென்னை சர்க்காரின் முக்கிய அலுவலகம் இங்கேதான் அமைந்திருக்கின்றது. இங்கேதான் மந்திரிகள் காரியாலயங்களும்

இருக்கின்றன. இந்த மண்டபத்தைப் பார்த்தீர்களா? சட்ட சபை இங்கேதான் கூடுகிறது. நமது மாகாண ஆட்சிக்குரிய சட்டங்கள் இங்கேதான் வகுக்கப்படுகின்றன. சுருங்கச் சொன்னால், இன்று நம்மை ஆள்வது இந்த சட்டசபைதான்; அது எப்படி என்று பின்னாலே விளக்குகின்றேன். சட்டசபை நடக்கும்போது ஒரு நாள் இங்கே வருவோம்; அப்போது அதன் தலைவரை நாம் சந்திக்கலாம்; அதன் அங்கத்தினர் களையும் மந்திரிகளையும் பார்க்கலாம். நமது கல்வி மந்திரியை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அவருடைய காரியாலயம்தான் இது. நமது முதல் மந்திரி யார்? சட்டசபைக்கு உங்கள் தாலுகாப் பிரதிநிதி யார்? அதோ தெரிகிறதே அந்த மாதா கோயிலைப் பாருங்கள்; இது பழமையான கோயில். அந்தக் கொடி மரத்திலே சுழன்று பறந்திடும் தாயின் மணிக் கொடியைப் பார்த்தீர்களா? அதற்கு வணக்கம் செலுத்துங்கள்.

இந்தக் கோட்டை பலதரம் தாக்கப்பட்டது. பிரஞ்சியர் இருமுறை இதை முற்றுகை இட்டனர். மராடர்கள் இதனைக் கைப்பற்ற முனைந்தார்கள். ஐதரலியும் இரண்டு மூன்று முறை இதைத் தாக்கினான். தென்னிந்தியாவிலே இந்தக் கோட்டை பிரசித்தி வாய்ந்தது; தென்னிந்திய சரிதத்தை உருவாக்கியது. செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்பது இதன் பெயர்.

இனி, ஜார்ஜ் டவுனுக்குச் செல்வோம். அதோ தெரிகிறதே, அதுதான் இந்த மாகாணத்தின் நீதி மன்றம். அதன் மீது, ஒரு கலங்கரை விளக்கு அமைந்திருக்கிறது. அது 160 அடி உயரம் உள்ளது. இருபது மைல் தொலைவு வரையிலும் அதன் ஒளி சுடர் வீசும். கடலிலே செல்லுங் கப்பல்களுக்குக், கரை அருகிலே இருக்கிறது என்று இது அறிவுறுத்தும். இதன் மீது ஏறுவதற்கு நமக்கு நேரமில்லை. துறைமுகத்தையும் எட்டிப் பார்த்து அப்பால் செல்வோம். கூவம் நதியைப் பார்த்தோமே, அதன் நாற்றம் சகிக்கவில்லை அல்லவா? இதுதான் சென்னையிலே சிறந்த நதி. சிறிய கட்டுமரங்கள் செல்லுதற்குத்தான் இது உதவும். ஆழ்ந்து அகன்ற ஆறு சென்னையிலே இல்லை; பெரிய கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி, பாதுகாப்பாக நிற்பதற்குச் சென்னையிலே



பார்த்தவை:

எழும்பூர்; 'சென்டரல்'; நகர்மன்றம்;
நீதிமன்றம்; கோட்டை; கூவம் பாலம்;
பல்கலைக்கழகம்; செப்பாக் அரண்மனை;
சான்தோம் மாதா கோயில்; மயிலைச் சிவாலயம்.



பார்க்கத் தகுந்தவை :

வசதி இல்லை. ஆதலின், செயற்கைத் துறைமுகம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. துறைமுகத்துள்ளே அலை அடங்கி இருக்கும்; பண்டங்களைக் கப்பலிலே ஏற்றவும் இறக்கவும் பல்லாயிரர் பணி செய்கின்றனர். கொளும்பு, லண்டன், கல்கத்தா போன்ற மா நகரங்களுக்கும் மற்றும் பல இடங்களுக்கும் இங்கிருந்து கப்பல்கள் புறப்படும். துறைமுகத்திலே நுழைந்து சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதி வேண்டும்; அதைப் பெறுதற்கு அவகாசமில்லை; ஆதலால் மறுமுறை சாவகாசமாய் வந்து இதைப் பார்த்துக் கொள்ளலாம்.

இந்தஅகன்ற நெடும் பாதை கடற்கரையை ஒட்டி ஓடு கிறது. இங்கே—'ஜார்ஜ் டவுனி' லே தொடங்கி 'சான்தோம்' வரை அது செல்கின்றது. இதன் நீளம் சுமார் ஐந்து மைல். இதை 'மரீனு' என்பார்கள். சென்னையின் சிறப்பெல்லாம் இதன் சிறப்பே என்றல், அது மிகையாகாது. உலகிலே இதைப் போன்ற மரினு வேறெங்கும் இல்லை என்கின்றுர்கள். மாலை நேரங்களிலே நகர மக்கள் உல்லாசமாய் இங்கே உலாவ வருவார்கள். அப்போது, கடலிலிருந்து வீசுகிற மெல்லிய காற்று, பகலெல்லாம் தகிக்கிற வெப்பத்துக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கும். மற்ற இடங்களை எல் லாம் பார்த்து விட்டு, நேரமிருந்தால் நாமும் இன்று மாலை திருவல்லிக்கேணிப் பக்கம், இந்த மரினுவுக்குச் செல்வோம்.

சென்னையிலே அழகிய கட்டிடங்கள் பல உண்டு. நாம் சேப்பாக்கம் அரண்மனையைப் பார்த்தோம். ஆர்க்காட் நவாபுகளுக்கு, அது, முன்னம் உரியதாக இருந்தது. அதனை அடுத்து, பல்கலைக் கழகத்தின் பெருமிதமான கட்டிடங் களையும், நூல் நிலையத்தையும் பார்த்தோம். சிந்தாதேவி (சரசுவதி) யின் செழுங்கலை நியமம்தான் அது. பல்கலைக் கழகம் பி. ஏ.; எம். ஏ. போன்ற உயரிய பரீட்சைகளை நடத்துவது. பல்வேறு கல்வித் துறைகளிலும் மாணவர்க்குப் பயிற்சி தருவது.

சென்னையிலே இரண்டு பெரிய ரயில் நிலையங்கள் உண்டு. ஒன்று, 'சென்டரல்' நிலையம். இங்கிருந்து, பம்பாய் பங்களூர்களுக்கும், ஐதராபாத்துக்கும் ரயில் புறப்படு

கிறது. நீலகிரிக்கும், மேல் கடல்கரைக்கும் ரயில் புறப் படுவதும் இங்கிருந்துதான். எழும்பூர் நிலையத்திலே தஞ்சாவூர், திருசிராப்பள்ளி, மதுரை, திருவனந்தபுரம், கொளும்பு முதலிய இடங்களுக்கு ரயில் ஏறலாம். நாலா திசைகளிலிருந்தும், கடல் வழியாகவும், ரயில் வழியாகவும், கார் வழியாகவும், விண் வழி விமானத்தின் மூலமும் நாள்தோறும் சென்னைக்கு ஆயிரக் கணக்கிலே பிரயாணிகள் வந்து போகின்றார்கள்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தைக் கடந்துவிட்டோம்; அதோ! அந்தப் பக்கம் போக நேரம் இல்லை ; அங்கே அழகிய பூங்கா ஒன்றுண்டு ; அதிலே பொய்கைகள் விளையாட்டிடம் மிருகக் காட்சிசாலை அமைந்திருக்கின்றன. இதுதான் பிரசித்திபெற்ற 'ரிப்பன் கட்டிடம்'. இங்கேதான் நகரமன்றம் கூடுகிறது. கண்கவர் வனப்புடன் இந்தக் கட்டிடம் திகழ்கின்றதல்லவா. அருகிலே இருப்பது ஒரு மார்க்கட் (—சந்தை). இதுதான் பிரபலமான மூர்மார்க்கெட். இதனுள் நுழைந்தால், மைலாப் பூருக்கு இன்று போக முடியாது. முடியுமானால், திருவல்லிக் கேணிக்கும் சென்று திரும்ப வேண்டும் அல்லவா ?

மயிலாப்பூரிலே உள்ள சிவாலயம் மிகவும் பழமை யானது. மயிலாப்பூரிலே வணிகர் ஒருவர் இருந்தார் ; அவர் சிவநேசர். செல்வத்தில் சிறந்தவர். அவருடைய மகள் பூம் பாவை ; அவள், சிறுமி ; ஒரு நாள் அவள் பொழிலிலே, பூக் கொய்யப் புகுந்தபோது, பாம்பொன்று, மல்லிகைப் பந்த லிலே மறைந்து வந்து அவளைத் தீண்டிற்று. மணி மந்திர மருந்து முயற்சிகளாலும் ஏறியவிடம் இறங்கவே இல்லை. உடலை எரித்து எலும்பையும் சாம்பரையும் குடத்திலே யிட்டு, பொன்மணிகளால் அதனை அலங்கரித்து, கன்னி மாடத்திலே வைத்திருந்தார்கள். ஞான சம்பந்தர் மயிலாப்பூருக்கு வந்த போது கபாலீச்சுரத்துக்கு அந்தக் குடத்தைக் கொண்டுவரச் செய்து அவர் பதிகம் பாடினார். அவர் இசையமுதம் எலும்பை உயிர்ப்பித்தது ; குடம் உடைந்தது. பூம்பாவை உருப்பெற் றெழுந்தாள்.

'ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலைக்
கார்தருசோலைக் கபாலீச்சுரம்'

கபாலீச்சுரம் என்றது மயிலைச் சிவாலயத்தை. அருகே அல்லிக்கேணி ஒன்றுண்டு; அதன் மருங்கு பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார். அதனை ஆழ்வாரொருவர்,

'நீளோதம், வந்தலைக்கும் மாமயிலை மாஅல்லிக்கேணி'

என்று பாடினார்.

சென்னையின் அங்கங்களாக விளங்கும் இவ்வூர்கள் மிகப் பழையவை. கம்பெனியார் கட்டிய கோட்டை வளர்ந்தோங்கி விரிந்தபோது, வணிக நலங் காரணமாக அதனைச் சூழ்ந்து பல பேட்டைகள் தோன்றின; பெத்து நாய்க்கன் பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, தண்டையார் பேட்டை முதலிய அவற்றுள் சிறந்தவை. கீழ்ப்பாக்கம் சேப்பாக்கம், நுங்கம்பாக்கம் என்கிறார்களே — பாக்கம் என்பது கடற்கரைக் கிராமத்தை; பட்டினம் என்பதும் அதைத்தான். அகநாட்டூர் பட்டணம் எனப்படும். கோயில்கள், கோட்டை, பேட்டைகள், பாக்கங்கள்— அனைத்தும் ஒன்று சேர்ந்து, இன்று சென்னைமா நகரமாகத் திகழ்கின்றது.

சென்னையைச் சேர்ந்த அடையாறு, கிண்டி, பறங்கிமலை, பல்லாவரங்களும் பார்க்க வேண்டிய இடங்களே. சமீப காலத்திலே அடையாற்றில் ஐரோப்பியப் பெண்மணி ஒருவர் வசித்துவந்தார். அவர் பெயர் அன்னிபெசன்ட்; அவர் இந்தியர் பலராலும் கொண்டாடப் பட்டவர். இந்தியக் கலாசாரங்களிலே அவருக்குப் பற்றதிகம். தேர்ந்த புலமையும், தெளிந்த அறிவும் வாய்ந்தவர்.

கிண்டியிலே கவர்னர் மாளிகை ஒன்றிருக்கிறது. அப்பால், பறங்கிமலை. அது ஒரு சிறு குன்று; சுமார் 200 அடி உயரம் உள்ளது. அதன் உச்சியிலே ஒரு மாதா கோயில் உண்டு. இங்கே 2000 வருடத்துக்கு முந்திய ஓவியம் ஒன்றிருக்கிறதாம். தாமஸ் முனிவர் ஏசுநாதரின் சீடரல்லவா? தாமஸ் முனிவர், இந்த மாதாகோயிலுக்கருகே உள்ள மற்றொரு சிறு குன்றிலே கொல்லப்பட்டார் என்று சொல்லப் படுகிறது.

பல்லாவரம் இங்கிருந்து நாலே மைல்தான். அங்கே 500 அடி உயரமுள்ள சிறு குன்று ஒன்றுண்டு. அதன் உச்சியிலே பிரபலமான பள்ளிவாசல் ஒன்றிருக்கிறது. அதன் அருகே சில குடவரைக் கோயில்கள் இருக்கின்றன. 1200 வருடங்களுக்கு முன்னே குன்றுகளைக் குடைந்து செய்யப்பட்ட கோயில்கள் அவை.

சென்னைப் பிரயாணம் முடிந்தது; கண்டதைக் கேட்டதை நீங்கள் குறித்துக் கொண்டீர்கள் அல்லவா? நமது தலைநகர் எப்படி?

1. *சொல்லும் தொடரும் :*

துரைத்தனம்	சட்டசபை	செழுங்கலை நியமம்
அலுவலகம்	நீதிமன்றம்	நகரமன்றம்
ஆயம்	கலங்கரை விளக்கு	கலாசாரம்
காரியாலயம்	துறைமுகம்	குடைவரைக் கோயில்

2. *சிந்தனைக்கு :*

1. 'வர்த்தகப் பாதுகாப்புக் கென்று கட்டிய கோட்டை நாட்டை யாண்டது' — எப்படி?

2. ஊர், குறிச்சி, பாக்கம், பட்டணம், பட்டினம் பேட்டை, பட்டி, கோட்டை — என்னஎன்று சொல்லு?

3. ஜார்ஜ் டவுன், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, மூர் மார்க்கெட். சான்தோம், செயின்ட்தாமஸ் மௌன்ட் இந்த இடங்களுக்கு ஏன் ஆங்கிலப் பெயர்கள் வழங்குகின்றன? அவற்றுக்குத் தமிழ்ப் பெயரிடுவது சரியா? நீங்கள் என்ன பெயர் இடுவீர்கள்?

4. செப்பாக், டிரிப்லிகேன் என்று கேட்டோமோ — இந்தச் சொற்களின் தமிழ் வடிவம் என்ன? ஏன் அவை அப்படி உருமாறி வழங்குகின்றன? பார் பார்ஸ் பிரிட்ஜ் எது தெரியுமா?

3. *பயிற்சி :*

வாக்கியத்தைப் பற்றி :—4

1. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

(1) மாலை நேரங்களிலே நகர —— உல்லாசமாய் —— —— வருவார்கள்

(2) அப்போது, —— வீசுகிற —— காற்று, வெப்பத்துக்கு —— ஆறுதலாக ——

(3) தேர்ந்த —— தெளிந்த —— வாய்ந்தவர்

2. நீ வாழ்கிற ஊரைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது :—

5. தேவாரங்களைத் தேடியது

கடவுள்பால் அன்புகனிந்து பாடிய பாடல்களைத் தேவாரம் என்பார்கள். இவற்றைப் பாடியவர், அப்பர், சம்பந்தர், சுந்தரர். இவர்களை 'மூவர் முதலிகள்' என்பர். இவருடன் மணிவாசகரையும் சேர்த்து, சமயகுரவர் நால்வர் என்பர். கடவுளிடத்து வைத்த பேரன்பினுல் இவர்கள் மனமுருகிப் பாடிய இந்தப் பாடல்கள் இசைத் தமிழுக்கு இலக்கியம். அவை பல பண்களால் ஆனவை; பத்திச்சுவையும் பொருட் பொலிவும் உடையவை. கோயில்களிலே பதிகங்களை (பதிகம்-பத்துப்பாட்டு) ஓதும்படி கட்டளைகள் ஏற்பட்டன; நாட்டிலும் அவை பரவியிருந்தன. ஆனுல், நாளடைவிலே அவை கைவிடப்பட்டன; பாதுகாப்பார் இன்மையால் அவை வழக்கொழிந்தன.

முதலாம் இராசராசன் என்ற சோழவேந்தன், வீரனுய் விளங்கியது போலவே சிவபத்தனுகவும் திகழ்ந்தான் என்ருேம். தஞ்சையிலே இவன்கட்டிய இராசராசேச்சுரம் என்ற பெருங்கோயில் அவனுடைய வெற்றி, வீரம், பத்தி களுக்குச் சின்னமாக இன்றளவும் திகழ்கின்றது என்ருேம். ஒருசமயம், இவன் தன்பால்வந்த சிலர் தேவாரப் பதிகங் களைப் பண்ணுேடு ஓதக் கேட்டான். தேவாரம் முழுவதையும் வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பினுன். அவற்றைத் தேடும்படி நாடெங்கும் ஆள்விட்டான். அவை கிடைக்க வில்லை; அதனுல், மனம் உடைந்திருந்த மன்னன் செவியிலே நாரையூர் நம்பியின் அற்புதச் செயல் வீழ்ந்தது. இவ்வதிசயத்தை நேரிலே காண விரும்பி, இராசராசன் தன் பரிசனருடன் வாழைப்பழம், தேன், அவல், அப்பம், எள்ளுருண்டை முதலிய பண்டங்களை எடுத்துக் கொண்டு, நாரையூரை அடைந்தான். நம்பியை அழைத்து, விநாயக னுக்கு அபிடேக ஆராதனை செய்வித்தான். தான் கொணர்ந்த நிவேதனத்தைப் பிள்ளையார் உண்டருளியதைக் கண்ட இராசராசன் உடல் பூரித்தான்; உரோமம் சிலிர்த்தான்; நம்பியைப் பணிந்தான், 'ஐயனே! அடியேனுக்கு நீண்ட நாளாக ஒரு விண்ணப்பம் உண்டு; அதனைக் கேட்டு, வழி

செய்தல் வேண்டும். தேவாரம் இருக்குமிடம் தெரியவில்லை ; எங்கும்தேடினேன் ; கிடைக்கவில்லை' என்றான். 'மன்னவனே சற்றுப்பொறு' என்று, அரசன் விரும்பியசெய்தி தன்மனத்திலே உதயமாக, நம்பியாண்டான் பிள்ளையாரை வேண்டினான். வேண்டலும், சிதம்பரத்திலே கூத்தப் பெருமானுக்குப் பின்னேயுள்ள அறையில் தேவாரத் திருமுறைகள் சேமித்து வைத்திருப்பது தெரியவந்தது. நம்பி இதனை அரசனுக்கு அறிவித்தான்.

இராசராசன், நம்பியாண்டானையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, சிதம்பரம் சென்றான். தீட்சிதர்களை அழைத்துக் கேட்டுத், தேவாரம் குறிப்பிட்ட அறையிலே இருப்பதைத் தெரிந்தான். அறையைத் திறக்கத் தீட்சிதர்கள் விரும்பவில்லை. ஆதலின், அது, மூவர் கையடையாளங்களோடு முத்திரை இடப்பட்டிருப்பதாகவும், மூவர் வந்தபிறகே அதனைத்திறக்க இயலும் என்றும் தெரிவித்துவிட்டார்கள். மன்னவன் புத்திமான் ஆகையால், மூவர் திருவுருவங்களுக்குச் சிறப்புள அபிடேக ஆராதனைகள்செய்து, திருவுலாச் செய்வித்தான். அரசன் எண்ணத்தை அர்ச்சகர்கள் அறிந்துகொள்ளவில்லை. மூவர் முதலிகள் திருவுலாப்போந்து திருமுறையிருக்கும் அறைக்கு எதிரிலேவந்தபோது, அரசன் அர்ச்சகரை அழைத்து, 'மூவரும் வந்தார் ; அறையைத் திறந்திடுக' என்றான். ஏமாற்றமடைந்த தில்லை மூவாயிரவர், வேறுவழியின்றி அறையைத் திறந்துவிட்டனர். அறையிலே தேவாரத் திருமுறைகள் கரையான் புற்றிலே புதைந்திருந்தன. அதைக்கண்ட அரசன் மனங்கவன்று, குடங்குடமாக எண்ணெய்விட்டு, புற்று மண்ணைக் கரைத்து, ஒவ்வொரு ஏடாக எடுத்தான். பல ஏடுகள் சிதைந்திருந்தன. அதனால் அரசன் மனம் நொந்தான். 'இக்காலத்துக்கு ஏற்ற பதிகங்களை வைத்துவிட்டு, எஞ்சியதை மண்மூடச்செய்தோம்' என்ற அசரீரி கேட்டது. அதனால், மகிழ்ந்த மன்னவன் ஆடினான், பாடினான் ; அவன் மனத்தைத் தின்றுவந்த கவலைகள் தீர்ந்தன. அமுதம் பருகினவன்போல நெஞ்சம் தேறினான்.

அரிதின் முயன்று, ஏடுகளை எடுத்துச் சேர்த்தபோது சம்பந்தர் பதிகங்கள் 384 கிடைத்தன. நாவுக்கரசர் பதிகங்கள்

323 கிடைத்தன. சுந்தரர் பதிகங்கள் நூறே கிடைத்தன. இவற்றை அரசன் ஏழு திருமுறைகளாக (3+3+1) வகுத்தான். இவற்றைப் பாடும் வகை தெரியாது திகைத்த அரசன், திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண்ணொருத்திக்குத் தேவாரங்களிலே சில பண்ணுடன் ஓதவரும் என்று தெரிந்து, அவளைச் சிதம்பரத்துக்கு அழைப்பித்தான். நீலகண்டயாழ்ப்பாணர் ஞானசம்பந்தருடன் தல யாத்திரை செய்து, அவர் பாடிய பனுவல்களை யாழில் அமைத்துப் பாடியவர். அவர் மரபிலே வந்த இந்த மங்கை இசை ஞானம் உடையவர். ஆதலின், அவர் தேவாரங்களைப் பாடிக் காட்டினர். தேவாரங்களுக்கு இசை வகுக்கப்பட்டன. அதன்பின் பலரும் அவற்றுக்குப் பிரதி எடுத்துக்கொண்டனர். ஊர்கள்தோறும் தேவாரப் பதிகங்கள் பரவின. சிவாலயங்களிலே அவை ஓதப்பட்டன.

தேவாரத் திருமுறைகளைச் செவ்வையாகப் பயின்று, நம்பியாண்டார்நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்ற நூலை இயற்றினர். இராசராசன் வேண்டுகோள்மீது, நம்பி அறுபத்து மூன்று நாயன்மாரது சரித்திரத்தைச் சுருக்கி, அந்தாதி பாடினர். சேக்கிழார் பெரியபுராணம் செய்வதற்கு இது ஆதாரமாகியது. பின் வரும் பாடத்திலே பெரிய புராணத்தைச் சேக்கிழார் ஏன் பாடினர்? எங்கே பாடினர்? என்ற விவரங்களைப் படிக்கலாம்.

தேவாரங்கள், சமய தத்துவங்களை இன்னிசையிலே போர்த்து, நமது மனத்தை இயற்கை எழிலிலே ஈர்த்துக், கடவுளிடத்து நம்மை ஈடுபடுத்துவன. ஆணவத்தைப்போக்கி நல்வாழ்வைத் தருவன.

முதலாம் இராசராசன் சிறந்த சிவபத்தனாக இருந்தமை தமிழ்நாடு செய்த தவப்பயனே. பொல்லாப் பிள்ளையார் திருவருளாலும், நம்பியாண்டார்தம் பெருந் துணையாலும், தேவாரத் திருமுறைகளை அவன் வெளிப்படுத்தி யிராவிட்டால்,

இன்று "நீறெங்கே?
மாமறை நூல்தான் எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே?

இராசராசன் தான் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரத்திலே

நாற்பத்தெட்டு ஓதுவார்களைக்கொண்டு திருப்பதிகம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்தான். இவன் மரபிலே வந்த பிற மன்னரும் பல தலங்களிலே திருப்பதிகம் ஓத ஏற்பாடு செய்தனர். சிவாலயங்கள்தோறும் இன்று தேவாரம் ஓதப்படுகிறது.

1. *சொல்லும் தொடரும் :*

மூவர் முதலிகள்	இலக்கியம்	அபிடேகஆராதனை
திருமுறை	தேவாரப்பதிகம்	திருவுலா

2. *சிந்தனைக்கு :*

1. தேவாரங்களைப் பண்ணுடன் ஓதக் கேட்டிருக்கின்றீர்களா? தேவாரப் பதிகங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்துவையுங்கள்.

2. சைவசமயத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பது என்ன?

3. *பயிற்சி :*

வாக்கியத்தைப் பற்றி :—5

1. 1 இராசராசன் சிவபத்தனுகத் திகழ்ந்தான்
   2 கோயில்...திகழ்கிறது
   3 நான்...தேடினேன்
   4 மன்னவன்...திருவுலாச் செய்வித்தான்

மேலே கண்ட வாக்கியங்களிலே எழுவாய் பயனிலைகள் (திணைபால் எண் இடங்களிலே) எப்படி பொருந்தியிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

நிரப்பி எழுது :

2. 1 இராச ராசன் சிதம்பரம்—
   2 'மூவரும்—;அறையத்—'
   3 '—மண்மூடச் செய்தோம்'
   4 தேவாரம் நல்வாழ்வை—

4. *இலக்கணம் : எழுத்துக்களைப்பற்றி :*

வாக்கியம், அதன் வகைகள், எழுவாய் பயனிலைகள் இவற்றை அறிந்தோம். இனி சொற்களை ஆராய்வோம். சொற்களுக்குக் காரணமான எழுத்துக்களை நீங்கள் அறிவீர்கள். இது உங்களுக்குப் பழம் பாடம் அல்லவா? அதை ஞாபகப்படுத்துகிறோம்.

முதல் சார்பு என்று எழுத்து இருவகைப்படும்.
முதலெழுத்து உயிர் மெய் என்றிருவகைப்படும்.
உயிரெழுத்திலே, குறில் நெடில் சுட்டு வினு என்று நான்குவகையுண்டு.
மெய்யெழுத்திலே, வலி மெலி இடை என்று மூன்றுவகையுண்டு.
சார் பெழுத்திலே உயிர்மெய் ஆய்தம் என்று இரண்டையும் நீங்கள் அறிவீர்கள்.

தமிழ் எழுத்துக்களுக் கமைந்திக்கிற முதல் சார்பு உயிர் முதலிய பெயர்களின் காரணங்களைக் கவனியுங்கள்.

6. இந்தியாவும் பர்மாவும்

நமது நாட்டின் கிழக்கே உள்ளது பர்மா. அது இயற்கை வளம் நிறைந்த அழகான தேசம். இதற்கு மேற்கே வங்காளக்குடாக் கடலிருக்கிறது. வடக்கும், வடமேற்கேயும் சீனு, அஸ்ஸாம் முதலிய பிரதேசங்களிருக்கின்றன. தெற்கே மலாய் தீபகற்பமும், கிழக்கே சயாம் நாடும் எல்லையாக உள. பர்மாவின் பழங்குடிகள் பர்மியர்; இவர்களது மதம் பௌத்தம். இவர்களுக்குள் சாதி வேற்றுமைகளில்லை; சமயப்பாகுபாடுகளும் சமூகக்கட்டுப்பாடுகளும் இல்லை. பர்மியர் கட்டையான உருவினர். அவர்கள் நிறம் மஞ்சள்.

செட்டாகச் செலவு செய்து பொருளீட்ட அவர்கள் விரும்பார். இவர்கள் மங்கோலியர் என்ற மக்களினத்தைச் சார்ந்தவர்; ஆனால், பழக்கவழக்கங்களில் சீனர் முதலிய மங்கோலிய வகுப்பினரினின்றும் மாறுபடுகின்றனர். இந்துக்களின் கதைகளை ஒட்டியே இவர்களிடையேயும் கதைகள் வழங்குகின்றன.

இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் பல நூற்றுண்டுகளாகத் தொடர்பு இருந்து வருகிறது. பண்டை நாளில் கங்கைக் கரையில் வாழ்ந்தோர் பர்மாவிலே குடியேறினர்; பௌத்த

மதத்தைப் போதித்தனர். பர்மியருக்கு நூல்நூற்கவும் ஆடை நெய்யவும் கற்பித்தனர். காவிரி, கோதாவரி நதிகளுக் கருகே வசித்த இந்துக்களும் கடல் கடந்து பர்மா சென்றனர் ; ஐராவதி நதி தீரங்களில் குடியேறினர். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இது சரித்திரக்காரர் கூற்று. இப்போது பர்மாவிலுள்ள இந்து மக்களிற் பெரும்பாலோர் தென்னிந்தியரே.

இந்தியாவையும் சீனுவையும் இணைப்பது பர்மா. எனவே இந்தியரும் சீனரும் பர்மியர் வாழ்வை உருவாக்கினர் என்பது பொருந்தும். மதக்கோட்பாடு, அறத்தைப்பற்றிய கொள்கை, கலைஞானம், நாகரிகம், வாழ்க்கை முறை முதலியவை இந்தியாவினின்றும் சீனுவினின்றும் பர்மாவில் பரவின ; அவர் வாழ்வை வளம் பெறச் செய்தன. இந்தியாவிலே பிறந்த புத்த மதமே பர்மா, ஸயாம், கம்போடியா, மலாய் முதலிய இடங்களுக்குப் பரவியது. வங்காளக்குடாக் கடலைமட்டுமன்றி, அது சீனக் கடலையும் கடந்து சென்றது.

இந்தியாவிலுள்ள வைதிகக் கொள்கைகள் நீண்ட காலத்திற்கு முன்பே பர்மாவில் பரவியது. புரோம் முதலிய இடங்களில் வைதீக தெய்வங்களின் சிலை இருந்த சின்னங்கள் தென்படுகின்றன. குடியேறிய இந்தியர் இந்தியப் பெயரையும் சில பர்மிய நகரங்களுக்குச் சூட்டினர். பெகுவை அன்ஸாவதி என்றும், புரோமை ஸ்ரீ க்ஷேத்திரம் என்றும் அழைத்தனர். பர்மாவின் பழைய கோவில்களிலே காணப்படும் சித்திரம் இந்திய வேலைப்பாடே.

பண்டைய இந்தியாவிலே பிரசித்தி பெற்றிருந்த சருவகலாசாலை தட்சசீலம். இதில் ஆயிரக்கணக்கான பர்மிய மாணவர் பயின்றனர். பர்மிய அரசர்கள் வடமொழி நூல்களை ஆவலோடு படித்தனர். அவர்களுடைய நீதி மன்றங்களில் திராவிடரின் நீதி முறைகள் கையாளப்பட்டு வந்தன. பர்மியர் நாகரிகத்தையும் சரித்திரத்தையும் உருவாக்கிய பெருமை இந்தியாவிற்கே உரியது.

86994

முதல் முதல் 16-வது நூற்றுண்டில் போர்த்துகீசியர் பர்மாவில் குடியேறினர். பின் கிழக்கிந்தியக் கும்பினியார் அங்கு சில தொழிற்சாலைகளை வைத்தனர். ஆங்கில-பர்மியப் போர், ஆங்கில ஆதிக்கம் பர்மாவில் பரவிய விதம், முதலியவற்றை இந்திய சரித்திரத்தில் படிக்கலாம்.

ஆங்கில ஆட்சியிலிருந்து சமீப காலத்தில்தான் பர்மா விடுதலை பெற்று சுதந்திரநாடானது. பர்மியர் பலதிறப்பட்ட வகுப்பினரடங்கிய ஒரு பெருங்கூட்டத்தினர். எத்தேசத்தினருடனும் கலப்பு மணம் செய்து கொள்ளும் இயல்பினர். தேசபத்தியுடையவர். தேச முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவர்.

பர்மாவின் தலைநகரம் இரங்கூன். அங்குள்ள மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினரே பர்மியர்; பாதிக்கு மேற்பட்டவர் இந்தியர். இப்போது பர்மா வியாபாரத் துறையில் முன்னேற்றமடைந்திருக்கிறது. தொழிற்சாலைகள் அங்கே மலிந்திருக்கின்றன. இத்தகைய நிலைக்குப் பர்மாவைக்கொண்டுவந்த பெருமை இந்தியருக்கே உரியது. இது யாவரும் ஒப்பமுடிந்த கொள்கை. ஆங்கிலேயர், பர்மாவிலேற்பட்ட கலகம் குழப்பங்களை அடக்க இந்தியர் உதவியையே நாடினர்.

பர்மாவிலுள்ள தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், ரயில் நிலயங்களிலும், எண்ணெய் ஊற்றுக்களிலும், உழைக்கும் தொழிலாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர் இந்தியர். பர்மியத் தொழிற்சாலைகள் இந்தியத் தொழிலாளர்களையே நம்பி நடைபெறுகின்றன. இவர்களிலே தமிழர்கள் அதிகம். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலர் தமிழர்கள். பர்மாவின் போலீஸ், இராணுவ இலாக்காக்களிலும் இந்தியரே அதிகம். பர்மாவில் அகப்படும் வெள்ளியையும் பெட்ரோல் எண்ணெயையும் இந்தியா வாங்கி வந்தது. மேலும், தேக்கு அரிசி முதலியவையும் அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பர்மியர் விவசாயத்தையும் சில்லறை வியாபாரங்களையும் நடத்துவதற்கு, பெரும் பணம் வேண்டுமல்லவா? அவர்களுக்குப் பணம் கடனாகக்கொடுத்து உதவுவது தமிழ்

TB
031(6)
N49

நாட்டுச் செட்டியார்கள் என்ற தனவைசியர்கள். இவர்கள் செய்யும் இவ்வுதவியை மாஜி பர்மா கவர்னர் 1927-ம் ஆண்டிலே பெரிதும் பாராட்டினுர். அவர் கூறியதாவது :— 'நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் பர்மாவின் வாழ்க்கைக்கு இன்றியமையாதவர்கள். அவர்களுடைய உதவி இல்லா விட்டால், பர்மா இந்நாட்களில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது'.

பழையகாலம் தொட்டு இன்றளவும் இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுள்ள நெருங்கிய தொடர்புகளை ஒருவாறு தெரிந்துகொண்டோம். இனி எதிர்காலத்திலும் இந்த இரண்டு தேசங்களும் முன்னேற்றதிற்குரிய பலதுறைகளிலும் பரஸ்பர நம்பிக்கையோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படியானுல்தான் பழைய தொடர்புகள் புத்துயிர் பெறும். இரண்டு தேசங்களும் சேமமுறும். புதுவாழ்வு பெறும்.

1. *சொல்லும் தொடரும் :*

பழக்கவழக்கம்	திராவிடர்	சமயப்பாகுபாடு
சுரங்கம்	சமூகக்கட்டுப்பாடு	மதக்கோட்பாடு

2. *சிந்தனைக்கு :*

1. 'பர்மாவின் செழிப்புக்கும் செல்வத்துக்கும் இந்தியரே காரணர்? எப்படி?
2. பர்மியர் இந்தியர்—இவர்கள் உறவு இன்று எப்படியிருக்கிறது?

3. *பயிற்சி :*

1. பரஸ்பரம்—சமஸ்கிருதம்   கவர்னர்—ஆங்கிலம்
காவிரிக்கரை—தமிழ்   மாஜி—இந்துத்தானி.

4. *இலக்கணம் : சொற்களைப்பற்றி 1 :*

தமிழ் மொழியிலே சமஸ்கிருதம் இந்துத்தானி ஆங்கிலச் சொற்கள் பயில்வதை மேலே கண்டோம். அரபி, பாரசீகம், உருது, போர்த்துக்கீசியம், பிரஞ்சுச் சொற்களும் தமிழிலே வழங்குகின்றன. தமிழிலே வழங்கும் சமஸ்கிருதச் சொற்களை வடசொல் என்பார்கள்; ஏனைய அயன் மொழிச் சொற்களைத் திசைச் சொல் என்பார்கள்.

தமிழ்ச் சொற்கள் இருவகைப்படும்

(1) பெயர்ச்சொல்—பொருள்களின் பெயர்களைக் குறிப்பது.
(2) வினைச்சொல்—வினையை அதாவது தொழிலைக் குறிப்பது.

இந்த பாடத்திலே பயிலும் பெயர்ச் சொல் வினைச் சொற்களைக் கவனி.

7. சேக்கிழார் பெரிய புராணம் பாடியது

சென்னையும் சென்னையைச் சேர்ந்த பிறவூர்களும் அமைந்துள்ள பிரதேசம் தொண்டை மண்டலம் எனப்படும். இந்த நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சென்னை புழற்கோட்டத்தில் உள்ளது. ஒவ்வொரு கோட்டமும் பல சிறு நாடுகளாகப் பகுக்கப் பட்டது. சென்னை, எழுமூர்நாட்டில் உள்ளது. எழுமூர் இன்று எழும்பூர் என்று சொல்லப்படுகிறது. புழல் இருந்த இடத்து, இன்று புழல் ஏரி இருக்கிறது. அதுதான் சென்னையம் பதிக்கு வேண்டும் தண்ணீர் தருகிறது. புழற்கோட்டத்தை ஒட்டி, புலியூர்க் கோட்டம்; அதன் நாடுகளிலே ஒன்று, குன்றத்தூர்; குன்றத்தூர் பல்லாவரத்தின் மேற்கே ஆறு மைல் தொலைவில் இருக்கிறது.

குன்றத்தூர் இன்று சிற்றூரே; என்றாலும், அது 10, 11-ம் நூற்றாண்டிலே ஒரு பேரூராக இருந்தது. குன்றத்தூரின் மேல் கோடியிலே ஒரு சிறு குன்று இருக்கிறது. அதன் அடிவாரத்திலே அழகிய மண்டபம் ஒன்று உண்டு. குன்றின் உச்சியிலே குமரன் கோயில் ஒன்று இருக்கிறது. குன்றை யடுத்து மேல்புறம் நீர் வளம் நில வளம் செழித்த பள்ளத்தாக்கு; கீழ்புறம் தோப்பும், துரவுகளும் ஊரைச் சூழ்ந்து தோன்றுகின்றன. குன்றத்தூரைத் தற்போது நத்தம் என்று சொல்லுகிறார்கள். பழைய காலத்திலே ஒரூரானது, நத்தம், மடப்புறம், மடவளாகம், சேரி என்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றது. வீடுகள் அடங்கிய இடம் நத்தம், துறவிகளும் அவர் பரிசனரும் வாழுமிடம் மடப்புறம்; மடவளாகம் என்பது கோயிலைச் சார்ந்த இடம்.

இந்தப் பிரதேசம் முன்னொரு காலத்திலே காடாக இருந்தது. மாவளத்தான் என்ற சோழவேந்தன் இதனைக் காடு கெடுத்து நாடாக்கித், தென்னாட்டினின்றும் நற்குடி நாற்பத் தெண்ணாயிரவரைக் கொண்டு வந்து, இங்கே குடி ஏற்றினான். இந்தக் குடிமக்கள் அங்குள்ள காணிகளுக்கு உரிமை உடையவர்; முதன்மைப் பட்டமும் எய்தினவர். இவர்கள் கிழார் என்று அழைக்கப் பெற்றனர்; இவர்களுக்குக் கீழே உழுதுண்போர் உழுவித்துண்போர் பலர் உண்டாயினர்.

குன்றத்தூரிலே குடி ஏறியவர்களுள் கூடல்கிழான், புரிசைகிழான், சேக்கிழான் என்ற பல முதன்மைக் குடிகள் வாழ்ந்து வந்தனர். இக்குடியினர், அறிவு ஒழுக்கங்களிலே மேம்பட்டு, சிவ பத்தியிலும் சிறந்து விளங்கினர். சேக்கிழார் குடியிலே, அருண்மொழி, பாலறுவாயர் என்ற சகோதர ரிருவர் தோன்றினர். அருண்மொழி என்பது அக்காலத்து அரசர் பெயர். அரசர் பெயரைத் தம் மக்கட்கிடுவது அந்த நாள் மரபு. இளமையிலேயே சகோதரர் இருவரும் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தனர். மறைந்துபோன தேவாரத் திருமுறைகள் இவர்கள் பிறப்பதற்குச் சற்று முன்புதான் வெளிப்படுத்தப்பட்டன. ஆதலின், தேவாரங்களை நன்கு ஆராய்ந்து இவர்கள் சமய ஞானத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

அருண்மொழியின் அறிவாற்றல்களையும் ஒழுக்க சீலங்களையும் அறிந்த சோழ வேந்தன் அவரைத் தன்பால் வரவழைத்து, மந்திரியாக அமர்த்தி, அவருக்கு, உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தையும் ஈந்தான். மண்ணாசையினால் அரசன் போரிலே நாட்டமுடையவனாய் விடவே, நாடாட்சி அருண்மொழி என்ற உத்தம சோழப் பல்லவனைச் சார்ந்தது.

உத்தம சோழப் பல்லவன் சமயத்திலே சைவர்; அவர் காலத்திலே, அன்பே சிவம் என்பதான சைவ சமயம் தழைத்தோங்கி வளர்ந்தது. கும்பகோணத்துக்கடுத்த திரு நாகேசுரத்துச் சிவபெருமான் மீது, அவர் ஆறா அன்புடையவர். தம் பிறப்பிடமாகிய குன்றத்தூரிலே ஒரு கோயிலெடுத்து அதற்குத் திருநாகேசுரம் என்று பெயரிட்டு, வேண்டும் நிலபுலங்களை விட்டார். அவற்றைக் கண்காணிக்க மடவளாகத்தை உண்டாக்கினார். அந்த சிவாலயத்தை இன்றும் காணலாம். சிவபத்தியிலே சிறந்தது போலவே, அடியார் பத்தியிலும் அவர் சிறந்து விளங்கினார்.

மந்திரியின் நிலை இது; மன்னவனோ அமராபரணன்; அருங்கலை விநோதனாகவும் இருந்தான். பொழுதுபோக்காக 'சீவக சிந்தாமணி' என்ற சமண நூலைப் படித்து வந்தான். அது திருத்தக்கதேவர் என்ற சமண முனிவரால்

எழுதப்பட்டது ; காவிய ரசனை அமைந்தது. அதைப் படித்து அனுபவிப்பதால் சமண மதத்தை அரசன் தழுவி விடக்கூடும் என்று அமைச்சர் அஞ்சினர். ஆதலின் அரசனை அடைந்து, அவன் அனுபவித்து வரும் காவிய இன்பம் அவலமானது என்று கூறி, சைவ சமயப் பெரியாரது சரிதங்களை எடுத்துப் பேசினர். அது கேட்ட அரசன், அந்த சரிதங்களை ஒரு சேரத் திரட்டிப் பெருங் காவியமாக இயற்றித் தருமாறு வேண்டினன்.

உத்தம சோழப் பல்லவரும் அதற்கு ஒருப்பட்டுக் காவியம் பாடுவதற்குத் தகுதியான இடம், தேவாரத் திருமுறைகள் தேடி எடுக்கப்பட்ட சிதம்பரமே என்று, அரசனிடம் விடைபெற்று, பரிசனத்துடன் சிதம்பரம் சென்று தங்கினர். மூவர் முதலிகள் அருளிய தேவாரங்களை ஆராய்ந்தார். அடியார்களது பிறப்பு வளர்ப்புக்களையும் பெருமைகளையும் ஆராய்ந்தார். தாம் கண்டதையும் கேட்டதையும் ஒருங்குசேரத் திரட்டி, கடவுள் சந்நிதியிலே காவியத்தைத் தொடங்கினர். அப்போது ‘உலகெலாம்’ என்ற அசரீரி கேட்டது என்று புராணம் கூறுகிறது. உலகெலாம் என்று தொடங்கி, சுந்தரர் சொன்ன திருத் தொண்டத் தொகைஅடைவைப் பிடித்து, சிறந்த காவியம் ஒன்று பாடினர். ஒரு வருடத்திலே பாடி முடித்தார். சித்திரை மாதம் திருவாதிரை நாளிலே தொடங்கினர். மரபு தவறுமலும் காவியச்சுவை கெடாமலும் புராணம் நிறை வேறியது என்ற செய்தியைத் தெரிந்த அரசன், பரிவாரம் புடை சூழச் சிதம்பரத்தை அடைந்து, நல்லோரையில் நடராசப் பெருமான் சந்நிதியில் நூலை அரங்கேற்றம் செய்வித்தான். அமைச்சராய் இருந்த உத்தம சோழப் பல்லவருக்குத் ‘தொண்டர் சீர் பரவுவார்’ என்ற பட்டத்தையும் அளித்தான். அன்று முதல் அவர் தொண்டர் சீர் பரவுவார் என்ற பெயரால் அழைக்கப்பட்டார் ; என்றுலும், சேக்கிழார் என்ற குடிப் பெயரே பிற்காலத்தில் பிரபலம் பெற்றது. சேக்கிழார் தாம் இயற்றிய பெரியாரது சரிதங்களடங்கிய நூலுக்குத் ‘திருத் தொண்டர் புராணம்’ என்ற பெயரிட்டார். ஆனல் தமிழர் அதனைப் ‘பெரிய புராணம்’ என்றே சொல்லுகின்றனர்.

சேக்கிழார் சிதம்பரத்திலேயே தங்கிப் பெரிய புராணத்தைப் படிப்பதிலும் அதனைப் பொருள் விளங்கக் கூறுவதிலும் எஞ்சிய வாழ்நாளைக் கழித்தார்.

சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடச் செய்த சோழ வேந்தன் அனபாயன் என்ற இரண்டாங் குலோத்துங்கன். அவன் சிறந்த சிவபத்தன். சிதம்பரத்திலே அவன் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறன். இவன் காலத்திலே சோழராச்சியம் வடக்கே கிருஷ்ணையாறுவரை பரவியிருந்தது. இவன் காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி.

1. *சொல்லும் தொடரும்:*

மண்டலம்	நத்தம்	அருண்மொழி
கோட்டம்	மடப்புறம்	உத்தம சோழப் பல்லவன்
நாடு	மடவிளாகம்	தொண்டர்சீர்பரவுவார்

2. *சிந்தனைக்கு:*

1. ஆட்சிமுறைக்கு இன்று, மாகாணம், சில்லா, தாலூகா, கிராமம் என்று பகுக்கப்பட்டிருக்கிறது; சோழர் காலத்திலே அது எப்படி பகுக்கப்பட்டது? வேறுபாடு உண்டா?

2. பழங்காலத்திலே ஒரு கிராமத்தின் அங்கங்கள் எவை? குன்றத்தூரை உங்கள் கிராமத்துடன் ஒப்பிடு.

3. சிந்தாமணி என்ற காவியத்தை படிக்கக்கூடாது என்று சேக்கிழார் கருதியது சரியா?

3. *பயிற்சி:*

1. பக்தி — பத்தி　　　தத்வம் — தத்துவம்
சக்தி — சத்தி　　　பக்வம் — பக்குவம்
முக்தி — முத்தி　　　முக்யம் — முக்கியம்

இந்த சொல் வடிவங்களிலே எது சரி? ஏன்?

2. நீர்வளம்நிலவளம், தோப்புத்துரவுகள், நிலபுலங்கள்.

இவை இணைமொழிகள். இவை போன்ற பிற:—

அகடவிகடம்	அக்குத்தொக்கு	கரடுமுரடு
வம்புதும்பு	நகைநட்டு	வாழ்வுதாழ்வு

நீங்கள் அறிந்திருக்கும் இணைமொழிகளை ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்.

4. *இலக்கணம்:*

சொற்களைப்பற்றி 2:

பெயர்ச்சொற்கள் அறுவகைப்படும்:—பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்.

அனபாயன், சென்னை, ஆண்டு, கை, அழகு, இருத்தல்: போன்ற பெயர்ச்சொற்களை இந்த பாடத்திலே இருந்து எடுத்தெழுதி அவை இன்ன பெயரென்று குறிப்பிடு.

8. மின்சாரம்

நகரங்களிலுள்ள வீடுகளிலும் வீதிகளிலும் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் எரியும் விளக்குகளை நீங்கள் கண்டதுண்டா? அவைதாம் மின்சார விளக்கு எனப்படும். அதற்கு எண்ணெயும் நெருப்பும் தேவையில்லை. விளக்கினுள் சிறிய கம்பியும் வெளியே அதனுள் நுழையும் பெரிய நீண்ட கம்பிகளும் உங்களுக்குத் தென்படும். மின்சாரம் கம்பியின் வழியாய்ச் செல்லும் போது, (விளக்கை ஏற்றினால்) ஒளியுண்டாகிறது. மின்சாரமும், மின்னலின் சாரமாகிய மின் சார சத்தியும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் அவை குணத்திலும் செயலிலும் வேறுபட்டவை. கம்பிகளின் வழியாய் விளக்கேற்றும் மின்சாரத்தை ஓடும் மின்சாரம் என்று சொல்கிறார்கள்.

சுமார் 130 வருஷங்களுக்கு முன், கால்வனி என்பவர் தவளையின் கால்களில் இரண்டு வேறுபட்ட உலோகங்களைக் கொண்டு தொட்டார். அப்போது அந்தக் கால்கள், 'வெடுக்' கென்று சுருங்கிப் பின் உதைத்தன. இரண்டு உலோகங்கள் மிருக சரீரத்தோடு சம்பந்தப் படும்போது, மின்சார சத்தி உண்டாகுமென்று அவர் ஊகித்தார். பின் வால்டா என்னும் விஞ்ஞானி இரண்டு வெவ்வேறு உலோகங்களினால் செய்யப் பட்ட தகடுகளை எடுத்துத் தம் நாக்கின் மேற்பாகத்தில் ஒன்றும் கீழ்ப் பாகத்தில் மற்றொன்றும் படும்படி வைத்து இரண்டு தகடுகளின் நுனிகளையும் சேர்த்தால் மின்சார சத்தி உண்டாகும் என்று கண்டுபிடித்தார். இச் சத்தியின் காரணம் குறித்த தகடுகளின் நுனிகள் ஒன்று சேர்வதே என்றும், மனிதனது நாக்கு அம் மின்சார சத்தியை ஒரு புறத்தினின்றும் இன்னொருபுறம் கடத்துகிறதென்றும், ஊகித்தார்.

பல சோதனைக்குப் பின், செம்பும் நாகமும் அதிக மின்சார சத்தியை உண்டு பண்ணத் தக்கவை என்பது தெரிய வந்தது. காலம் செல்லச் செல்லக் கண்டு பிடித்த விஷயங்களை அதிகமாக ஆராய்ச்சி செய்து விருத்தி செய்தனர். மின்சார சத்தியை அதிகமாக உண்டாக்கும் முறைகளை அனுபவ மூலமாயும் ஆராய்ச்சி மூலமாயும் பலர் கண்டறிந்

தனர். இச்சத்தி எத்தன்மையது என்பதை அறியவும் கூறவு மியலாது. ஆனால் இதன் குணத்தையும் தொழிலையும் சோதனைகள் மூலம் அறியலாம். அவ்வறிவின் உதவியால் இச் சத்தியை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு உபயோகித்துக் கொள்ளலாம். இந்த ஆச்சரியமான சத்தி எத்தனை வகையான தொழில்களைச் செய்துவிடுகிறது!

'ஓடும் மின்சாரம்' செப்புக் கம்பியின் வழியாக எளிதாய் ஓடும். கம்பியின் பருமன் அதிகரிக்க அதிகரிக்கத் தடையின்றி இது செல்லும். மிக நுண்ணிய செப்புக் கம்பியின் வழியாய்ச் செலுத்தினால், அது இச்சத்தியின் ஓட்டத்திற்கு இடையூறு விளைவிக்கும். இதனால் இச்சத்தி உரசிக் கொண்டே செல்வதினால் சிறு கம்பி சூடடைந்து ஒளி விடும். அதிக சூடடையினும் உருகாத உலோகம் ஒன்றினாற் செய்த சிறு கம்பியின் வழியாக மின் சத்தி சென்று கொண்டிருக்கும் வரை, அக்கம்பி வெண்ணிறத்தோடு பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். இவ்விதமாகத் தான் மின்சார விளக்குகள் ஏற்படுகின்றன.



தற்காலத்தில் பல இடங்களிலும் காணப்படும் குமிழ் விளக்குகளை முதன் முதலிற் கண்டு பிடித்தவர் அமெரிக்கா நாட்டு எடிசன் என்னும் அறிஞர். ஏனைய விளக்குகளை விட இவ் விளக்கினால் மிக்க நன்மையும் சௌகரியமும் ஏற்படுகிறது. இவ் விளக்குகளில் அழுக்கு ஏறுவதில்லை. இவை அபாயம் விளைவிப்பது மில்லை: எரியும் அறையிலுள்ள வாயுவை உபயோகப் படுத்தாமலும், அசுத்தப் படுத்தாமலும் ஒளி வீசுகின்றன. மேலும் இவை காற்றாலும் மழையாலும் அணைந்து போகா. ஓரிடத்திலிருந்தவாறே ஒரு விசையை அழுத்தினால் பல விளக்குகளை ஒருங்கே ஏற்றவும் அணைக்கவும் முடியும்.

'நீங்கள் கண்டு பிடித்ததில் முதன்மையாகக் கருதுவது எதை? எது உங்களுக்கு மிக்க இன்பத்தை ஊட்டியது?

என்று எடிசனை சிலர் கேட்டனர். அவர், ' முயலும் போது மிக்க இன்பத்தை எனக்களித்தது பேச்சு இயந்திரம். என்றாலும், நான் முதன்மையாகக் கருதுவது மின்சார விளக்கே' என்றார்.

ஒரு நீளமான மிக மெல்லிய செப்புக் கம்பியைச் சுருட்டி வளைத்து, ஓர் இரும்புப் பெட்டிக்குள் அமைத்து வைத்து, அதன் வழியாகப் பலமான மின்சார ஓட்டம் ஏற் படும்படி செய்வதால், கம்பிச் சுருள் தகுந்த சூடு பெற்று அனலை வீசும். அப்பொழுது அதன் மேல், அடுப்பைப் போல் பாத்திரங்களை வைத்துச் சமையல் செய்யலாம். இம் முறையைப் பின்பற்றியே மின்சார அடுப்பு அமைக்கப்பட்டி ருக்கிறது. மின்சாரத்தின் உதவியால் போதுமான அள விற்குச் சூடு உண்டாக்கலா மாதலால் கனத்த உலோகத் தகடு களையும், பெரிய இரும்பு உத்திரங்களையும், குழாய்களையும் ஒன்றோடொன்று பொருத்துதல் போன்ற பல தொழில் களையும் மின்சார அடுப்பு, மின்சார உலை ஆகிய கருவிகளால் செய்து கொள்ளலாம்.

மின்சார சத்தியால் பதார்த்தங்களை ஒன்று சேர்த்துப் பிறிதொரு பொருளாக்கலாம். ஒரு பொருளை இரண்டு மூன்றாகப் பிரிக்கலாம். மின்சார சத்தியை நீருக்குள் பிர வேசிக்கும்படி செய்தால், அது நீரைப் பிரித்து அதனிடத்தில் அமைந்துள்ள இரண்டு ஆவிப் பொருள்களை நமக்குத் தரு கிறது. இந்த ஆவிகளின் தன்மை, தொழில் முதலிய விஷயங்களை நிபுணர்கள் கண்டறிந்திருக்கின்றனர். தங்கம் அல்லது வெள்ளியைத் தக்க திரவங்களில் கரைத்து, அக்கரை நீரின் வழியாக மின்சாரம் ஓடும்படி செய்தால், தங்கமோ வெள்ளியோ அதனின்று கக்கப்படும். அவ்விடத்தில் அக் கரைசலில் அமிழும்படி வேறு உலோகத்தால் செய்யப்பட்ட சாமானைக் கட்டித் தொங்கவிட்டால், அச் சாமான்மீது தங்க முலாம் அல்லது வெள்ளி முலாம் பூசப்படும்.

இன்னும் மின்சார சத்தியால் வெடிமருந்தைக் கொளுத்தி வெடிக்கும்படி செய்யலாம்; நரம்பு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தலாம்; மின்சார சத்தியால் மணிகளை அடிக்கலாம்; வண்டிகளை ஓட்டலாம்; தந்தி அடிக்கலாம்.

இவ்வாறு மின்சார சத்தியைப் பல வழிகளில் உபயோகித்துக் கொள்ளலாம். தற்காலத்தில் மின்சார சத்தியின் உதவியால் நடைபெறும் காரியங்கள் எண்ணிறந்தன.

1. *சொல்லும் தொடரும் :*

விஞ்ஞானி	ஆராய்ச்சி	அசுத்தம்
உலோகம்	குமிழ் விளக்கு	இடையூறு
அநுபவம்	பிரகாசம்	தங்கமுலாம்

2. *சிந்தனைக்கு :*

1. மின்சாரம் நமது வாழ்க்கையை எப்படி எளிதாக்குகிறது ?

2. நமது நாட்டிலே எங்கெலாம் எப்படி மின்சாரத்தை உண்டாக்குகிறார்கள் என்பதை நீ அறிவாயா ?

3. உன் வீட்டிலே மின்சார விளக்குகள் உண்டா ? அதற்கு மின்சாரம் எங்கிருந்து கொண்டு வரப்படுகிறது ?

3. *பயிற்சி :*

விளக்கு — விலக்கு
ஒளி — ஒலி — ஒழி
வழி — வளி — வலி

இந்தச் சொற்களின் பொருள் வேறுபாடுகளைக் கவனியுங்கள். இவை போன்ற சில : இதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

அளி — அழி	குளம்பு — குழம்பு
அளை — அழை	தளை — தழை
இளி — இழி	வாளை — வாழை
உளவு — உழவு	விளி — விழி
கிளி — கிழி	விளை — விழை

சில சொற்கள், பவழம், பவளம் ; மங்கலம், மங்களம் ; உளறு, உழறு; சுளி, சுழி ; லகர, ளகர வேறு பாடின்று எழுதப்படுகின்றன :

4. *இலக்கணம் :*

சொற்களைப் பற்றி 3 :

(4) திணை, பால், எண் அறுவகைப் பெயர்ச் சொற்களைப் பார்த்தோம் : பகுத்துணரும் அறிவுள்ள பெயர்களை ஒரினமாகவும் மற்றைய எல்லாவற்றையும் ஒரினமாகவும் பிரித்து, மனிதரும் தேவரும் உயர்திணை என்றும், உயிருள்ளது உயிரில்லாதது ஆகிய ஏனைய பொருள்களை அஃறிணை (உயர்வு) (அல் + திணை) என்றும் பிரித்திருக்கிறார்கள். எடிசன் - உயர் திணை ; மின்சாரம் - அஃறிணை. திணையிலே உள்ள பிரிவுக்குப் பால் என்பது பெயர். உயர் திணையிலே ஆண்களைக் குறிப்பது ஆண்பால் ; பெண்களைக் குறிப்பது பெண்பால். பலரைக் குறிப்பது பலர்பால். அஃறிணையிலே ஒன்று, பல, என்று பிரித்தெடுத்திருக்கிறார்கள். ஒரு பொருளையே குறிக்கும் பால் ஒருமை; பல பொருள்களைக் குறிக்கும் பால்கள் பன்மை.

9. திருமா பத்தினி

சோணுட்டிலே, காவிரி கடலொடு கலக்கும் இடத் தமைந்தது புகார் என்ற காவிரிப்பூம் பட்டினம். இது சோழ வேந்தரது பழைய தலைநகரம்; துறைமுகம். இந்நகரிலே மாசாத்துவான் என்பவன் ஒரு வணிக மன்னன். அவன் தன் மகன் கோவலனுக்கு, மாநாய்க்கன் மகள் கண்ணகியை மணம் புரிவித்தான். கண்ணகியின் தந்தை ஒரு பெரிய கடல் வணிகன். மணவாளராய கண்ணகியும் கோவலனும் தனி மாளிகையிலே வாழ்ந்து வந்தனர்; அறவோர்க் களித்தனர்; அந்தணரை ஓம்பினர்; தான தருமங்களைப்புரிந்து இவர்கள் இனிதாக இல்லறத்தை நடத்திவரும்போது, கோவலன், அழகும் ஆடல்பாடல்களிலே தேர்ச்சியும் வாய்ந்த மாதவி என்னும் நடிகையைக் காதலித்தான். கண்ணகியை மறந்தான். தன் கைப்பொருளை நாளும் அவன் செல விட்டான். கண்ணகியோ உத்தம மனைவி; கணவன் பிரிவுக்கு வருந்தினுள்; என்றுலும், வருத்தம் வெளித்தெரிவியாது ஒழுகினுள்.

ஆண்டுதோறும் வழக்கம்போல நடக்கும் இந்திரவிழா வந்தது. விழாவின் முடிவிலே, நகர மக்கள் தத்தம் பரிவாரங் களுடன் கடலாடுதற்குச் சென்றனர். கோவலனும், மாதவியும் கடற்கரை சென்று, ஓரிடத்தமர்ந்து, பாடல்களைப் பாடியும் யாழை வாசித்தும் பொழுது போக்கினுர்கள். அப் போது, தப்பெண்ணத்தால் அவர்களிடையே மனத்தாங்கல் ஏற் பட்டது. கோவலன், மனம் வேறுபட்டு, மாதவியைத் துறந்து தன் மனையை அடைந்தான். கண்ணகியைக் கண்டு அவள் முன், தன் தகாத நடத்தையை நினைந்து நாணி நின்றுன். மாதவிக்குக் கொடுக்கக் கையிலே பொருளின்றிக் கணவன் கவல்கின்றுன் என்று கருதிய கண்ணகி, ‘என்னுடைய இந்த இரண்டு சிலம்புகளையும் ஏற்றருள்க’ என்றுள். அதற்குக் கோவலன், ‘மதுரைக்குச் சென்று சிலம்புகளை விற்று, வணிகம் செய்ய விரும்புகின்றேன்; நீயும் உடன் வருக’ என்று, கண்ணகியை அழைத்துக்கொண்டு, அந்த ராத்திரி கடையாமத்தே யாரும் அறியாவகை புறப்பட்டான்.

காவிரியின் வடகரை வழியே சென்றான். அங்கொரு சோலையிலே, கவுந்தி அடிகளைக் கண்டான். கவுந்தி அடிகள் சைன சமயத்தைச் சார்ந்த தவ முதுமகள். மூவரும் வழி நடந்து உறையூர் சேர்ந்தார்கள்.

உறையூரிலே அன்று தங்கி இளைப்பாறி, அவர்கள் மறுநாள் புறப்பட்டு, வழிப்போக்கன் ஒருவனால், மதுரைக்கு வழி தெரிந்து நடந்தார்கள். வழியிலே ஒருநாள் காலையில் கோவலன் காலைக்கடன் கழிக்கப் பொய்கைக் கரைப்பக்கம் போனான். அங்கே, மாதவியால் அனுப்பப்பட்டுத் தன்னைத் தேடிவந்த கௌசிகனைக் கண்டான். கௌசிகன் மன்றாடி அழைத்தான். கோவலனுக்கோ திரும்பிச்செல்ல மனமில்லை. பிரிவால் வருந்தும் தன் தாய் தந்தையர்க்கு வணக்கம் தெரிவிக்கும்படிச் சொல்லி, அத்தூதனை அனுப்பினான். பின்பு கவுந்தியடிகளுடன் பிரயாணமாகி மதுரையை அடைந்தான். வைகையாற்றைத் தொழுது படகேறி, அதனைக்கடந்து, புறஞ் சேரியிலே, சமணமுனிவர் இருக்கையிலே தங்கினான்.

மறுநாட்காலையிலே, கோவலன் கவுந்தியடிகளை வணங்கித் தன் துயரங்கூறி வருந்தினான். அடிகள் தேற்ற அவன் தேறிக் கண்ணகியை அவன் பாதுகாவலிலே வைத்துத் தனியே சென்று மதுரையைச் சுற்றிப்பார்த்தான். அதன் வளங்கண்டு மகிழ்ந்து, திரும்பிச்சென்று, கவுந்தியிடம் மதுரையின் வனப்பையும் பாண்டியன் பண்பையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அப்போது, மாடலன் என்ற தன் பழைய நண்பன் அங்கே வர, அவனுடன் அளவளாவி யிருந்தான்.

கவுந்தியடிகள் தம்மிடம் வந்த மாதரி என்ற இடைச்சி யின் குணங்களைக் கருதி, கண்ணகியை அவள் பொறுப்பிலே ஒப்புவித்தாள். மாதரியும் மகிழ்ந்து ஏற்றுக், கண்ணகியைக் கோவலனுடன் அழைத்துச் சென்று, ஆயர்பாடியிலே தன்னுடைய மனை ஒன்றிலே அவர்களைக் குடியிருத்தினாள். சமையலுக்கு வேண்டிய பண்டங்களைத் தந்தாள். தன் மகள் ஐயையைத் துணை வைத்தாள். கண்ணகியும் பக்குவமாகச் சமைத்துத் தன் கணவனுக்குப் பரிமாறினாள். கோவலனும் உணவை முடித்து உவந்தான். தன் மனைவியை அருகில்

அழைத்து, அருமை பாராட்டித், தன் கூடா ஒழுக்கத்துக் கிரங்கினுன். ‘ சிலம்புகளிலே ஒன்றை விற்று விரைவில் வருவேன்: அதுவரை நீ ஆற்றியிரு ’ என்று கூறி, சிலம்பைப் பெற்றுச் சென்ருன். எதிர்ப்பட்ட அபசகுணங்களை அறியாமல், மதுரையின் ஆவண வீதியிலே புகுந்தான்.

பொற்கொல்லர் நூற்றுவர் பின் தொடர மிகுந்த ஆடம்பரத்துடன் நடந்து வரும் பொற்கொல்லர் தலைவனைக் கண்டு கோவலன், தான் கொணர்ந்த சிலம்பை விலை மதிக்குமாறு அவனிடம் காண்பித்தான். அவன் அதைப் பார்த்தான். அவன், முன்பு இராசமாதேவியின் சிலம்பை வஞ்சித்துத் திருடியவன் ஆதலால், களவு தன்னிடத்தது என்று வெளிப்படுமுன், (தான் கவர்ந்த சிலம்போடொத்த இதனைக் கொடுத்த) கோவலன் மீது குற்றத்தைச் சுமத்தக் கருதினுன். இதனை அரசனிடம் காட்டிவருமளவும் தன் மனைக்கருகிலே ஓரிடத்தைச் சுட்டிக் கோவலனை அங்கே இருக்கச் சொல்லி, அரண்மனைக்குச் சென்ருன். பாண்டியன் தன் அந்தப்புரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவனைக் கண்டு, ‘ அரசே ! கன்னக்கோலின்றி, சிலம்பு திருடிய கள்வன் அடியேன் கடைவாசலில் வந்திருக்கிருன் ’ என்ருன். பாண்டியன் தன் மனைவியை மகிழ்விக்க எண்ணினுன் ; ஆதலின் காவலரை அழைத்து, ‘ தேவியின் சிலம்பு இவன் கூறிய கள்வன் கையகத்ததாயின் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வாருங்கள் ’ என்ருன். தனதெண்ணம் பலித்ததென்று பொற்கொல்லன் காவலரை அழைத்துக் கோவலனிடம் சென்று, ‘ அரசன் ஆணைப்படி இவர்கள் சிலம்பு காண வந்தார்கள் ’ என்ருன். காவலர்கள் கோவலனைக் கண்டு, அவன் முகக் குறி முதலியவற்ருல் ‘ இவன் கள்வன் அல்லன் ’ என்று மலைந்தார்கள். அவர்களுள் ஒருவன், கொலையஞ்சாக் கொடியன் ; அவன் யோசனை இன்றித் தன் கைவாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினுன்.

ஆயர்பாடியிலே பலவித உற்பாதங்கள் தோன்றின. உற்பாத சாந்தியாக மாதரி முதலியோர் திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்தாடினுர்கள். கூத்தின் முடிவிலே, நீராட வைகையாற்றுக்குச் சென்று விட்டார்கள். அவ்வமயம் அக நகரினின்றும் வந்த ஒருத்தி, கோவலன் கொல்லப்பட்ட

செய்தியைக் கூறினுள். அது கேட்ட கண்ணகி பதறினுள். மூர்ச்சித்தாள்; பலவாறு கதறினுள். கணவனுடன் தானும் இறக்கத் துணிந்தாள். இடைச்சியர் சூழநின்று, சூரியனை நோக்கி, 'செங்கதிர்ச் செல்வனே! நீ அறிய என் கணவன் கள்வனே?' என்ருள். 'அவனைக் கள்வன் என்ற இவ்வூரைத் தீயுண்ணும்' என்ற அசரீரி எழுந்தது. அதனைக் கேட்ட கண்ணகி, மிகுந்த சீற்றங்கொண்டாள். தன்னிடமுள்ள மற் ெறுரு சிலம்புடனே கண்டவர் நடுங்கத் தெரு வழியே நடந்தாள். ஆங்காங்குள்ள பெண்களை நோக்கிப் பலவாறு புலம்பினுள். வெட்டுண்ட கணவனைச் சிலர் காட்டக் கண்டு அளவிலாத் துன்பத்தில் ஆழ்ந்து, பிரேதத்தின் மீது வீழ்ந்து கதறினுள். அவ்வளவிலே (குற்றுயிராய்க் கிடந்த) கோவலன் உயிர் பெற்றெழுந்து 'உன் மதிமுகம் வாடியதே' என்று, தன் கையால் அவள் கண்ணீரை மாற்றி 'இனி நீ இங்கிரு' என்று, தன் உடம்பை ஒழித்துத் தேவர் உலகு எய்தினுன்.

கண்ணகி பயங்கரமான பெருஞ்சீற்றத்துடன் சென்று, அரண்மனை வாயிலை அடைந்து, தன் வரவை வாயில் காவலனுல் அரசனுக்கறிவித்தாள். அப்போது, கோப் பெருந்தேவி தான்கண்ட தீச்சகுணங்களைப் பாண்டியனிடம் கூறிக்கொண்டிருந்தாள். அரசன் அனுமதிகிடைத்ததும் அவன் முன்சென்று, அவன் கேட்பத் தன்ஊர் பெயர் முதலிய கூறிக், கோவலனை அவன் ஆராயாது கொன்ற கொடுங் கோன்மையைப் பெருந்துணிவுடன் எடுத்தியம்பினுள். இதனை கேட்ட பாண்டியன் 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று, வெள்வேல் கொற்றங்காண்' என்ருன். கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைக் காட்டும்பொருட்டுத் தன்னுடைய சிலம்பினுள்ளே யிருக்கும் பரல் மாணிக்கம் என்ருள். அரசனும் தன் சிலம்பின் பரல் முத்து என்ருன். உண்மையைச் சோதிப்பதற்காகக் கோவலனிடமிருந்து கொண்ட சிலம்பு வருவிக்கப்பட்டது. அதனைக் கண்ணகி எடுத்து, தன் கையால் உடைத்தாள். உடைக்கவே, அதனுள் ளிருந்த மாணிக்கப்பரல் அரசன்முன் தெறித்தது. அது கண்ட பாண்டியன் பதைபதைத்து, 'யானேஅரசன். யானே கள்வன். பொற்கொல்லன் சொல்லைக் கேட்டு நீதி தவறிய என்னுல்,

அரசகுலமே பெரும்பழி அடைந்தது. இப்போதே என் ஆயுள் அழியக்கடவது' என்று புலம்பி, மனமுடைந்தான். தானிருந்த சிங்காதனத்தே வீழ்ந்து உயிர்விட்டான். உத்தம பத்தினி ஆகிய கோப்பெருந்தேவியும் கணவனை இழந்த துயரந் தாங்காது உடனுயிர் நீங்கினுள்.

தன் கணவன் கள்வனல்லன் என்பதை வழக்காடி மெய்ப் பித்த கண்ணகி, சினஞ் சிறிதும் தணியாளாய், மதுரையை அழிப்பேன் என்று வஞ்சினங்கூறி, அரண்மனையைவிட்டு வெளிஏறினுள். அகநகரை அடைந்து, தன்இடத்தனத்தைத் திருகிஎடுத்து நகர்மீது எறிய, நகரிலே தீப்பற்றிப் பல இடங் களையும் எரித்தது. அதனுல், வெம்மை ஆற்றுத மதுரையின் அதிதேவதை, கண்ணகி முன்தோன்றி, 'நான் இந்த நகரின் தெய்வம்; பாண்டியர் யாரும் கொடுங்கோலர் அல்லர்; நெடுஞ்செழியனும் அத்தகையானே. பதினுன்காம் நாள் பகல் சென்றபின்பு, நீ உன் கணவனைச்சேர்வாய்' என்று சொல்லி, அவளைத் தேற்றியது. பின்பு, கண்ணகி வைகைக் கரைவழியே மேற்றிசை நோக்கி நடந்தாள். சேரநாடு சென்று நெடுவேள்குன்றம் அடிவைத்தேறி, அங்கே ஒரு வேங்கைமர நிழலிலே நின்றுள். மலைவேடுவர் சிலர் அவளை நெருங்கித் 'தாங்கள் யாரோ' என்று வினவக், 'கணவனை இழந்து வந்த கடுவினையேன் நான்' என்றுள். அதுகேட்ட மலைவாணர் அஞ்சி, அவளை வணங்கி நின்றபோது, மலர்மாரி பொழியத் தேவர்குழாம் அங்குவந்து, கண்ணகிக்கு அவள் காதற் கொழுநனைக் காட்டி, அவளையும் விமானத்தேற்றி, விண் ணுலகு சென்றது. இந்த அற்புத நிகழ்ச்சியை நேரிலேகண்ட வேடுவர் வியப்பும் உவப்பும் கொண்டு, 'இந்த மாதராள் நம் குலத்துக்கே ஒரு பெருந்தெய்வமாவாள். குரவையாடி அவளை நாம் கொண்டாடுவோம்' என்று, தம்மவரை ஒருங்கழைத்து,

சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!
நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழ் ஓர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே.

என்று, ஆர்ப்பரித்து, மலைநாட்டுமுறைப்படி, குரவைக்கூத்

தாடினர்; அதற்குரிய பாடலைப்பாடி திருமாபத்தினிக்குப் பெருஞ்சிறப்புச் செய்தார்கள்.

1. *சொல்லும் தொடரும்:*

அறவோர்க்களித்தல்	வழிப்போக்கன்	கோப்பெருந்தேவி
அந்தணரோம்பல்	கூடாஒழுக்கம்	கொடுங்கோன்மை
கடையாமம்	ஆவணவீதி	நெடுவேள்குன்றம்
சைனசமயம்	அபசகுணம்	ஆர்ப்பரித்து
தவமுதுமகள்	உற்பாதசாந்தி	

2. *சிந்தனைக்கு:*

1. கண்ணகி, பாண்டிமாதேவி—இவர்களை ஒப்பிடு.
2. நெடுஞ்செழியன் நீதியைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?
3. திருமா பத்தினி என்று கண்ணகியைச் சொல்லுவதேன்?
4. தற்போது நாடோடியாக வழங்கும் கோவலன் கதை சிலப்பதிகாரத்தினின்றும் எப்படி வேறுபடுகிறது? எதனால்?

3. *பயிற்சி:*

ள, ழ வேறுபாடுகளைக் கண்டோம். கீழேவரும் (ரகர, றகரச்) சொற்களின் பொருள் என்ன?

அரம் — அறம்	உரி — உறி
அருகு — அறுகு	எரி — எறி
இரங்கு — இறங்கு	தெரி — தெறி
இரா — இறு	பரவை — பறவை
இரை — இறை	பெரு — பெறு

இவற்றைக் கவனத்திலே வைத்துக் கொள்ளுங்கள். சுரண்டு, சுறண்டு, சுருசுருப்பு, சுறுசுறுப்பு இவை 'ர, ற' வேறுபாடின்றி எழுதப்படுகின்றன.

4. *இலக்கணம்:*

'நான்' பேசுபவன் தன்னையும், 'நீ' முன்னிற்பவனையும், 'அவன்' வேறிடத்திருப்பவனையும் குறிக்கின்றன அல்லவா? இவற்றை முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என்பர்.

யான், நான்; யாம், நாங்கள், நாம்—தன்மையிடம்
நீ, நீர், நீங்கள்—முன்னிலை யிடம்.
அவன், அவள், அது, அவர்கள், அவை—படர்க்கையிடம்

10. ஏசுநாதரும் கிறிஸ்தவமும்

'கிறிஸ்து' என்றோ, 'ஏசு' என்றோ, 'ஏசு கிறிஸ்து' என்றோ, வழங்கப்படுகிற சமயாசாரியர் சரிதத்தை விவிலிய வேதத்தின் புதிய ஏற்பாட்டிலே காணலாம். அவருடைய வளர்ப்பு, கல்வி, வாலிபத்தைப் பற்றிய விவரம் தெரியவில்லை. பெத்தல்கேமிலே பிறந்தார்; நாசரத்திலே வளர்ந்தார்; கலிலேயாவிலே தமது கொள்கையைப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். அப்போது, அவருக்கு வயது சுமார் முப்பதிருக்கும். ஜெருசலத்திலே ரோம கவர்னர் பிலாத் என்பவரால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்.

ஏசுநாதர் ஒரு யூதர். யூதர்கள் பொறுமைசாலிகள்; புத்திசாலிகள். தாவிது, சாலமொன் ஆட்சி காலங்களிலே யூதர்கள் சிறிதுகாலம் கீர்த்தியுடன் திகழ்ந்தார்கள். பிற்காலங்களிலே அவர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளானார்கள். நல்வாழ்வுக்கு நாடினின்றிப் போவதற்குப் புகலின்றி, இரண்டாயிரம் ஆண்டுகளாகவே அலைந்து அவதிப்பட்டு, சிறைவாசம் சிரச் சேதங்களுக்கு ஆளாகியும், தங்கள் தனிப்பண்பை இழவாமல் நெடுங்காலம் தாக்குப்பிடித்து, தரணி எங்கும் வாழ்கிற யூதர் கூட்டம் சரித்திர வியப்பே. சாலமொன் காலத்திய புகழும் பொலிவும் தங்கள் சாதியிலே மீண்டும் மலரும் காலங்கருதி அவர்கள் அடங்கி வாழ்ந்தனர். சோர்ந்து போனாலும் தங்கள் நடுவே 'மெசையா' தோன்றித் தங்களைக் கைதூக்கி விடுவார் என்று அவர்கள் நம்பி இருந்தார்கள். ஏசுநாதரைத் தாங்கள் எதிர்பார்த்த 'மெசையா' என்று அவர்கள் முதலிலே எண்ணியிருக்கக் கூடும். ஆனால், விரைவிலே அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டனர்.

அவர்கள் பழக்க வழக்கங்களிலே சமூக கட்டுப்பாடு ஒழுங்குகளிலே பொதிந்து கிடக்கும் உண்மைப் பொருள்களை ஏசுநாதர் புலப்படுத்தினார். யூதர்தலைவர்கள் இதனால் திடுக்கிட்டனர். சமயத்தை வெறும் சடங்காசாரமாகக் கொண்ட வேடதாரிகளுக்கு ஏசுநாதர் பெரிய விரோதி. படாடோபமான பணக்காரர்களுக்கு அவர் அங்கலாயத்தார்.

செல்வமும் சிறப்பும் தேடித் தருவதாக அவர் உறுதி கூறவில்லே. அதற்கு மாருக மண்ணுலகிலே கடவுள் ராச்சியத்தை அமைக்கக் கருதினுர்; அதன் நிமித்தம் கையில் உள்ளதையும், துறந்துவிடத் தூண்டினுர். கதைகள் மூலம் தம் கருத்துக்களை வெளியிட்டார்; உவமைகளால் விளக்கினுர்; கிளர்ச்சி வீரராய்ப் புலப் பட்டார். யூதர்கள் விரும்பியது இது அல்ல. அவர்கள் எதிர்பார்த்தது ரோம ராச்சியத்தினின்றும் தங்களை மீட்கவல்ல ஒரு சாதியத் தலைவனை. ஆனுல் அவர்கள் ஏமாறினர்; ஆதலின், அவர்கள் ஏசுவை வெறுத்தார்கள். ரோம அதிகாரி யிடம் ராசத் துரோகியாக ஏசு ஒப்புவிக்கப்பட்டார். ரோமர் கடவுளைப் பற்றிக் கவலைப்படுபவர் அல்லர். ரோம கவர்னர் பிலாத் ஏசுநாதரின் சமயப் பிரசாரத்தைக் குறித்துக் கவலை கொண்டிருக்கமாட்டார். ஆனுல், யூதருக்கும் ரோம வேந் தனுக்கும் அஞ்சி ஏசுவை ஓர் அரசியல் விரோதியாக அவர் தீர்ப்புக் கூறினுர். இனத்தாராலேயே குற்றஞ் சாட்டப்பெற்ற ஏசுவுக்குத் தண்டனை சிலுவை. இது பிலாத்துவின் தீர்ப்பு.

சிலுவையிலே ஏசுநாதர் அறையப்பட்டார். அப்போதும் அவர், 'இன்னது என அறிகிலார் தாம் செய்வது; இவர் பிழையை மன்னியும்' என்று, இறைவனை வேண்டினுர். மரண வேதனையிலே 'கடவுளே! கடவுளே! என்னை ஏன் கைவிட்டாய்!' என்று தொடங்கும் வீரசங்கீதத்தை வாய்க் குள்ளே பாடினுர். தெரிந்தெடுத்த சீடர்களே மறுதலித் தார்கள். அவர்களிலே ஒருவன் துரோகியாகவும் மாறினுன். கிறிஸ்தவ சமயம் வளர்ந்த பிற்காலத்திலே உலகம் எங்கும் கோடானுகோடி மக்களுக்கு ஏசுநாமம் செபத்துக்கும் தியானத்துக்கும் உரிய தாரகமாயிற்று. ஆனுல், சிலுவையிலே இடப்பட்டபோது, அவர் பாலத்தீனத்துக்கு வெளியே அறியப்பட வில்லை.

ஏசுநாதர் தத்துவம் எப்படி பரவியது? யூதர் நடுவே அவருடைய பிரதம சீடர்களிலே சிலர் பிரசாரம் செய்து வந்தனர்; வேறுசிலர் அயல்நாடுகளிலே பிரசாரம் செய்தனர். அவர்களில் சிறந்தவர் பவுல். அவர் ஏசுநாதரைப் பார்த்ததே யில்லை; பாராதது மட்டுமல்ல, வாலிபகாலத்திலே அவர்

கிறிஸ்தவரது பரம விரோதியாகவும் இருந்தார். கிறிஸ்தவர்களைத் திரட்டி, சிறையிலிட அவர் சென்றபோது, தென்பட்ட தெய்வக் காட்சியில், அவர் மனம் மாறினார்; கிறிஸ்தவரானார். அறிவாற்றல்களிலே தேர்ந்த பவுல் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதிலே வெற்றிபெற்றார். ஆதிக் கிறிஸ்தவர் மதப்பற்று மிகுந்தவர். தேவலோக சக்கிரவர்த்தியாகிய கடவுளை அல்லாமல் பூலோக சக்கிரவர்த்தி ஆகிய ரோம வேந்தர் உருவங்களை வழிபட அவர்கள் மறுத்தார்கள். அது ராசத் துரோகமாகக் கருதப்பட்டது. அதனால், ஆதிக் கிறிஸ்

தவர்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள். சிங்கங்களின் முன் விடப்பட்டார்கள். இந்த ஆத்ம பரித்தியாகிகளைப் பற்றிய கதைகளை நீங்கள் அறிவீர்கள். கொள்கைக்காக ஒருவன் தன்னைப் பலியிடத் துணியும்போது, அவனை அல்லது அவன் மேற்கொண்ட கொள்கையை அடக்க யாராலும் முடியாது. கிறிஸ்தவம் கிளர்ந்தெழுந்தது. கி. பி. நாலாம் நூற்றாண்டிலே ரோம வேந்தன் ஒருவன் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினான். அதனால் அது ரோம சாம்ராச்சியத்தின் அரசாங்க மதமாக மலர்ந்தது. நாளடைவிலே அது உலகமதமாய் உயர்ந்தது.

ஏசுநாதர் ஏன் அவதரித்தார்? அவர் அறிவுறுத்தியது என்ன? கடவுளே பிதா; மானிடரெல்லாம் சகோதரர்

என்று காண்பிப்பதற்கே அவர் அவதரித்தார். அன்புடன் பணி செய்வதற்கே நாம் பிறருடன் பழகவேண்டும் என்று போதித்தார். சரீரத்தைமாத்திரம் வதைக்கக்கூடிய பகைவர்க்கு நாம் பயப்படவேண்டியதில்லை; பலனை இச்சிக்காமல், பிதாவின் கட்டளையை நிறைவேற்றி, நமது கடமைகளைச் செய்யவேண்டும் என்பதை அவர் தமது வாழ்க்கையின் மூலம் காண்பித்தார்.

ஏசுநாதரை ஒருசமயம் சாஸ்திரியார் ஒருவர் வேதத்தில் எந்தக்கற்பனை முக்கியமானது என்று கேட்டார். அதற்கு ஏசுநாதர், 'உன் ஆண்டவனுகிய கடவுளிடம் உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆன்மாவுடனும் உன் முழு மனதுடனும் அன்பு கூரவேண்டும்' என்றுர். இதுவே முதன்மையான கற்பனை; அடுத்தது, 'உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல, உன் அயலானிடத்திலும் நீ அன்பு கூர்தல் வேண்டும்' என்பதுவே. இதனுல், அன்பின் மூலமும் நாம் பிறருக்குச் செய்யும் தொண்டின் மூலமும் கடவுளை வழிபட வேண்டும் என்பது தெரிகிறதல்லவா?

1. *சொல்லும் தொடரும்:*

சமயாசாரியர்	கோடானுகோடி	விவிலியவேதம்
சடங்காசாரம்	குறுகியநோக்கம்	ஆத்மபரித்தியாகி
சமயவெறியர்	கடவுள் ராச்சியம்	இடைச்செருகல்

2. *சிந்தனைக்கு:*

1. யூதர்கூட்டம் சரித்திர வியப்பே—ஏன்?
2. தமிழ் நாட்டிலே கிறிஸ்தவம் பரவிய சரிதத்தை நீங்கள் அறிவீர்களா?
3. சமயம் வாழ்க்கைக்கு அவசியமா?

3. *இலக்கணம்:*

வேற்றுமை என்றுல் என்ன?; பொருளை வேறுபடுத்துவன வேற்றுமை.

2-ஐ; 3-ஆல் ஒடு ஓடு; 4-கு; 5-இன்; 6.அது. 7-இல் முதல் மேல், இடம். முதல் வேற்றுமை என்பது எழுவாயை; விளி வேற்றுமையிலே பெயர் திரிந்து வரும். யான், யாம், யாங்கள், நாம்; நீ, நீர், நீங்கள், தான், தாம், தாங்கள்:—இவற்றை 2 முதல் 7 வேற்றுமைகளிலே எழுது.

11. நூல் நிலையம்

'உலகம் நிலைபெறுவது செல்வப் பெருக்கினுலன்று; அது மேன்மை வாய்ந்த எண்ணங்களாலும் நோக்கங்களாலுமே நிலைபெறுகின்றது'. இப் பொன்னுரை தங்கமயமான பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. எங்கே? அமெரிக்காக் கண்டத்தின் ஒரு பெரிய நூல் நிலையத்தின்மீது. யாவரும் இதை எளிதிலே காணலாம்.

உயர்ந்த எண்ணங்களையும் நோக்கங்களையும் பொது மக்களுக்கு ஊட்டுவது புத்தகாலயம் அல்லது நூல் நிலையம். அறிவுத் தெய்வத்தின் கோவில் புத்தகாலயம். நம் கவலைகளையும் துயரங்களையும் எளிதில் மறக்கச் செய்வது நூலாராய்ச்சி அல்லவா? நல்ல நூல்நிலையத்தில் அருமையான நூல்களைக் காணலாம். அதனுதவியால் நாம் நமக்கு விளங்காத அரும் பதங்களையும் சொற்றொடர்களையும் எளிதில் அறியலாம். எப்படி? அங்கே நிகண்டுகளும், அகராதிகளும், பொருளடக்கங்களும் இருக்கின்றன. இன்னும் விஞ்ஞானத்தை அறியலாம். இயற்கையின் அற்புதங்களையும் மனிதனின் அறிவுத்திறனுல் ஏற்பட்ட புதுமைகளையும் காணலாம். சரித நூல்கள் இறந்தகால நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. காவியங்களும் நாடகங்களும் கதைக் கொத்துகளும் நம் உணர்வை உருக்கி உள்ளத்திற்கு இன்பமளிக்கின்றன.

செல்வமிக்க நாடுகளிலே புத்தகாலயத்தின் தோற்றம் எப்படியிருக்கிறது? விசாலமான அறை. பளிங்கு கற்களாலான சுவர்கள். சுகமாக அமர்ந்து படிக்க நாற்காலி மேசை முதலான ஆசனங்கள். கண்குளிர ஒளிவீசும் அழகிய விளக்குகள். மேலும் அலங்காரம் அவற்றை அழகுக் கோயில்களாகச் செய்கிறது. சுவர்களைச் சுற்றிலும் உன்னதமான அழகிய அலமாரிகள். அலமாரிகளில் அழகாக அடுக்கப்பட்ட புத்தகங்கள். இவை அழகை மலரச் செய்கின்றன.

வாசகசாலை புத்தகாலயத்தின் ஓர் அமிசம். தின, வார, மாதப் பத்திரிகைக் குவியல்களை அடுக்காகக் காணலாம்.

அங்கே. சங்கீத, சிற்ப சாலைகளும் புத்தகாலயத்தின் முக்கிய அமிசம். புத்தகாலயத்தில் கூடுவோர் பல நூல்களையும் தாமே கற்று இன்புறுவதுபோல், கேள்வியால் இன்புறும் வண்ணம் சொற்பொழிவுகளும் சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறுகின்றன. குத்து எழுத்துக்களால் எழுதிய புத்தகங்களைக் குருடர் கற்று அறிவுறுவர். அவைகளையும் புத்தகாலயத்தில் காணலாம். குருடர் அந்நூல்களை விரல்களால் தடவிப் படிப்பர்.

அறிவைப் பரப்ப உதவும் புதிய சாதனங்களில் புத்தகாலயமும் ஒன்று. முன் காலத்தில் வெகு சிரமத்துடன் கையால் எழுதப்பட்ட ஏடுகளைத் தொகுத்துப் புத்தகாலயம் ஆக்கினர். அச்சு வித்தை கண்டுபிடிக்கப்பட்டபின் புத்தகங்கள் பெருகின. பண்டை நாளில் கோவில்களைச் சார்ந்த கல்விச் சாலைகளில் நூல்கள் தொகுக்கப்பட்டன. சமயத்துறவிகள் வசித்த மடங்களில் சமயசம்பந்தமான நூல்கள் தொகுக்கப்பட்டன.

சமயத் துறவிகளைப்போல் அரசர்களும் நூல்நிலையங்களை அமைத்தனர். நம் நாட்டிலுள்ள நூல்நிலையங்களில் பெரியது தஞ்சை மன்னருடைய நூல்நிலையம். இந் நூல்நிலையத்தை 'சரஸ்வதி மஹால்' என்றழைப்பர். இங்கே பல அரிய பழைய நூல்களும் கையெழுத்துப் பிரதிகளுமுண்டு. இந் நிலையத்திலுள்ள நூல்களில் மிகப் பெரியது சிவபாரதம். இதில் சிவாஜியையும் அவர் முன்னோர் வரலாற்றையும் காணலாம். இப் புத்தகாலயம் அந்நாளில் உலகிலேயே மிகப் பெரியது ; முக்கியமானது என்று டாக்டர் பர்னல் கூறுகிறார்.

முந்நூறு ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்ட புத்தகக் கூட்டமே 'சரஸ்வதி மஹால்'. தஞ்சையை ஆண்ட ஆந்திர நாயக்க அரசர்களும் அதன்பின் ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களுமே இதனைச் சேகரித்தனர். இதிலே ஓலையிலும் காகிதத்திலும் எழுதப்பட்ட முப்பதினாயிரம் புத்தகப் பிரதிகள் காணப்படுகின்றன.

மக்களின் மடமை இருளைப் போக்கக் கிராமங்களிலும் நகரங்களிலும் புத்தகாலயம் நிறுவல் வேண்டும். அதுவும்

மக்கள் தகுதிக்கேற்ற நூல்களைக் கொண்டிருக்கவேண்டும். தற்போது, கல்லூரி பல்கலைக்கழகங்கள் முதலியவற்றுள் நூல்நிலையங்கள் நிறுவப்பெற்றுள்ளன.

கோயில், பள்ளிக்கூடம் போன்று நூல் நிலையமும் கிராமத்தினருக்கு இன்றியமையாதது. சுகாதாரத்தைப் போல் அறிவைப் பரப்பவும் மிகுந்த முயற்சி கொள்ள வேண்டும். சரியான முறையில் நூல்நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் கிராமவாசியினிடம் நாட்டுப்பற்று, நாகரீகம், ஒற்றுமையுணர்ச்சி, முன்னேற்றத்தில் விருப்பம், சீர்திருத்த இயக்கங்களில் வெறுப்பற்ற தன்மை முதலியவை ஏற்படும். அதனால் அவர்கள் கிணற்றுத் தவளையைப் போல் இராமல் உலக விஷயங்களை அறிந்து வாழ்க்கையை வளம்பெற நடத்துவார்கள். புத்தகாலயங்களால் ஏற்படும் நன்மையை எல்லோருக்கும் எடுத்துக்கூற சென்னையிலே நூல்நிலைய பிரசாரசங்கம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது.

மக்களுக்குக் கண்போன்றது கல்வி ; கல்வியின் எல்லையும் பரப்பும் வரவரப் பெருகி வருகின்றது. வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான நூல்கள் வெளிவருகின்றன. இவை பலதிறத்தன ; பல துறையன. பழங்காலந்தொட்டு நாளிதுவரையுள்ள ஆயிரம் ஆயிரம் அறிஞர்கள் பற்பல மொழிகளில் எழுதிவைத்துள்ள கருத்துக்கள், கற்பனைகள், சிந்தனைகளை நூல்கள் நமக்கு உதவுகின்றன.

அறிவினால் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவின்றிப் பரந்து கிடக்கின்றன. நூல்கள் மலிந்து பெருகிக் கிடக்கின்றன.

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கில் பிணிபல ;—தெள்ளிதின்
ஆராய்ந்து, அமைவுடைய கற்பவ, நீர்ஒழியப்
பால் உண் குருகின் தெரிந்து.

நமது நாட்டு மக்களை அறியாமை இருள்போலச் சூழ்ந்திருக்கிறது. எழுதப்படிக்கத் தெரியாத நிரட்சரகுட்சிகள் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு சதம் என்று கணக்கிடப் படுகிறது. ஆழ்ந்து அகன்ற இவ்வறியாமையைப் போக்க

அறிஞரும் அரசாங்கத்தினரும் ஒன்றுகூடி முயல்வது அவசியம், இம்முயற்சியில் முக்கியமாய் நாம் மேற்கொள்ள வேண்டியது, நூல் நிலையங்களை அங்கங்கே நிறுவுவதேயாம். அறிவு பெருகி வளர்தற்கு அதனினும் சிறந்த கருவி இல்லை.

1. *சொல்லும் தொடரும் :*

பொன்னுரை	அரும் பதம்	கதைக்கொத்து
நூலாராய்ச்சி	அறிவுத்திறன்	சமயத்துறவி

2. *சிந்தனைக்கு :*

1. உங்கள் ஊரிலே நூல் நிலையம் இருக்கின்றதா ?

2. பத்திரிகை படிக்கும் பழக்கம் உண்டா ? மாதசஞ்சிகைகளிலே நீங்கள் விரும்புவது எது ? எதனால் ?

3. நவீனங்கள், நாடகங்கள், சிறுகதைகள்—உங்களுக்குப் பிடிப்பது எவை ?

4. தற்போது தமிழிலே வெளிவந்த புத்தகங்களிலே உன்னிடம் இருப்பன எவை ?

3. *பயிற்சி :*

திருத்தி எழுது :

ஏனையத்தேசம்	ஆனஉடன்	புத்தகங்கள்கிடையாது
நான்ங்கு	சிறிதுநாள்	குளம்கட்டினான்
மக்கள்கள்	ஒவ்வொருபையன்களும்	

4. *இலக்கணம் :*

வினைச்சொற்களைப்பற்றி 1.

பெயர்ச்சொற்கள் அவற்றின் திணை பால் எண் இடம் வேற்றுமைகளை அறிந்தோம். வினைச்சொல் என்றால் என்ன ? வினையை அதாவது, தொழிலைக்குறிப்பதல்லவா வினைச்சொல். இராமன் வந்தான்; அவன் வீட்டைக் கட்டினான். இங்கே இராமனுடைய வருதல், கட்டுதல் தொழில்களை வந்தான், கட்டினான் என்பன குறித்தல் காண்க. வந்தான் என்பதற்கு செயப்படுபொருள் இல்லை. கட்டினான் என்பதற்கு செயப்படு பொருள் உண்டு ; மண்ணால், கல்லால் வீட்டைக் கட்டினான்.

இந்த பாடத்திலே பயிலும் (செயப்படுபொருள் உள்ள இல்லாத) வினைகளை எடுத்தெழுது.

12. குமரகுருபரர்

சோழ பாண்டியர் ஆட்சி சிதைந்த பிற்காலத்திலே சிவ நெறியும் செந்தமிழும் சீர்குலைந்தபோது, மெய்கண்டதேவர் முதலிய பெரியார் பலர் தோன்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள். மடங்கள் பல எழுந்தன. அதிலே வாழ்ந்த துறவிகள் பலரும் தம்மையடைந்தார்க்கே சிவஞானத்தை அறிவுறுத்தி வந்தார்கள்; இஸ்லாமும் கிறித்தவமும் தலை எடுத்தன. பாமரமக்கள் இந்துமத உணர்வின்றி ஒரு சமயத் தலைவரை நாடிநின்றனர். அப்போது 'சிவலோகம்' ஆகிய தென்பாண்டி நாட்டிலே குமரகுருபரர் தோன்றிக், குமரிமுனை முதல் பனிமலைச்சாரல் வரை சைவமும் தமிழும் சிறப்புற்றோங்க அருஞ் சேவைபுரிந்து, பெருவாழ்க்கை வாழ்ந்தார். தமது நிறைமொழியால் நாயக்க மன்னனையும் முஸ்லிம் வேந்தனையும் தம்வயமாக்கி, அவர்களை செந்நெறிப்படுத்தினர். அவர் அருளிய நூல்களையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் நீங்கள் அறிவது அவசியமே. இவரது சரிதத்தைக் காலஞ் சென்ற பெரும்பாவலர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை செய்யுள் வடிவிலே பாடியிருக்கிறார்.

தாம்பிரபரணி நதிதீரத்திலே ஒன்பது கைலாசங்களும் நவதிருப்பதிகளும் அமைந்திருக்கின்றன. அவ்வூர்களிலே ஒன்று, ஸ்ரீவைகுண்டம். இது, திருச்செந்தூருக்கும் திருநெல்வேலிக்கும் நடுவே, நம்மாழ்வார் பிறந்த ஆழ்வார்திருநகரிக்கு அருகே உள்ளது. தற்போது இது ஒரு தாலூகாவின் தலைநகர்; இதன் வடபகுதி ஸ்ரீகைலாசம் என்ற பெயர் பெறும்; அங்கே முந்நூறு ஆண்டுகளின் முன்னம் பரம்பரையாய் வந்த சைவகுலத்திலே குமரகுருபரர் தோன்றினர். இவர் தந்தை சண்முக சிகாமணிக் கவிராயர். அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கினர். குமரகுருபரர் குழந்தையாய் இருந்தபோது வாய்பேசாமல் இருந்தார். ஐந்து பிராயம் ஆகியும், அருமையாய்ப் பெற்ற தங்கள் மகவு மௌனமாய் இருத்தலைக்கண்டு பெற்றோர்கள் மனக்கவலை கொண்டார்கள்.

நாளடைவிலே அது பேசக்கூடும் என்று பல நாள் எதிர் பார்த்திருந்தது வீணாயிற்று. கவிராயர் வீட்டுப் பிள்ளை மூங்கை

யாய்ப் போய்விட்டது. தாய் தந்தையர் மிகவும் வருந்தித், தங்கள் குலதெய்வம் ஆகிய செந்திலாண்டவனிடம் குழந்தையைக் கொண்டுபோய்விடக் கருதினுர்கள். திருச்செந்தூருக்குச் சென்று, அங்கேயுள்ள கலியுக வரதனைத் தரிசித்தார்கள். தங்கள் குழந்தையைச் சண்முக விலாசத்திலே கிடத்தித் தாங்களும் வரம்கிடந்தார்கள். முருகப்பெருமான் திருவருளால் குழந்தை பேசத் தொடங்கவே, அங்கே—கூடிய எல்லோரும், 'குருபர', 'குமரகுருபர' என்ற பெயரிட்டழைத்தார்கள். குமரகுருபரர் என்பதுவே அவர் பெயராய் நிலைத்தது. தூய தவவேடத்துடன் துறவுவாழ்க்கையை நடத்தினுர். தமிழ் நூல்களை எல்லாம் விரைவிலே கற்றுத் தேர்ந்தார். பாவரும் கிழமை அதாவது பாடல் இயல்பாகவே வரும் உரிமை அவருக்குக் கருவிலே அமைந்த திரு. கவிராயர் மகன் கவிராயர் ஆனதிலே வியப்பொன்றுமில்லை. மூங்கை கவிஞரானது வியப்பே. பழுத்த தமிழ்ப்புலமையிலே பண்பட்ட குமரகுருபரர் தம்மை ஆட்கொண்ட கந்தர் மீது 'கலி வெண்பா' வால் இனிய பாமாலை ஒன்று தொடுத்தார். அது பொருள் வளம் மிக்கது; பிணி நீங்கவும் கல்வி கருதியும் அது பலரால் இன்றும் பக்தியுடன் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. தாம் பிறந்த தலத்தை 'கலம்பகம்' பாடிச் சிறப்பித்தார்.

சிலநாள் கழிந்தபின் குமரகுருபரர் பல புண்ணிய தலங்களைத் தரிசித்து மதுரை வந்து சேர்ந்தார். மதுரையிலே ஸ்ரீ மீனுட்சி மீது 'பிள்ளைத் தமிழ்' ஒன்று பாடினுர். அவர் கீர்த்தி எங்கும் பரவி இருந்தது. அப்போது அங்கே திருமலை நாயக்கர் அரசு செய்து வந்தார். அடிகள் வருகையைத் தெரிந்த நாயக்கர், அடிகளைத் தம்பால் வரவழைத்து, வாழ்த்தித் தொழுது பேரவை கூட்டிப் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் தொடங்குவித்தார். அடிகள் தாம் பாடிய கவிகளைத் தம் பெருஞ்சொல்லால் விளக்கி வந்தார். ஒரு சமயம் ஸ்ரீ மீனுட்சியே ஒரு சிறு பெண்ணுக வந்து நாயக்கர் மடிமீது வீற்றிருந்து, 'தொடுக்குங் கடவுள் பழம் பாடல்' என்று தொடங்கும் வருகைப்பத்தின் பாடலைக் கேட்டு, அடிகள் கழுத்திலே முத்தாரமிட்டு மறைந்தாள் என்று சொல்லப்படு

கிறது. அரங்கேற்ற முடிவிலே நாயக்கர், அடிகளைப் பொன்னாலும் மணியாலும் அபிடேகம் பண்ணி, வீரக் கழலை அணிவித்து, விருதுகளாக—சிவிகை குடை கொடி முதலியவை கொடுத்தார். நாயக்க மன்னர் கருத்துப்படி, 'நீதிநெறி விளக்கம்' என்னும் அரிய நூலியற்றிப் பெரிய கிராமங்களைப் பரிசாகப் பெற்றார். அந்நூல் உலக நடையை உணர்த்தும் கண்ணாடி போல்வது. தவத்தாலும் அறிவாலும் முதிர்ந்த இவர், உலகியலை நன்குணர்ந்து தாம் சிந்தித்துத் தெளிந்தவற்றைத் தமது கவிதைப் பிரவாகத்திலே விளக்கினார். மதுரை மீது 'கலம்பகம்' ஒன்றும்பாடினார்.



பிறகு, அடிகள் வடதிசை நோக்கிப் புறப்பட்டார். செம்பொற் சிவிகை ஏறிச் சின்னம் முழங்கப் பரிசனத்துடன் சென்றார். திருச்சிராப்பள்ளி, திருவையாறு, திருவிடைமருதூர் முதலிய இடங்களிலே அங்கங்கே தங்கிச் சைவப் பிரசாரம் செய்து தருமபுரம் சேர்ந்தார். அங்கே தம்பிரான்களால் வரவேற்கப்பட்டார். ஆதீன முதல்வர் மாசிலாமணி தேசிகர் பால், காஷாயமும் ஞானோபதேசமும் பெற்றுத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவரிடம் ஒப்புவித்தார். அப்போது தேசிகர் மீது இவர் 'மும்மணிக் கோவை' பாடித் தமது தாழ்மை மிக்க தூய பேரன்பைப் புலப்படுத்தினார்.

அதன்பின் அடிகள் திருவாரூர் சென்று அங்கே சின்னாள் தங்கி, 'நான்மணிமாலை' பாடித் தியாகேசரை வணங்கினார். பின், வழியிலுள்ள தலங்களைப் பணிந்து வைத்தீசுவரன் கோயில் வந்து சேர்ந்தார். அங்கே முத்துக்குமாரசுவாமி மீது 'பிள்ளைக்கவி' கூறி ஏற்பித்து, சீர்காழி சென்று, சிதம்பரம் சேர்ந்தார். அங்கே 'மும்மணிக் கோவை' 'செய்யுட் கோவை'கள் இயற்றி அரங்கேற்றினார். சிவகாமி அம்மை மீது 'இரட்டை மணிமாலை'யும் பாடப்பட்டது. செய்யுட் கோவை, நால்வகைப் பாவின் பலவகைகளுக்கும் உதாரணக்

கவிகளை உடையது; அடிகளது அருங்கவித்திறனைத் தெரிவிப்பது.

அதன் பின் அடிகள் காசி யாத்திரையை மேற்கொண்டார். கச்சி காளத்தி முதலிய தலங்களைப் பணிந்து, காசி நகரை அடைந்தார். கங்கையிலே மூழ்கி விசுவேசரை வழிபட்டுக் கொழுத்த தமிழால் 'கலம்பகமு'ம் 'பதிக'மும் பாடி, காசியிலே தங்கியிருந்தார்.

ஆனந்த வனத்து (—காசியில்) மேய
ஆனந்த வடிவார்தம்மை, ஆனந்தச் செய்யுள் பாடி
ஆனந்தம் பயப்பப் போற்றி, ஆனந்தம் எய்து நாளில், '

அங்கேயே நிலையாகத் தங்கித் தருமம் செய்துவர எண்ணினர். யாத்திரையாகக் காசிக்கு வரும் தமிழர், தங்குவதற்கு இடமின்றி அவதிப்படுவதை அறிந்த அடிகள், ஒரு பெரிய மடம் கட்ட அவாவினர். டில்லி பாதுஷாவைக் கொண்டு, தம் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள நினைத்தார். அந்த தேச பாஷையாகிய இந்துத்தானியை அறிந்துகொள்ளக் கலைமகள் மீது மாலை பாடித்துதித்தார்.

" மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்ட ளவிற் பணியச் செய்வாய் "

என்று பிரார்த்தித்தார். இந்துத்தானி மொழியிலே பயிற்சி பெற்று, அதிலே பிரசங்கம் செய்யவும் தலைப்பட்டார். குழந்தைப் பருவத்தே மூங்கையாய் இருந்து, பின் பேசி, தாய்மொழியிலே மகாகவி ஆகி, வயது முதிர்ந்த நிலையிலே வாய்க்கு வாரா இந்துத்தானியிலும் தேர்ச்சியுற்ற அடிகளின் ஆற்றலை வியக்கின்றோம்.

டில்லி பாதுஷா, அடிகளார் அருட்பொலிவினையும் கடலனைய கல்வி நலத்தினையும் தூய தவ ஒழுக்கத்தினையும் வியந்து, அடிகளுக்குப் பல சிறப்புக்களையும் செய்தான். அடிகள் வீற்றிருந்து அறஞ் செய்யத் திருமடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தான். அடிகள் கங்கைக் கரையிலே கேதாரநாதர் கோயிலைச் சீர் செய்து, அங்கே தென்னாட்டுப் பூசனை நியமங்களை ஏற்படுத்தினர். அந்தக் கோயிலிடத்து மசூதி நின்றது. அதை அறிந்து அடிகள் பாதுஷாவிடம்

தெரிவித்து, அவ்விடத்தைத் தமக்கு உரிமையாக்கி, மசூதியை மாற்றி மீண்டும் கோயிலாகவே புதுப்பித்தார். தம்முடைய மடத்திலே புராணசாலை அமைத்து, நாள்தோறும் தமிழ் நூல்களைப் படித்து, இந்துத்தானி மொழியிலே பெயர்த்துப் பிரசங்கம் செய்வார். பலர் வந்து கேட்டுப் போவார்களாம். கம்பராமாயணப் பிரசங்கம் நடந்தபோது, பிரசித்திபெற்ற இராமபக்தராகிய துளசிதாசர் அந்தக் கூட்டத்திலே ஒருவராய் இருந்து கேட்டாராம். இந்தி மொழியிலே துளசிதாசர் இயற்றிய இராம சரிதத்திலே கம்பனுடைய கருத்துக்களும் கற்பனைகளும் காணப்படுவது அதை உறுதிப்படுத்துகிறது. தாம்பிரபரணிக் கரையிலே பிறந்து, காவிரிக் கரையிலே ஞானோபதேசம் பெற்று, கங்கைக் கரையிலே தமிழர் கலா சாரத்தைப் பரப்பிக் காசியிலே மடம் அமைத்த அடிகளார் ஆற்றல் போற்றுதற் குரியது. அங்கே அடிகள் நிகழ்த்திய அற்புதங்களைப்பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை; சிங்கத்தின் மீது ஏறி அடிகள் சென்றமைக்கு அறிகுறியாகக் காசி மடத்திலே கல்வடிவம் ஒன்று அமைந்துள்ளது.

அற்புதச் செயல்கள் பல புரிந்து அறம் பல வளர்த்து, அடிகள், தமது மாணவர் பலருள்ளும் சொக்கநாத முனிவரைத் தமக்குப்பின் தாங்கண்ட தருமங்களைப்புரிய நியமித்து, வயோதிக தசையிலே விசுவேசுவரர் திருவடியிலே கலந்தார். அதுமுதல் ஒருவர் பின் ஒருவராக அத்தருமங்களை நடத்தி வருகின்றனர். காசிவாசிகளாகிய இப் பரம்பரை யினருள் தில்லைநாயக சுவாமிகள் இருநூறு வருடங்களுக்கு முன், திருப்பனந்தாளிலே ஒரு மடம் நிறுவி, அதைத் தலைமை யிடமாகக் கொண்டார். அதுமுதல், காசி குமாரசாமி மடம் கிளைமடம் ஆயது. மொழியும் குலமும் சமயமும் வேறுக உடைய மக்களிடையே சைவ சமயத்தை, அற்புதங்களாலும் வழக்கீட்டாலும் நிலைநாட்டிய அடிகள் நெறியைப், பின் வந் தோர் பின்பற்றி யிருந்தால் இன்று வடநாடு முழுவதிலும் சைவசித்தாந்தம் பரவியிருக்கும். இந்த மடத்தின் தலைவ ராய்த் தற்போதிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள். சுவாமிகள் சிவநெறியையும் செந்தமிழையும் பிற அறங்களையும் பேணிப், பெரும் புகழ் பெற்று வருகிறுர்கள்.

1. *சொல்லும் தொடரும் :*

சிவஞானம்	பனிமலைச்சாரல்	அரங்கேற்றம்
சிவலோகம்	பாவரும்கிழமை	கவிதைப்பிரவாகம்
நிறைமொழி	கருவிலே அமைந்ததிரு	அருட்பொலிவு
குமரிமுனை	பாராயணம்	கல்விநலன்

2. *சிந்தனைக்கு :*

1. இந்த நாட்டிலே இஸ்லாமும் கிறிஸ்தவமும் பரவியது எதனால் ?

2. முந்நூறு வருடங்களுக்கு முன்னரே காசி யாத்திரையை மேற்கொண்டு, மொழியும் குலமும் சமயமும் வேறாக உடைய மக்களிடையே தங்கித், தமிழர் கலாசாரத்தைப் பரப்பிய அடிகள் முயற்சி பிற்காலத்திலே ஏன் பின்பற்றப்படவில்லை ?

3. சைவத்தை வளர்க்க எழுந்த மடங்கள் எவை ? பெரியார் யார் ? மெய்கண்டாரைப் பற்றி நீ என்ன அறிவாய் ?

4. பிரபந்தங்கள் பல இயற்றிய அடிகள் காவியம் ஒன்றேனும் பாடவில்லை ; காரணம் எதுவாயிருக்கலாம் ; குமரகுருபரர் காலத்தவராக நீ அறிந்த ஏனைய கவிஞர் யார் ?

3. *பயிற்சி :*

1. கச்சேரி, கிச்சடி, சட்னி, ரூபாய், இனும், உஷார், குரிச்சி, சாமான், தகவல், தாக்கல், நகல், பங்கா, படுதா, பல்லி, பேட்டி—இப்படி தமிழிலே வழங்கும் இந்துத்தானிச் சொற்களை முந்தியபாடங்களிலே கண்டோம்.

2. அத்தர், அமல், கரார், மகசர்—இவை அரபிச் சொற்கள்.

3. அல்மாரி, குல்லா, பஜார், சர்க்கார்—இவை பாரசீகச் சொற்கள்.

4. தமிழாக வழங்கும் ஆங்கிலச் சொற்களைச் சொல்லு ; ஆங்கிலத்திலே வழங்கும் தமிழ்ச் சொற்களை நீ அறிவாயா ?

5. அயன் மொழிச் சொற்கள் தமிழிலே வரக் காரணம் என்ன ? அவற்றைத் தவிர்க்க முடியுமா ? இவற்றைத் திசைச் சொற்கள் என்று தமிழர் ஏற்று, மொழியை வளம்படுத்தினர். தமிழிலே வழங்கும் வட சொற்களை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

13. மைசூர் ஐதர் அலி

ஒரு சாமானியப் போர்ச் சேவகன் ; சொற்பக் கூலிக்காக உயிரை விற்பவன் ; உயர்குடிப் பிறப்போ செல்வமோ செல்வாக்கோ எதுவும் இல்லாதவன் ; எழுதப்படிக்கத் தெரியாத தற்குறி ; இப்படிப்பட்ட ஒருவன் தன் அறிவாற்றல்களாலும் சாதுரியம் தைரியங்களாலும், பூமி எங்கும் போர் முழக்கம் மிஞ்சித் தீர சூரர்கள் மலிந்து திகழ்ந்த நாளிலே, தன் பெயர் கேட்போர் பீதியுற்று நடுநடுங்கும் வீரசிகாமணியாய் விளங்கிப் பெரிய ராச்சியத்துக்கும் அதிபதியானுன் என்றுல் சரித்திரத்திலேயே அது அற்புதம் அல்லவா? ஐதர்அலி இத்தகைய அதிசய வீரருள் ஒருவன், என்கிருர் அவரைப்பற்றி எழுதிய அறிஞர் மாதவையர்.

தங்கக் கனி மலிந்த கோலாரிலே வந்து குடி ஏறிய அலிமுகமதுவின் பேரன் ஐதர்அலி. ஐதருடைய தந்தை 'பட்டிமுகம்மது', மைசூர் ராச்சியத்திலே உத்தியோகம் செய்து வந்தார். ஐதருக்கு ஷபாஸ் என்ற தமையன் ஒருவன் உண்டு. அவன் ஆயிரம் சேவகர்க்குத் தலைவனுய், இராணுவத்திலே சேவை செய்து வந்தான். ஐதர் அவன் கீழ் ஒருதவிச் சேவகனுய் வேலைபார்த்தான். ஐதர் பிறந்த வருடம் நிச்சயிக்கப்படவில்லை. கி. பி. 1717-ல் அல்லது அதை ஒட்டி அவர் பிறந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஐதர்அலியின் போர் விருப்பும் வீரமும் அவனைப் படிப்படியாக உயர்பதவிக்கு உயர்த்தின. அவனுடைய உத்தியோக வரலாறு, அவன் புரிந்த போர்கள், அவன் மைசூர் அரசைக் கைப்பற்றிய விதம், இவற்றை விவரிப்பது சரித்திர நிபுணர் கடன். இங்கே நாம் அவனுடைய குண நலங்களிலே, வாழ்க்கைச் சம்பவங்களிலே சிற்சில குறிப்புக்களை மட்டும் கூறுகிறேம்.

ஐதருக்குக் கண்டே ராவ் என்ற பிராமணன் மந்திரியாக இருந்தான். ஐதரே மைசூர் ராச்சியத்தின் அதிபதி; என்றுலும், அரசுரிமையை அவன் ஏலாது, பழைய அரசமரபிலே ஓரிளங் குமரனை மன்னவனுகப் பாவித்தான் ; அதன்படி நடந்தும் வந்தான். தன் மகன் 'பொம்மையரச'னுக விளங்குவதைக்

கண்டு, மனம் பொருத இராணி, கண்டே ராவை வசப்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனித்தாள். கண்டே ராவின் சூழ்ச்சியாலும் துரோகத்தாலும் ஐதராட்சிக்கு ஆபத்தேற் பட்டது. கண்டே ராவை ஐதர் சிறைபிடித்தான் ; அப்போது இராணி, அவன் பிராமண குலத்தினன் ; ஆனபடியால், அவ னைக் கொல்லவேண்டாம் என்று வேண்டிக் கொண்டாள். ஐதரும், கிளிப்பிள்ளை போல அவனைப் பேணிவளர்ப்பதாகக் கூறினனும். அவ்வாறே, கண்டே ராவ் சாகும்வரை அவனைக் கம்பிகளாலான கூட்டிலே அடைத்துவைத்து நாள்தோறும் போதுமான பாலும் சோறும் கொடுத்து வந்தானும்.

1776-ல் அந்த பொம்மை ராஜா இறந்து போனுன். அவனுக்குப்பதில் ஒருவனை அரசனுகத் தெரிந்தெடுக்க ஐதர் ஒரு வழி செய்தான். அரண்மனையிலே ஓரறையில் பலவகை விளையாட்டுச் சாமான்களைச் சேகரித்தான். அரசுக்குரிய இந்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளை அங்கே கொண்டுவந்து, அதனதன் விருப்பம்போல சாமான்களை எடுக்கும்படி சொன்னுன். எலுமிச்சம் பழத்தையும் கட்டாரிக் கத்தியையும் தனக்குப் பிடித்தனவாக எடுத்துவந்த சிறுவ னையே ஐதர், மைசூர் அரசனுக முடிசூட்டினுன்.

குற்றம்செய்தவர்களைத் தூணிலே கட்டிக் குறடாவாலே அடிப்பது அக்கால வழக்கம். ஒருபோரிலே, தான்செய்ய வேண்டிய ஒன்றை, ஐதர் தன் அருமை மகன் திப்புவின் பொறுப்பிலே விட்டிருந்தான். அதைச் செய்யும் கடமை பூண்டிருந்த திப்பு, கவனக்குறைவால் அதைச் செய்யத் தவறினுன். இதைத் தெரிந்தபோது ஐதர் திப்புவைத் தன் மகன் என்றும் பாராது குறடாவால் அடித்துத் தண்டித்தான்.

இந்துவாயினும் முஸ்லிமாயினும் ஐதர் பாரபட்சம் பாராட்டியதில்லை. குறுகிய நோக்கம் அவனிடம் அணுவேனு மில்லை. அவனிடத்திலே அவனுடைய உத்தியோகஸ்தர்கள் கொண்டிருந்த அன்புக்கும் வாஞ்சைக்கும் அளவில்லை. ஐத ருடைய மந்திரி பூர்ணையா. இவர் ஒரு பிராமணர். ஐதர் திடீ ரென்று இறந்துபோனுன். அவன் மகன் திப்பு நெடுந்தொலை விலே இராணுவ சோலியாகப் போயிருந்தான். ஐதர் இறந்த போது, பிராமண மந்திரியான பூர்ணையா இந்துவேந்தனையே

மீண்டும் மைசூர் மன்னனாக முடிசூட்ட முயன்றிருக்கலாம். அப்படி அவர் செய்யவில்லை. ஐதர் இறந்தமை வெளிக்குத் தெரிந்தால் கலகம் நேரிடும் என்று, சவத்தைப் பெட்டியில் அடக்கிப் பொக்கிஷம் என்று, சீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பிவிட்டு, ஐதர் நோய்வாய்ப் பட்டிருப்பதாகவே செய்தியைப் பரப்பி, திப்பு திரும்பிவந்து ராச்சியத்தை ஒப்புக்கொள்ளும்வரை அவன் உரிமையைப் பதனமாய்ப் பாது காத்தார். திப்புவும் பூர்ணையாவையே தன் மதி மந்திரியாகக் கொண்டதில் வியப்பில்லை.

முகம்மதலி என்பவனை ஆற்காடு நவாபாகக் கொண்டு ஆங்கிலர் அவனுக்காகப் பல சண்டைகள் செய்தனர். அந்த நவாபு ஆண்மை அற்றவன் ; பேடி ; நாணயம் இல்லாதவன். அவனை நம்பி, அவன் குணத்தை நன்கறியாது ஆங்கிலர் அல்லல் பட்டனர். அவனை ஒரு முஸ்லிம் என்று பாராது ஐதரோ அவனை முற்றிலும் வெறுத்தான். ஐதர் வழியில், அவன்மட்டும் தோன்றியிராவிடின் மைசூரின் சரித்திரம் வேறுவிதமாய் முடிந்திருக்கும். அல்லது, பிரஞ்சியர் வாக்குப்படி ஐதருக்கு உதவி செய்திருந்தால் ஐதரும் அகாலமரணத்தை அடையாது, மேலும் சிலகாலம் உயிருடன் வாழ்ந்திருந்தால் தென்னிந்தியாவின் சரிதமே வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும்.

ஐதர் நியாயப்பற்றும் பெருந்தன்மையும் உடையவன்; பரந்த நோக்கமும் பண்பாடும் உள்ளவன்; கடமையிலே கண்டிப்புள்ளவன். அவனுடைய அறிவாற்றல்களைப் பழி தூற்றும் விரோதிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். போர்த் திறமையிலே அவனுக்குச் சமானமான வீரன் அக்காலத்தில் இந்தியாவிலே வேறெவரும் இல்லை. உலகெங்கும் அவனினும் சிறந்தார் அரியரே. குதிரை ஏற்றத்தில் தேர்ந்தவர்; வாட் போரிலும் துப்பாக்கி சுடுவதிலும் சமர்த்தர். ஐரோப்பியரது யுத்தமுறைகளைப் பாராட்டிப் பயின்றார். சந்தர்ப்பவாதி. சமயத்துக்குத்தக நடக்கும் மதியூகம் உள்ளவர். அக்காலம் இந்திய அரசர்களிலே அவன் ஒருவன்தான் தன் நாட்டைச் சார்ந்த கடற்கரைப் பாதுகாப்புக் கென்று கப்பல்படையை அமர்த்திப் பராமரித்து வந்தவன். நிர்வாகத்திலே நேர்மையையும் நியாயத்தையும் கடைப்பிடித்தவன். உண்மை கண்டு

இவனை மதிப்பிடுவோர் தென்னிந்திய வீரருள் மிகச்சிறந்த ஒருவனாகவே இவனைக் கருதுவர்.

1. *சொல்லும் தொடரும் :*

அறிவாற்றல்	பாரபட்சம்	மதியூகம்	சாதுரியம்
பதனம்	பராமரிப்பு	தீரசூரர்	பரந்தநோக்கு
மதி மந்திரி	வீரசிகாமணி	வாட்போர்	சந்தர்ப்ப வாதி

2. *சிந்தனைக்கு :*

1. ஐதரலி அதிசய வீரருள் ஒருவன் என்பது எதனால் ?
2. ஐதரலியுடன் ஆங்கிலர் புரிந்த போராட்டங்களைப் புலப்படுத்து.
3. இந்துவாகிய பூரணையா முஸ்லிமாகிய ஐதரலியிடம் மந்திரியாக இருந்தாரே—இந்துமுஸ்லிம் ஒருமைக்கு அது எப்படி உதாரணமாகும் ?
4. இந்திய ராணுவத்தின் இன்றைய தளபதி யார் ?

3. *பயிற்சி :*

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலே எழுதும்போது எச்சரிக்கையாய் எழுதவேண்டும் ; இல்லாவிட்டால் எழுத்துப் பிழை நேரும். சாதுர்யம் தைர்யம் ; த்ரேகம்—இவை தவறு.

ராமன்	—	இராமன்	கர்த்தா	—	கருத்தா
லாபம்	—	இலாபம்	பக்வம்	—	பக்குவம்
ரத்நம்	—	இரத்தினம்	புண்யம்	—	புண்ணியம்

இவற்றைக் கவனியுங்கள்.

திருத்தி எழுது :

காவ்யம்	லோபி	பக்ஷணம்	ஸ்வாமி
வம்சம்	அர்த்தம்	தர்மம்	சக்தி
பத்மம்	பிக்ஷா	ஸ்வதேசி	பக்தி
ஸ்திதி	சப்தம்	ஸபா	

4. *இலக்கணம் :*

வினைசொற்களைப்பற்றி 2.

வந்தது—முன்னம் நடந்த செய்தியைக் குறிக்கிறது : இறந்தகாலம்.

வருகின்றது—இப்போது நடக்கிற செய்தியைக் குறிக்கிறது : நிகழ் காலம்.

வரும்—இனிமேல் நடக்கப்போகும் செய்தியைக் குறிக்கிறது : எதிர் காலம்.

வந்தது—இறந்தகால வினைமுற்று : வந்து—வினை எச்சம்.

முற்று என்பது முடிந்தது—தொழில் முடிந்ததை அறிவிப்பது வினை முற்று. எச்சம் என்பது எஞ்சியிருப்பது—தொழில் முடியாததை அறிவிப்பது வினை எச்சம்.

இந்தப் பாடத்திலே பயிலும் வினை முற்று, வினை எச்சங்களை எடுத் தெழுதுங்கள்.

14. அதிவீரனும் வரதுங்கனும்

படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த பாண்டியர் பதினைந்தாம் நூற்றுண்டிலே வலி குன்றினர். தமிழ் நாட்டுச் சரிதத்திலே பதினுறும் நூற்றுண்டு முக்கியமானது. விசயநகர வேந்தர் தமிழகத்தைத் தம் ஆதிக்கத்திலே கொண்டுவந்தனர். தமிழரசராகிய சேர சோழ வமிசங்கள் கருகின. மதுரையை விட்டு விலகிப் பாண்டிய மரபினரும் திருநெல்வேலிப் பிர தேசத்தை ஆண்டுவரலாயினர். இவர்கள் தாய்மொழியைக் கருத்துடன் பேணினர். இவருள் முன்னேன் அரிகேசரி பராக் கிரமன் கி. பி. 1422-52. தென் காசி நகரை அமைத்தது இவன் தான். அங்கே ஸ்ரீ விசுவநாதருக்குப் பெரிய கோயில் எடுத் தான். இவன் மரபிலே வந்தவன் அதிவீர ராமன். கி.பி. 1564-ல் பட்டம் எய்தினுன். இவனுடைய தந்தை திருநெல்வேலிப் பெருமாள் என்ற குலசேகரப் பெருமாள், தருமத்திலே பெரி யன்; அவன் வீரவேளாகவும் கலைவிநோதனுகவும் விளங் கினுன். அவன் மீது பாடப் பெற்ற வெண்பா மாலை ஒன்றுண்டு. தந்தையைப் போலவே தனயனும் அதிவீரனுகவும் அருங் கவியாகவும் திகழ்ந்தான். சங்க காலந்தொடங்கிப் பாண்டி யர் கல்வியில் மேம்பட்டவர் அல்லவா ?

அதிவீர ராமனுடைய இயற்பெயர் அழகன் பெருமாள். வீரமாறன், சீவலமாறன் என்பன இவனுடைய பட்டப் பெயர்கள். இவன் தன்னைக் கூறிக் கொண்ட முறைமையைப் பாருங்கள். "கோசடில வர்மரான திரிபுவன சக்கிரவர்த்தி கோனேரின்மை கொண்டான் திருநெல்வேலிப் பெருமாள் வீரவெண்பாமாலையான் தன்மப் பெருமாள் குலசேகரதேவர் நந்தனுரான அழகம் பெருமாள் அதிவீர ராமரான ஸ்ரீ வல்லப தேவர்"

அதி வீரனுடைய ஆசிரியர் சுவாமித்தேவர். கல்வி கேள்வி களிலே தேர்ந்தவர்; ஆசு கவிகளின் திறமையை அளந்தறிய வல்லவர்; சமஸ்கிருத ஞானம் உடையவர். இத்தகைய நல்லாசிரியரிடம் பயின்ற அதிவீரன், சிறந்த கவியாகத் திகழ்ந்ததிலே வியப்பில்லை. பெரிய கொடை வள்ளலாகவும் அவன் விளங்கினுன்.

சிவபக்தியிலும் சிறந்து திகழ்ந்தான். தன் தந்தை பெயரால், தென்காசியில் பெரிய கோயிலுக்கு மேல் பால் ஒரு கோயில் கட்டினுன். நாற்பதாண்டுக்குமேல் அரசாண்டான். இவன் பாடிய நூல்கள்:—நைடதம், காசிக் காண்டம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், வெற்றிவேற்கை.

வரதுங்கன்

அதிவீரனுக்குப் பிறகு, வரதுங்கன் 1588-ல் சிங்காதனம் ஏறினுன். அதிவீரனுடைய பெரிய தந்தையின் இளைய மைந்தன் வரதுங்கன். நிரம்பிய கல்வி வாய்ந்தவன். நிம்பை என்ற வேம்பத்தூர் ஈசான முனிவரிடம் கல்வி பயின்ருன். இளமையிலேயே வீரத்திலும் கல்வியிலும் கொடையிலும் மேம்பட்டு விளங்கினுன். தஞ்சை அச்சுதப்ப நாயக்கர் மதுரை நாயக்கரை எதிர்த்தபோது, வரதுங்கன் மதுரை யாருக்காக வல்லம் என்ற ஊரிலே போர் புரிந்தான். ஸ்ரீ வில்லி புத்தூர் புதுக்கோட்டையை அந்தணர் பலருக்குத் தானம் வழங்கினுன். மருத்துவன் ஒருவனுக்கு முருகனேரி என்ற ஊரை முற்றூட்டாக விட்டான். கோவிந்தப் பட்டனுக்குச் சிலாரிப் பட்டியைத் தந்தான். பரத நாட்டியத்திலே வல்ல மாணிக்கம் என்பவளுக்கு நிலபுலங்களைக் கொடுத்தான். இவனுடைய சபையிலே, புலவர்கள் பலர் குழுமியிருந்தனர். அவர்களுள் சிறந்தவர் காசிக்கலியன் கவிராயர். வரதுங்கனுடைய குடையைக், கொடையை வாளைப் புகழ்ந்து வாழ்த்திய பாடல்கள் தென்காசிக் கோயிற் சுவரிலே பொறிக்கப்பட்டுள்ளன.

வரதுங்கன் பாடியவை :

(1) பிரமோத்திர காண்டம்.
(2) திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி.
(3) திருக்கருவைப் வெண்பா அந்தாதி.
(4) திருக்கருவைக் கலித்துறை அந்தாதி.

அதிவீரன் வரதுங்கன் என்ற ஒன்று விட்ட சகோதர் இருவருமே வீரமும், கொடையும், கல்வியும் உடையராய்த் தமது காலத்திலே யாவரினும் மேம்பட்டு விளங்கினுர்கள்.

இவர்களைச் சூழ்ந்து நாளடைவிலே பல கதைகள் எழுந்தன.. அதிவீர ராமன் கல்வி கேள்விகளிலே வல்லவன் அல்லவா ? இலிங்க புராணத்தை இயற்றி வரதுங்கனிடம் காட்டியபோது, வரதுங்கன், அது வெள்ளைப் பாட்டாக இருத்தலைக் கருதி முத்துப்போல் இருப்பதாகக் கூறினாராம். அதற்காகவே அதி வீரன் நைடதத்தை இயற்றினாராம். சொற் செறிவு, பொருட் பொலிவு, இறுக்கம் எடுப்புக்களிலே சிறந்து, நைடதம் புலவர்க்கு ஔடதமாகப் போற்றப் படுகிறது. அரிதின் முயன்று பாடிய நைடதத்தை அதிவீரன், வரதுங்கன் மனைவி யிடம் காட்டியபோது, அவள், அது ஓடி இளைத்த நாய் போல் இருக்கிறது என்றாளாம். அதை அரங்கேற்றுகையிலே அவையிலே இருந்த புலவர்கள் அது கரும்புபோலிருப்பதாகக் கூறினார்களாம். அதன் பொருள் என்ன தெரியுமா ? அடிக் கரும்பு மிக்க இனிப்புடையது. மேனோக்கிச் செல்லச் செல்ல தித்திப்புக் குறைகிறது ; நுனி கரிக்கிறது. இது போலவே நைடதம் தொடக்கத்திலே சுவை மிகுந்து போகப் போகச் சுவை குறைந்து காணப்படுகிறதாம். காவியம் முழுவதும் ஒரே தன்மையுடையதாக இல்லை. ஆதலின், அது சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றம் உடையது என்பது புலவர்கள் தீர்ப்பு.

முன்னாளிலே தமிழ் கற்கப் புகுவார் முதலிலே நைடதம் வாசிப்பது வழக்கம். அதிலே பல நூல்களின் சாரம் காணப் படுகிறது. இது 1172 விருத்தங்களை உடையது. நளன் தமயந்தியை மணந்து அடைந்த இன்ப துன்பங்களை இது கூறுகிறது. இது முதல் நூல் அல்ல ; வட மொழியிலே உள்ள நைடதம், நளோதயம் என்ற நூல்களையும் பாரதத்திலே பயிலும் நள சரிதையையும் தமிழிலே வழங்கும் நள வெண் பாவையும் நன்காராய்ந்தே அதிவீரன் இதை இயற்றினான். தமிழிலே இது ஒரு சிறந்த காவியமே.

1. *சொல்லும் தொடரும் :*

படைப்புக்காலம்	பட்டப்பெயர்	வீரவெண்பா
இயற்பெயர்	கோனேரின்மை	கொடைவள்ளல்

2. *சிந்தனைக்கு :*

1. மதுரையினின்றும் பாண்டியரைத் திருநெல்வேலிச் சீமைக்கு யார் எப்போது ஏன் விரட்டினர் ?

2. சங்ககாலம் என்பது எதனை ? அப்போது வெளியான தமிழ் நூல்கள் எவை ?

3. நைடதத்தைப்பற்றிப் புலவர்களும் வரதுங்கன் மனைவியும் வெளியிட்ட அபிப்பிராயம் சரியா ?

4. நூலரங்கேற்றம் முற்காலத்திலே எப்படி நிகழ்ந்தது ? ஏதாவதொரு புதிய நூலொன்றைப்பற்றி பத்திரிகையிலே வெளியான விமரிசனத்தை எப்போதாவது நீங்கள் படித்திருக்கிறீர்களா ?

3. *பயிற்சி :*

நிறுத்தக்குறிகளைப்பற்றி.

,—இது காற்புள்ளி.

;—இது அரைப்புள்ளி

:—இது முக்காற்புள்ளி.

.—இது முற்றுப்புள்ளி.

?—இது வினாக்குறி.

!—இது வியப்புக்குறி.

“ ”—இது மேற்கோட்குறி.

( )—இது பிறைக்கோடு.

— —இது இடைக்கோடு.

:— —இது வரலாற்றுக்குறி.

4. *இலக்கணம் :*

வினைச் சொற்களைப்பற்றி 3.

வினைமுற்று என்றால் என்ன என்பதை அறிந்தோம். அது இடவகையால் மூன்று:— வந்தேன் ; வந்தாய் ; வந்தான்.

காலவகையால் மூன்று :—வந்தான் ; வருகிறான் ; வருவான்.

எண்வகையால் இரண்டு:—வந்தான் ; வந்தார்—செய், நட, போ என்ற பகுதிகளின் அடியாக (இடம், காலம், எண் வகைகளிலே) விரிவடையும் வினைமுற்றுக்களை எழுது.

15. வைர அட்டிகை

இடம் :—மதுரையில் ஒரு வீடு.

காலம் :—மாலை நேரம்.

பாத்திரங்கள் :—கோபாலனும் அவனுடைய மனைவி மீனாட்சியும்.

காட்சி 1

கோபாலன் :—(*கையில் ஒரு கடிதத்துடன் வீட்டிற்கு ஓடி வருகிறான்.*) மீனாட்சி, இதோ உன் அதிட்டத்தைப் பார்!

மீனாட்சி :—அப்படி என்ன அதிட்டம் வந்துவிட்டது, திடீரென்று!

கோபாலன் :—இந்தக் கடிதத்தைப் படித்துப் பார். தெரியும். (*கடிதத்தைக் கொடுக்கிறான்.*)

மீனாட்சி :—(*உறையைப் பிரித்துக் கடிதத்தைப் பின்வருமாறு படிக்கிறாள்,*)

ஸ்ரீ வேங்கடேசன் கிருபை முன்னிட்டு,

என் குழந்தை சௌபாக்கியவதி பங்கஜத்தைச் சிரஞ்சீவி சீனிவாசனுக்கு விவாகஞ்செய்ய நிச்சயித்து, முகூர்த்தம் நிகழும் தை மாதம் பதினேழும் தேதி பெண் கிருகத்தில் நடக்கிறபடியால், அன்றை முகூர்த்தத்துக்கும் பாட்டுக் கச்சேரி முதலான சகல வைபவங்களுக்கும் தாங்கள் குடும்ப சகிதம் வந்திருந்து தம்பதிகளை ஆசிர்வதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ராமச்சந்திர ராவ்,
கலெக்டர்.

ஆ-மா-ம், கலெக்டர் பெண்ணுக்குக் கலியாணம் என்றால் எனக்கு என்ன அதிட்டம்! (*கடிதத்தைத் தூர எறிந்து பெருமூச்சு விடுகிறாள்.*)

கோபாலன் :—மீனு! நீ சந்தோஷமடைவாய் என்றல்லவோ நினைத்தேன்! அழைப்புக் கடிதங்களெல்லாம் நம்மைப்

போன்ற குமஸ்தாக்களுக்கு அனுப்புவதில்லை. நான் சமாபந்தியில் கலெக்டர் துரையவர்கள் மனங்கோணு மல் நடந்தபடியாலேயே எனக்கு இது கிடைத்திருக் கிறது. நீ அதிகமாக வெளியே போவதில்லையே! இந்தக் கலியாணத்திற்கு நீ போனால் அங்கே எவ்வளவோ பெரிய சீமாட்டிகளோடு உனக்குப் பழக்கமேற்படுமே!

மீனாட்சி :—ஆம்! ஆம்! எனக்கு நல்ல புடவைதான் இருக் கிறதா?

கோபாலன் :—ஏன்? திருவிழாக்களுக்கு உடுத்திச் செல் வாயே, அந்த வங்கிச் சேலையை உடுத்திக்கொள்ளக் கூடாதா? அஃது உன் பொன்னிற மேனிக்குப் பொருத்த மாயிருக்கிறதே! எனக்குத் தெரிந்தவரை.........

மீனாட்சி :—(*விம்மி விம்மி அழுதுகொண்டு*) நான் போகப் போகி றதில்லை. அம்மாதிரி விசேடங்களுக்குக் கட்டிக்கொள் ளும் சிறந்த ஆடை எனக்கில்லையே! வேண்டுமானால் உங்கள் தங்கையை அழைத்துக்கொண்டு நீங்கள் மட்டும் போய்வாருங்கள்.

கோபாலன் :—அன்பே! அழாதே! நீ ஆசைப்படுகிற புடவை என்னவிலை? நமது கையிருப்பிலிருந்து அதை வாங்கிக் கொள்வோம். இன்னும் இதுபோன்ற விசேடங்களிலெல் லாம் அஃது உபயோகப்படுமே!

மீனாட்சி :—எனக்குத் திட்டமாகத் தெரியாது. சுமார் ஐம்பது ரூபாய் இருந்தால் மேகவர்ணச் சேலையொன்று வாங்க லாமென்று நினைக்கிறேன்.

கோபாலன் :—நல்லது! ஐம்பது ரூபாய் தருகிறேன். புடவை மட்டும் வெகு அழகாக இருக்கட்டும்.

காட்சி 2

இடம் :—*மதுரையில் கோபாலனுடைய வீடு.*

காலம் :—*காலை வேளை.*

பாத்திரங்கள் :—*கோபாலனும் மீனாட்சியும்.*

மீனாட்சி :—(*முணுமுணுத்துக்கொண்டே காப்பி கொண்டு வந்து கோபாலனிடம் கொடுக்கிறாள்.*) இந்தாங்கோ, காப்பியைக்

குடித்துவிட்டு உங்கள் ஆபீசு வேலையைப் பார்த்துக் கொண்டே இருங்கோ. கலியாணத்திற்குப் புறப்படச் சொன்னேமே; இன்னும் மூன்று நாள்தானே இருக்கிறது. அதற்கு என்ன வேண்டும் என்று யார் கவனிக்கிறது ?

கோபாலன் :—புடவைதான் வாங்கியாய் விட்டதே இன்னும் கவலை ஏன் ?

மீனுட்சி :—எனக்குப் போட்டுக்கொள்ள என்ன நகை இருக் கிறது ? நகையும் நட்டுமா வருகிறவர்களுக்கு மத்தியில் மூளிபோல எப்படி நிற்பது ?

கோபாலன் :—புஷ்பத்தை நிறைய வாங்கிச் சூட்டிக்கொள். நகைக்கு அவ்வளவு அழகு வருமா ? இரண்டொரு அணு வுக்கு மனங்கொண்ட மட்டும் பூ வாங்கலாமே !

மீனுட்சி :—அது என்னுல் முடியாது. எவ்வளவோ சீமாட்டி களுக்கு மத்தியில் என் வறுமையை விளம்பரஞ் செய் யவோ ? கூடவே கூடாது.

கோபாலன் :—நல்லது ! இன்னும் வீண் முரண்டு செய்யாதே. பண்ணை சேஷய்யர் மனைவி தனலட்சுமியைக் கேட்டு ஏதாவது நகை இரவல் வாங்கிக்கொள்.

மீனுட்சி :—ஆம் ! வாஸ்தவந்தான். எனக்கு ஞாபகமில்லையே!

[மீனுட்சி தனலட்சுமியிடம் ஒரு வைர அட்டிகையை இரவல் வாங்கிக்கொள்கிருள். கலெக்டர் பெண் கலியாணத்திற்குச் செல் கிருள். அங்கு வந்திருக்கும் சீமாட்டிகளுடன் பழக்கங் கொள்கிருள். இரவில் மற்றப் பெண்களுடன் பாடிக் களிக்கிருள். விடிய இரண்டு நாழிகை இருக்கும் பொழுது தன் கணவனுடன் வீட்டுக்குத் திரும் புகிருள்.]

காட்சி 3

இடம் :—*கோபாலனுடைய வீடு.*

காலம் :—*அதிகாலை.*

பாத்திரங்கள் :—*கோபாலனும் அவனுடைய மனைவியும்.*

மீனுட்சி :—(*தனது அழகைக் கண்ணாடியில் பார்க்கிருள். திடுக் கிட்டுக் கூச்சலிடுகிருள்.*) ஆ ! ஆ ! வைர அட்டிகை தவறி விட்டது ? (*புருஷனை நோக்கி*) நான்......நான்......நான்

......தனலட்சுமியின் வைர அட்டிகையைத் தொலைத்து விட்டேன்!

கோபாலன் :—ஆ, அப்படியா! கலெக்டர் வீட்டிலிருந்து திரும்பும்பொழுது அஃது உன் கழுத்தில் கிடந்ததா?

மீனாட்சி :—ஆம்! தொட்டுக்கூடப் பார்த்தேன்.

கோபாலன் :—ஆனால் வண்டியில் கிடக்கலாம். தெருவில் விழுந்திருந்தால் ஓசை கேட்டிராதா? வண்டிக்காரன் பெயர் ஞாபகமிருக்கிறதா?

மீனாட்சி :—இல்லையே?

கோபாலன் :—வந்த வழியெல்லாம் நடந்துபோய்ப் பார்க்கிறேன். ஒருவேளை கீழே கிடந்தகப்படாதா? *(வெளியே செல்லுகிறான்.)*

[வைர அட்டிகை அகப்படவில்லை. கெட்டுப்போன அட்டிகை போன்ற ஓர் அட்டிகையை இரண்டாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்குகிறார்கள். அதைத் தனலட்சுமியிடம் திரும்பக்கொடுக்கிறார்கள். பின்னர் கடனையிறுக்கச் சிக்கனவாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.]

காட்சி 4

இடம் :—*குளக்கரை.*

காலம் :—*மாலை வேளை.*

பாத்திரங்கள் :—*மீனாட்சி, தனலட்சுமியும் அவளுடைய குழந்தையும்.*

மீனாட்சி :—*(தனக்குள்)* அதோ உலாவிக்கொண்டிருப்பவள் நமது தோழி தனலட்சுமி அல்லவோ? அவளைக் கண்டு பேசலாமா? ஏன் கூடாது? இப்பொழுதுதான் கடனெல்லாம் தீர்ந்துவிட்டதே? இனி அவளிடம் உள்ளதைச் சொன்னால் என்ன? *(அருகே சென்று)* தனம்! சௌக்கியமா?

தனலட்சுமி :—*(திகைக்கிறாள்.)* அம்மா!............தெரியாது. நானில்லை............நீங்கள் நினைப்பது தவறு.

மீனாட்சி :—நான் மீனாட்சி அல்லவா?

தனலட்சுமி :—(பிரமித்து) ஆ! மீனு! என்ன இவ்வளவு கேவல மாய் மாறிவிட்டாய்?

மீனாட்சி :—ஆம்...உன்னைக் கடைசியாய்ப் பார்த்ததுமுதல் துர்ப்பாக்கியம் என்னைத் தொடர்ந்து வந்தது. தரித் திரமும்.........?

தனலட்சுமி :—ஆ!...............எப்படி? விரிவாகச் சொல்.

மீனாட்சி :—கலெக்டர் வீட்டுக் கலியாணத்துக்கு எனக்கு நீ இரவல் கொடுத்த வைர அட்டிகை ஞாபகம் வருகிறதா? அது தவறி விட்டது.

தனலட்சுமி :—இல்லவே இல்லை! நீ என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாயே? உனக்கு ஞாபகம் இல்லையா?

மீனாட்சி :—நான் கொடுத்தது நகல்; அசல் அல்ல......சென்ற பத்து வருஷங்களாக அந்தக் கடனைத்தான் அடைத்தோம் ....இலேசான காரியமா? எங்கள் எளிமையை யோசித்துப் பார். ஆனல் நல்லவேளை தீர்ந்து விட்டது!

தனலட்சுமி :—(மீனாட்சியின்மேல் வைத்த கண் வாங்காமல் திகைத்து நிற்கிருள்.) நீ என்ன சொல்கிருய்? என் அட்டிகைக்குப் பதில் வாங்கித் தந்ததாகவா?

மீனாட்சி :—ஆம்! ஆம்! உனக்கு வித்தியாசம் தெரிய வந்ததா?

தனலட்சுமி :—(மீனாட்சியின் கையிரண்டையும் இறுகப் பிடித்துக்கொண்டு) ஐயோ! அநியாயமே என்னுடைய அட்டிகை சீமைக் கமலம்தானே! இருபது ரூபாய்க்குத் தானே வாங்கினேன்!

மீனாட்சி :—என்னமோ, அம்மா, இரவல் நகைபோட்டுக் கொண்டு ஒரு நாள் பகட்டினதற்குப் பத்து வருஷம் கஷ்டம். பெண்கள் நகை அணிய ஆசை கொள்ளுதல் வீண் பைத்தியம். அதிலும் இரவல் நகை கூடாவே கூடாது.

1. *சொல்லும் தொடரும் :*

சௌபாக்கியவதி	ஜமாபந்தி	சிக்கனவாழ்வு
முகூர்த்தம்	அட்டிகை	தம்பதிகள்

2. *சிந்தனைக்கு :*

1. கோபாலன் அவன் மனைவி மீனாட்சி: இவர்களின் குணாதிசயங்களைக் கூறு.

2. உன் தங்கைக்குக் கலியாணம்; திருமண அழைப்பிதழ் எழுது.

3. நமது பெண்களுடைய நகைப்பித்தை நீங்கள் அறிவீர்களா ?

4. தீபாவளிக்கு 'ஜவுளி' வாங்குவது, என்பதை வைத்து, உன் அப்பா, அம்மா, தங்கைகளைப் பாத்திரமாகக்கொண்டு ஒரு காட்சி தயாரிக்க உங்களால் முடியுமா ?

3. *பயிற்சி :*

தற்கூற்று, அயற்கூற்று.

1. அவன் 'நான் வருவேன்' என்றான்: தற்கூற்று தன்மையிடத்துக் கேற்ப ஒருவன் கூறியபடி கூறுவது.

2. அவன் தான் வருவதாகச் சொன்னான்: அயற்கூற்று படர்க்கையிடத்துக்கேற்பப் பொருளை மாற்றுது கூறுவது.

முதல் காட்சியையும் மூன்றாங் காட்சியையும் அயற்கூற்றிலே எழுது.

4. *இலக்கணம் :*

வினை முற்றுக்களை அறிந்தோம்; எச்சம், வினை எச்சம் பெயரெச்சம் என்று இரண்டு வகைப்படும். வினைச்சொல்லைக்கொண்டு முடிவது வினை எச்சம்; பெயரைக் கொண்டு முடியும் எச்சச் சொல் பெயரெச்சம்.

இந்தப்பாடத்தின் முதற் காட்சியிலே அமைந்துள்ள பெயரெச்சம் வினையெச்சங்களைத் தொகுத் தெழுது.

16. பஞ்ச தந்திரக் கதைகள் *

கோதாவரி நதிக் கரையின் கண் ஒரு பெரிய வன்னிமரத்தில் லகுபதனன் என்னும் காகம் வாசஞ் செய்து கொண்டிருக்கையில், ஒரு நாள் விடியற்காலத்தில் அங்கே எமனைப்போல் மிகவும் பயங்கரமான வேடன் ஒருவன் வந்தான். லகுபதனன் அவனைப் பார்த்துப் பயப்பட்டு 'இந்தக் கொடியோன் யாது செய்வானோ, தெரியவில்லை; ஆகையால் இதைச் சோதிக்க வேண்டும்' என்று, இரை தேடாது அவனையே கவனமாய் உற்று நோக்கிக் கொண்டிருந்தது. அவ்வேடன் வலையை விரித்துப் பலவகைப்பட்ட தானியங்களைத் தெளித்து, அங்கே ஒரு செடி மறைவில் பதுங்கிக் கொண்டிருந்தான். அதன் பிறகு, தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவன் என்னும் புறவரசு, அங்கே இறைத்திருக்கும் தானியங்களைப் பார்த்துத், தனது பரிவாரப் புறுக்களுடனே, 'இந்தக் காட்டிலே தானியம் எப்படி வரும்? யாராயினும் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும். இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைத் தின்னலாகாது; ஏனென்றால், ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியினால் எப்படி மரணம் அடைந்தானோ அப்படி இதுவும் ஒரு விபரீதமாகத் தோன்றுகிறது' என, புறுக்கள் அதைக் கேட்டு, 'அஃதெப்படி? மகராசாவே!' எனச், சித்திரக்கிரீவன் சொல்லலுற்றது.

'நான் தென்காட்டில் மேய்ந்து கொண்டிருக்கையில் பார்த்தேன்; அதைக் கேளுங்கள். ஒரு கிழப்புலி பலகீனத்தால் ஆகாரம் சம்பாதிக்கக் கூடாமல், ஓர் ஏரிக்கரையில் நீராடிக் கையில் தருப்பை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான். புலி அவனைப் பார்த்து, 'ஓ! பிராமணா! இந்தப் பொற்காப்புத் தருகிறேன், வா' என்றது. இதைக்கேட்டு அப்பிராமணன் அப்புலியை நோக்கிச் சற்று ஆலோசனை செய்து, 'இந்தக் காப்பு நமக்கு வலியக் கிடைக்கிறது; ஆனால் புலியின் கிட்டப் போகலாகாது; ஆகையால், இந்தக் காப்பில் ஆசை

---

* வகுப்புக்குத் தகத்தமுவப்பட்டது.

வைக்கலாகாது என்போமானுல், மரணத்துக்கு நாலுபக்கமும் வழி ;' என்று, இவ்விதமாகத் தன் துராசைக்கேற்பத் தனக்குள் நிச்சயித்துப், புலியைப் பார்த்து, 'ஐயா! புலியாரே, காப்பு எங்கே யிருக்கிறது ?' என, 'இதோ இருக்கிறது, பிராமணோத்தமரே' எனப் புலி காட்டிற்று.

பிராமணன், 'உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை ?' என, புலி, 'நான் வைகறையில் மூழ்கி நித்திய தானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நகமும் பல்லும் போன கிழவனுயிருக்கிறேன். இப்போது என்னிடத்தில் நம்பிக்கையில்லையா ? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மை யென்னும் இவ் வெட்டுத் தருமங்களையும் நான் அறிந்திருக்கிறவனுதலால், இந்த அரிய வஸ்துவை யாருக்காகிலும் கொடுக்க இச்சிக்கிறேன். இதனுல் என்னிடத்தில் நற்குணமிருக்கிறதென்றும் எள்ளளவாகிலும் துர்குணமில்லை யென்றும் அறியவில்லையா ?' என்றது. அப்போது பிராமணன், 'இது மெய்தான். ஆனுல், புலி மனிதரை அடித்துத் தின்னுகிற தென்ற உலகவழக்கம் இருக்கிறது' என, புலி, 'நான் தரும சாத்திரம் அறிந்திருக்கிறேன். பெரியோர் தம் உயிர்போலப் பிற உயிர்களையும் நேசித்து, எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுகின்றனர். தமக்கிருப்பன போலவே சுக துக்கங்கள் பிறருக்கும் இருக்கும் என்று நினைக்கிறுர்கள். நீ மிகவும் தரித்திரன். ஆகையால் உனக்குக் கொடுக்கக் கருதுகிறேன். சாஸ்திரமும் இப்படியே இருக்கிறது. எவ்விதத்திலும் ஏழைக்கே கொடுக்கவேண்டும். செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. ஏனென்றுல், மருந்து நோயாளிக்கு எப்படிக் குணங்கொடுக்குமோ, அப்படி நோயில்லாதவனுக்குக் கொடுக்குமா ? ஆதலால், நீ இந்த ஏரியிலே முழுகிவந்து, காப்பை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போ' என்றது. ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தி ஆகையால், அவன், புலியின் பேச்சை நம்பி ஏரியில் இறங்கினவுடனே, உளையிலே புதைந்து காலைப் பிடுங்கிக்கொண்டு வெளியேறக் கூடாமல் திகைத்தான்.

புலி, அதைப்பார்த்து, ‘ பிராமணு ! பயப்படாதே. நான் உன்னைச் சேற்றினின்றும் எடுக்கின்றேன் ; சற்றிரு ’ வென்று சொல்லி, மெல்லெனப்போய் அவனைப் பிடித்துக் கொண்டது. அப்போது, பிராமணன், ‘ துட்டர்கள் வேதம் ஓதியிருந்தாலும், தருமநூல்கள் பார்த்திருந்தாலும் அவர்கள் வார்த்தையிலே நம்பிக்கை வைக்கலாகாது. ஏனென்றுல், ஒருவனது இயற்கைத் தன்மை ஒருபோதும் மாருது. இதனை முன்யோசனை செய்யாது, எனது பேராசையினுல், இந்தத் துட்டனுடைய ஆசை வார்த்தைகளை நம்பி மோசம்போனேன்,’ என்று நினைந்து வருந்திக்கொண்டிருக்கையிலே, அந்தப்புலி அவனைக் கொன்று தின்றது.

‘ ஆகையால், மிகவும் ஆலோசனை பண்ணி, எது செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும். அப்படி செய்தால், யாதொரு தீங்கும் நேரிடாது ’ என்று, சித்திரக்கிரீவன் சொன்ன வார்த்தையைக் கேளாது, ஒரு புரு கருவத்தோடு ‘ இப்படி ஆலோசித்தால் ஓர் இரையும் நமக்கு அகப்படாது. மேலும், வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதம் உள்ளவன், தீராத சந்தேகம் உள்ளவன், பிறர் பொருளால் பிழைக்கிறவன் இந்த ஆறுபேரும் துக்கத்தையே அனுபவிப்பார்கள் ’ என்று சொல்ல, அதைக் கேட்டு, புருக்களெல்லாம் தானியத்தைத் தின்னும் பொருட்டு, நிலத்திலிறங்கி வலையில் அகப்பட்டன. புருவரசு அதைப் பார்த்து, ‘ எல்லோரும் என்சொல்லைக் கேளாமற் போனுர்கள்; இப்போது நான் ஒன்றியாயிருந்து பலன் என்ன ? ’ என்று சொல்லி, அதுவும் வலையில் வந்து அகப்பட்டது.

பட்சிகள் வலையிலே சிக்கிக்கொண்டதை வேடன் பார்த்து, அவ்விடத்துக்கு வரத் தொடங்கினுன். அதைப் புருக்கள் கண்டு, சித்திரக்கிரீவனைப் பார்த்து, ‘ நீ சொன்ன புத்தியைக்கேட்டு, நாங்கள் உன்னை அவமானம் பண்ணினுேம். அதன் பலன் நிறைவேறிற்று ’ என்றன. அதற்கு, சித்திரக்கிரீவன், ‘ இப்போது இதைச் சொல்லிப் பயன் என்ன ? இதற்கு ஒருபாயம் இருக்கிறது. எல்லாரும் வலையோடு ஒருமிக்கப்பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும் ; அப்படி செய்தால் தான் உயிர் பிழைக்கலாம் ’ என்றது. இதைக் கேட்

டவுடனே எல்லாப்பறவைகளும் வலேயோடுகூட விரைவிலே பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டு, ‘ இவைகள் ஒரே மனதாய் வலேயை யெடுத்துப் போயின ; ஆயினும் இவைகளுள் ஒன்றுக்கொன்று சண்டை நேரிடும் ; அப்போது என் கையில் அகப்படும் ’ என நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது, புறுக்கள் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து போய்விட்ட பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான்.

இவ்வாச்சரிய மெல்லாம் பார்த்திருந்த லகுபதனன் என்னுங் காகம், அந்தப் புறுக்களின் பின்னே போயிற்று. கபோத ராசா தன் கூட்டத்தைப் பார்த்து, ‘ கண்டகிநதி தீரத்திலிருக்குஞ் சித்திர வனத்தில் என் சிநேகிதனுன இரணியகன் என்னும் எலியரசன் ஒருவனிருக்கிறுன். அவன் பல்லினுலே நம்முடைய வலேயை அறுப்பான். ஆகையால், அங்கே செல்லுங்கள் ’ என, இதைக் கேட்டு அவை அப்படியே சென்று எலியரசன் வலேயண்டை இறங்கின.

அப்போது ஏதாவது ஆபத்து நேரிடும் என்பதைக் குறித்துத், தன் வளேக்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளேயிருந்த எலியரசன் புறுக்கள் இறங்கின சப்தத்தைக்கேட்டு அச்சமுற்று அடங்கியிருக்கையில், சித்திரக் கிரீவன், ‘ சிநேகிதா ! இரணியகனே ! எங்களோடே ஏன் பேசவில்லே !’ என, இரணியகன் இதைத் தன் சிநேகிதனுடைய தீங்குரல் என்றறிந்து, சந்தோஷத்தோடு கூடச் சீக்கிரமாக வளேயினின்றும் வந்து, ‘ நான் புண்ணியவானுகையால் சித்திரக் கிரீவன் என்னும் நண்பன் என் வீட்டுக்கு வந்தான். இவ்வுலகத்தில் மனமொத்த நண்பனேடு உரையாடுவதிலும் ஆனந்தம் வேறெது ? ’ என்று உபசாரம் சொல்லிப் பிறகு அதனுடைய துன்பத்தைப் பார்த்து மிகவும் துக்கித்து, ‘ மித்திரா ! நீ எல்லாரினும் மிக்க சமர்த்தனுயிற்றே, உனக்கு இப்படிப்பட்ட காரியம் எப்படி நேரிட்டது ? ’ என, ‘ எந்தக் காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும் ! விதி வலியது. அதன் முன் யாருடைய உபாயம் நடக்கும் ! கடல் பெருகி மேலிட்டால் அதற்குக் கரையேது ! ’ என்று புறு கூறிற்று.

இரணியகன், 'இந்தப் பேச்சு மெய்யே; நூறு நாழிகை வழித் தூரத்திலிருந்து பொருள்களைத் தெரிந்துகொண்டு போகிற நீ இன்றைக்கு வேடன் வலையைப் பாராமற் சிக்கிக் கொண்டனையே, பார்! சந்திர சூரியர்களுக்கு ராகு கேதுக்களாற் பீடை வருதலும், யானையும் பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையே யாகும்; வேறல்ல' என்று சொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டிருந்த வலைக் கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது சித்திரக்கிரீவன், 'மித்திரா! முன்னே என் பரிவாரத்தினுடைய கயிற்றை அறு; பிறகு என் பாசத்தைத் துணி' என, அதைக்கேட்டு எலி, 'என் பல் மிகவும் மெதுவானது; அதற்குப் பலமுங் கொஞ்சம்; ஆகையால், இத்தனை பெயருடைய பந்தனைகள் எனக்கு எப்படி அறுபடும்? உன் தளையை அறுத்துப் பின்னர் என் சாமர்த்தியத்துக்குத் தக்கபடி அவர்களுடைய தளையையும் அறுப்பேன்' என, சித்திரக்கிரீவன், 'நல்லது, முன்னே இவர்களுடைய பாசத்தை அறு' என்றது. அதற்கு இரணியகன், 'தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும்' என, சித்திரக்கிரீவன், 'இந்த நீதி சரிதான்; ஆயினும், இப்படிப்பட்ட வேதனையினின்றும் பாதுகாப்பதற் காகவே இவர்கள் என்னை அரசனாக எண்ணுகிறார்கள். ஆகையால், என் பிராணனிடத்தில் இச்சையைவிட்டு இவர்களைக் காப்பாற்று' என்றது. அதைக் கேட்டு எலி, 'நீ பரம சாது. அடுத்தவர்களை ஆதரிக்கின்றவனாய் இருக்கிறாய்' என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துப் பின்பு, சித்திரக்கிரீவனுடைய கட்டையும் சேதிக்கலாயிற்று.

பிறகு, ஒன்றையொன்று தழுவிக்கொண்டு, பிரிய வார்த்தைகள் பேசின. சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடு தன்னிடத்துக்குப் போயிற்று.

1. *சொல்லும் தொடரும் :*

விபரீதம்	தருமநூல்	மித்திரன்
துராசை	ஆலோசனை	வேதனை
நித்தியதானம்	நதிதீரம்	பாதுகாப்பு

2. *சிந்தனைக்கு :*

1. 'ஒருவனது இயற்கைத்தன்மை ஒருபோதும் மாருது' :—உண்மை தானு ?

2. 'புத்திசாலிகளுக்கு வறுமை வருதல் தெய்வத்தின் மகிமையே' : இதுசரியா ?

3. 'வேதனைகளினின்றும் பாதுகாப்பதற்காகவே இவர்கள் என்னை அரசனுக எண்ணுகிருர்கள்' :—அரசாங்கத்தைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள் ?

3. *பயிற்சி :*

1. பிரித்தெழுது :

இறைத்திருக்கும்	உயிர்களிடத்து
வந்திறங்கின	நோயில்லாதவன்
தெரிந்தாலல்லாமல்	வருந்திக்கொண்டிருக்கையில்
பிராமணேத்தமர்	அதைக்கேட்டு
எள்ளளவாகினும்	ஒன்றையொன்று தழுவிக்கொண்டு

2. சேர்த்தெழுது :

பொன்+காப்பு	கிழவனுய்+இருக்கிறேன்
இ+எட்டு	அடித்து+தின்னுகிறது+என்ற
அ+புலி	எல்ல+உயிர்கள்+இடத்தும்
ஒரு+உபாயம்	உனக்கு+கொடுக்க+கருதுகிறேன்

4. *இலக்கணம் :*

மேலே கண்ட தொடர்களிலே இரண்டிரண்டு சொற்கள் சேர்ந்திருக்கின்றன அல்லவா ? இந்த சொற் சேர்க்கையை இலக்கணத்திலே புணர்ச்சி என்பார்கள். மழை பெய்தது என்று வருவது இயல்பு புணர்ச்சி ;

வாழை+பழம்	= வாழைப் பழம்	— 'ப்' தோன்றியது	இது விகாரப் புணர்ச்சி
பணம்+கொடு	= பணங் கொடு	— 'ம்; 'ங்' ஆகத் திரித்தது	
மரம் +வேர்	= மர வேர்	— 'ம்' கெட்டது	

படிக்கிறபோது கவனமாப் படித்தால், கேட்கிறபோது கவனமாய்க் கேட்டால் புணர்ச்சிகளைப்பற்றிய சங்கடங்களைத் தவிர்க்கலாம் வாழைபழம் ; கீரைகறி என்று தமிழன் சொல்லமாட்டான் அல்லவா ?

குறிப்புரை

தனிப்பாடல்

1. பழையனூர்க்காரிக்கு ஆடு வாங்கிக்கொடுக்க, வாதவன், வத்தவன், யாதவன் என்ற மூவரிடத்தும் போய், அவர்கள் கொடாதபடியினாலே, சேரமானிடத்துப் போய் ஔவை சொல்லிய வெண்பா.

2. புல்வேளூர்ப்பூதன் வரகரிசிச் சோறிட்டபோது ஔவை பாடியது.

வாட்டு - வாட்டற்கறி. புல்வேளூர், திருவண்ணாமலைத் தாலூகா பெண்ணை யாற்றங்கரையை அடுத்தது.

86994

3. இரண்டு நாயன்மார் விக்கிரகங்களைக் கன்னான் கவர்ந்தான்.

இராயர் - கிருஷ்ணதேவ மகாராசர் கி. பி. 1509—29; விசயநகர வேந்தர்.

8. ஆடம்பரக் கவி.

9. உழவு.

1.நீதிவெண்பா

ஆசிரியர் யார் என்பது அறியப்படவில்லை. சிறந்த நீதிகளை உணர்த்தும் வெண்பாக்களை யுடையது.

1. விடம் - விஷம்.

TB
031(6)
N49

2. *கல்வழி* (ஔவை பாடியதென்பர்)

1. போவிப்பம் - போஷிப்போம்.

3. *இனியவை நாற்பது*

கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய இதனை இயற்றியவர் பூதஞ் சேந்தனார். இனிய பொருள்களை உரைக்கும் நாற்பது வெண்பாக்களையுடையது.

1. ஊனம் - குறைபாடு; குற்றம்.
2. ஊன் - மாமிசம்.
3. எள் துணை.
4. ஒளி - கீர்த்தி.

4. *இன்னா நாற்பது*

கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய இதனை இயற்றியவர் கபிலர். இன்னாதன (—வேண்டாதன, விலக்கற் பாலன) வற்றை உரைக்கும் நாற்பது வெண்பாக்களையுடையது.

RTR/1191

NAVAYUGA VACHAKAM

FORM I

By

Rao Sahib K. ARUNACHALA GOWNDER

Publisher:

S. R. SUBRAMANIA PILLAI

TINNEVELLY JN.

[As. 12